
44328



# ஒரு உயிரின் குரல்

இந்திரா சௌந்தர்ராஜன்

# ஒரு
# உயிரின் குரல்

இந்திரா செளந்தர்ராஜன்

# 1

*எனக்கு பயமாக இருக்கிறது. நான் வெகு சீக்கிரம் இறந்து விடுவேன் என்று என் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே இருக்கிறது. அப்படி மட்டும் நடந்து விட்டால், என் மூன்று மகள்களின் கதி? என்னையே இந்த உலகமாக கருதும் என் மனைவி ஜானாவின் நிலை..? நினைக்கவே பயமாக இருக்கிறது. அப்படி ஒரு வேளை இறந்துவிட்டாலும், நான் என் குடும்பத்தை வழி நடத்த வேண்டும். அதற்கு வழியிருப்பதாக வால்பாறை மகிரிஷி கூறினார். அது..*

- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து..

**மா**தங்கி..

எப்படிடா இருக்கே கொழந்தே...?

கண்லேயே இருக்கடா நீ... வேளைக்கு சாப்பிடறியா?

ஹாஸ்டல் வாழ்க்கை, ஓட்டல் சாப்பாடுன்னு மெத்தனமா இருந்துடாதேடா.. அப்பா, அம்மா, அக்காக்களை எல்லாம் பிரிஞ்சிருக்கோமேன்னு நினைச்சு கவலைப்படாதே.

சேலத்துக்கும், மெட்ராஸ்க்கும் ஜஸ்ட் ஆறு மணி நேர இடைவெளிதானேடா... அதான் ஆயிரம் எக்ஸ்பிரஸ்

டிரெயின் ஓடறதே? மத்தபடி இந்த பிரிஞ்சு கிடக்கிற வாழ்க்கையும் உனக்கு நிறைய கத்துக் கொடுக்கும்.

நீ பிள்ளையா தான் பொறப்பே, ஆகையால மாதவன்கற பேரை உனக்கு ரிசர்வ் பண்ணி வெச்சிருந்தா உன் அம்மா. பொண்ணா பொறந்து மாதங்கியாகி அவளை ஏமாத்திட்டே..

ஆனா நான் ஏமாறலடா கொழந்தே..

நீ எந்த வகைலையும் ஒரு புருஷனுக்கு சளைச்சவ கிடையாது. அதை இந்த வாரம் நீ எழுதின கட்டுரையை பாா்த்தே தெரிஞ்சிண்டேன்.

உன்னோட ஆசிரியர் ரங்கராஜன்கூட, ஒரு மாதங்கி பத்து ஆம்பளை ரிப்போர்ட்டர்களுக்கு சமம்னு சொன்னதா எழுதியிருந்தியே.. படிச்சு பூரிச்சு போனேன்டா.

என்னவோ தெரியல கொழந்தே என் மனசுல இப்ப அடிக்கடி ஒரு சஞ்சலமும், மரண பயமும் ஏற்பட்டுண்டே இருக்கு. உங்களை எல்லாம் பாதியில விட்டுட்டு போயிடுவேனோன்னு பயமாவுக்கு இருக்கு. பங்காளிகளுக்குள்ள இங்க நடக்கற சொத்துச் சண்டையை நினைச்சா, இது எதுல போய் முடியுமோ தெரியல...

அதனாலேயே உன் அக்காக்களுக்கு வேகமா மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிருக்கேன். நல்ல இடமாவே பாா்க்கப் போறேன். அந்த கேஸ் ஜெயிச்சு சொத்து கைக்கு வரும். அதன் பிறகு பண்ணலாம்னு உன் அம்மா கூட சொல்லிப் பாத்தா.

அது வரும்போது வரட்டும். அதுக்காக தாமதிக்காதே 'பரமேஸ்வரா'ன்னு ஓர் உள்ளுணர்வு சொல்லிக்கிட்டே இருக்கு.

அப்புறமா கொழந்தே... இதை எல்லாம் நான் உன்கிட்ட மட்டும் தான் ஷேர் பண்ணிக்கிறேன். உன்னை விட்டா

என் டயரி. ஆகையால நீ இங்க வரும்போது இதை பத்தி பேசறதா இருந்தா தனிமைல பேசு. உன் அம்மா காதுல விழுந்துடப் போறது... அவதான் பூஞ்சையாச்சே? அன்னிக்கு என்தலை மேல பல்லி ஒண்ணு விழுந்துடுத்து, பஞ்சாங் கத்துல அதுக்கு பலன் மரணும்னும் போட்டிருந்தது. உன் அம்மா ஆடிப் போயிட்டா. உன் அக்காக்களும்.

அப்புறமா கொழந்தே.. ஒரு வேண்டுகோள். படிச்சிப் பிட்டு கலங்கவோ, கோவிக்கவோ கூடாது. சொல்லட் டுமா.. சொல்லிடறேன்.

ஒருக்கால்...

ஒருக்கால் தான்... தப்பித்தவறி உன்னைப் பார்க் காமலே நான் இறந்துட்டா என்ன பண்றதுன்னு தான் இந்தக் கடிதத்துல முந்திக்கறேன்.

அப்படி நான் இறந்துட்டா கொழந்தே நீதாண்டா எனக்கு கொள்ளி போடணும்!

பொண் குழந்தை, உரிமை கிடையாது, சாஸ்திர துரோகம் அப்படி இப்படின்னு யார் என்ன சொன்னாலும் சரி. நீ வந்து கொள்ளி போட்டா தான் என் கட்டை முழுசா வேகும். என்ன?

உன் அன்புள்ள அப்பா,
பரமேஸ்வரன்

அந்த நீண்ட கடித்தை படித்து முடித்தவளாக கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள் மாதங்கி.

பிரேக் டவுனாகி ஓர் ஓரமாக ஒதுக்கி நிறுத்தப்பட் டிருந்தது அந்த பஸ். எல்லோரும் இறங்கி சாலையில் பரிதவிப்போடு நின்று கொண்டிருந்தனர்.

அந்த கடிதத்தோடு ஒரு தந்தியும் அப்பா இறந்து விட்டதாக..

தந்தியையும், கடிதத்தையும் மாறி மாறிப் படிப்பவள் குலுங்கி குலுங்கி அழுகிறாள்.

பிறகு ஒரு முடிவுடன் இறங்கியவள் கண்டக்டரிடம் வேறு பஸ்ஸில் மாற்றிவிடச் சொன்னாள் தேம்பியபடி.. நீண்ட நேர காத்திருப்புக்குப் பிறகு, ஒரு பஸ்ஸில் இடம் கிடைத்தது. அவளுக்குள் தவிப்பு. அப்பாவின் முகத்தை யாவது பார்க்க முடியுமா?

வெரண்டாவில் கிடத்தப்பட்டிருந்தது பரமேஸ் வரனின் சடலம். தலைமாட்டில் ஜானகி பக்கத்திலேயே லட்சுமியும், ரேவதியும் அம்மாவை தாங்கியபடி அமர்ந்திருந் தார்கள்.

அவர்களின் அத்தை பையன் ஸ்ரீதரன்தான் ஓடியாடி ஆக வேண்டியதை கவனித்துக் கொண்டிருந்தான்.

ஐயர் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும் ஸ்ரீதரனைக் கூப்பிட்டு காதைக் கடிக்கிறார்.

"அம்பி நாழியாயிண்டிருக்கேடா"

"என்ன மாமா பண்றது. கடைசிப் பொண்ணு மாதங்கி வர வேண்டாமா?"

"போகட்டும்... பொண் கொழந்ததானே... ஆமா கொள்ளி போடப் போறது யாரு?"

"யார் போடணும்?"

"நன்னா கேட்டே போ... பிள்ளை இருந்தா பிள்ளை தான் போடணும். இல்லைன்னா கோவிந்தா கொள்ளி தான்."

"அப்படின்னா...?"

"வேற உரிமைப்பட்ட ஆண் உறவு யார் போட்டாலும் அது கோவிந்தா கொள்ளிதான். ஆமா யார் இருக்கா?"

''என்ன கேள்வி மாமா.. நான் இருக்கேனே..''

''நீயெல்லாம் போடப்படாதுடா உங்கப்பா இருக்காரா?''

''இருக்கார்... ஆனா அவரால் இங்கு வரமுடியாது?''

''ஏன்?''

''ஒரு கையும் காலும் அவருக்கு கொஞ்ச நாளா வரலை. அதான்.''

''அப்போ செத்தவரோட அண்ணா, தம்பிகள், அவர் பசங்கள்...?''

''இருக்கா... ஆனா யாரும் வரலை. சொத்துத் தகராறு அதான்..''

ஸ்ரீதரனின் சுணக்கம் ஐயரின் நெற்றியில் சுருக்கமாக விழுந்தது.

''சரி... நாழியாயிண்டேயிருக்கு. இன்னிக்கு ஏகாதசி திதி. அது போறதுக்குள்ள காட்டுல வெச்சு எரிச்சா போன உயிருக்கு வைகுந்தம் சித்திக்கும். மளமளன்னு ஆக வேண்டியதைப் பாரு..

''மாமா... மாதங்கி வந்துடட்டுமே..''

''கிழிஞ்சது போ. இருட்ட வேற ஆரம்பிச்சாச்சு. காக்காயன் சுடுகாடு என்ன பக்கத்துலயா இருக்கு. பகல்ல போகவே பயமா இருக்குமேடா..? நாலு மைல்னா! மள மளன்னு காரியத்தை பாரு. எப்படியும் இன்னும் இரண்டு மணி நேரமாகும் எரியிட, அதுக்குள்ளாற அந்தப் பொண்ணு வந்துட மாட்டாளா என்ன?''

ஐயர் அனத்திப் பிடுங்கி ஸ்ரீதரனை காரியத்தில் இறக்கி விட அவனும் அரைமனதாக இறங்க ஆரம்பித்தான்.

பரமேஸ்வரனின் தலையில் எண்ணெய் வைத்து

கேவிக் கேவி அழுதபடி லட்சுமியும் ரேவதியும் குளிப்பாட்டி விடுகின்றனர்.

பார்த்தால் இறந்த மாதிரியே தெரியவில்லை. ஏதோ புரண்டு படுத்து தூங்குகிறவராட்டம் தான் இருக்கிறார்.

நடுவில் ஸ்ரீதரன் ஆன மட்டும் ஐயரிடம் சொல்லிப் பார்த்தான். மாதங்கி வந்த மாதிரி தெரியவில்லை.

பரமேஸ்வரன் சடலம் காடு கிளம்பிவிட்டது.

ஒரு வழியாக அந்தப் பேருந்து, பஸ் ஸ்டாண்டை எட்டும்போது மணி பதினொண்ணரை. பகல் பொழுதில் ஒன்பது மணிக்கு கிளம்பியது. ஐந்து மணிக்கெல்லாம் வந்திருக்க வேண்டும். ஆறரை மணி நேரம் கூடிப்போய் பழி வாங்கிவிட்டது.

''ஆட்டோ...'' தாவி பிடித்தாள் மாதங்கி.

''வேகமா சுப்ரமண்யபுரம் போ.. எவ்வளவு பணம் வேணும்னாலும் தரேன்.'' அழுதபடி சொல்பவளை புரிந்து கொள்கிறான். அவனும் விரட்டுகிறான்.

வீட்டு முன் பதினைந்தாவது நிமிடம் வந்து சேர்கிறாள்.

இறங்கி பாய்கிறாள் அந்த இளம் பெண்.

''அப்பப்பப்பா..'' இதயம் நிஜமாலுமே தொண்டை வரை எகிறி கரணமடிக்கிறது.

''மாதங்கி...'' சகோதரிகள் ஓடி வந்து கட்டிக் கொள் கின்றனர்.

''என்னடி இப்படி பண்ணிட்டே?''

''பஸ் பிரேக் டவுனாகி சதி பண்ணிடித்து. ஆமா அப்பா உடம்பு எங்கே...?''

அவள் நாலாபுறமும் தனது பார்வையை சுழல விட்டு சுடிதார் துப்பட்டாவை கழுத்துக்குச் சுற்றிவிட, எதிரில் ஈரத் தலையை துவட்டியபடி ஸ்ரீதரன் தான் வந்தான்.

‘‘சாரி மாதங்கி.. உனக்காக முடிஞ்ச மட்டும் பார்த்தோம். உடம்பு நீர்விட ஆரம்பிச்சாச்சு. அதான்.. ஜஸ்ட். இப்பதான் சுடுகாட்ல இருந்து வரோம்..’’

‘‘நோாாா...’’ பொங்கி வழிந்து இடியாட்டம் வெடிப்பவள் சட்டென்று சமாதானமானாள். ஒரு புது முடிவின் போக்கு முகத்தில்.. அங்கிருந்து வெளியேறத் தொடங்கினாள்.

‘‘மாதங்கி எங்க...?’’

‘‘உம்... சுடுகாட்டுக்கு...’’

‘‘நோ.. நீ எல்லாம் அங்க போகக்கூடாது. அதுவும் இந்த நடுநிசில..’’ ஸ்ரீதரனின் கத்தல் பலனற்றுப் போனது. மயானம் நோக்கி தனியாக அந்தப் பெண் ஓடத் தொடங்கியிருந்தாள்..!

★ ★ ★

## 2

*இன்று ஓர் அதிசயத்தை வாழ்க்கையில் உணர்ந்தேன். வெளியே சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். நானும், மிஸ்டர் தாமசும் இன்று ஒரு ஆவியோடு பேசினோம். முதலில் இதை நான் நம்பவில்லை. ஆனால், அந்த ஆவி சொல்லிய சேதிகளை வைத்துப் பார்க்கும் போது நம்பாமல் இருக்க முடியவில்லை. இது எந்த அளவு உண்மை என்பதை நான் இறந்து பார்த்து பேசினாலன்றி பிறரோ.. ஏன் நானே கூட மனதார நம்புவது சிரமம்தான்..'*

- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து

**சே**லம் பெரிய நகரம்தான். சினிமா தியேட்டர்களும், ஸ்டார் ஹோட்டல்களும் நிறையவே கொழுத்துவிட்டன. இரவில்லை, பகலில்லை என்று ஜன நடமாட்டமும் கூடி விட்டது. இருந்தும் அணைமேடும் அதோடு இணைந்து கிடக்கும் காக்காயன் சுடுகாடும் பௌர்ணமியன்று கூட வெறிச்சோடித்தான் கிடக்கும். நீர்ப்பாங்கான இடம். எனவே திமுதிமுவென்று மரக்கூட்டம். முந்நூற்று அறுபது டிகிரி கோணத்திற்கும் நீண்டு விட்ட அதன் கிளைக் கைகள். அதன் துவாரங்களில் ஐக்கியமாகி விட்டிருக்கும் ஆந்தைகள் என்று அது ஒரு விநோதமான ஒரு வனச்சூழல். அங்கங்கே அபூர்வமாக தேவாங்குகளும் சோனிப்பார்வை பார்த்தபடி உச்சாணிக் கிளையில் உட்கார்ந்திருக்கும். அது

கீழே பார்க்கும் போது ஏதாவது சடலம் எரிந்து கொண்டிருந் தால், அதன் தீ நாக்கு வெளிச்சம் அந்த தேவாங்கின் கண் ணில் பட்டு பிரதிபலிப்பதை பார்க்கும்போது மரத்தின் மேல் உச்சாணிக் கிளையில் இரண்டு கருநீலப்புள்ளிகள் நம்மையே பார்ப்பது போலவும், பார்வையைத் திருப்பினாலும் பார்க்கு மிடமெங்கும் அந்தப் புள்ளிகள் மிதந்து வரும். பெரும்பாலும் மயானத்தான் இரவில் அங்கு தங்குவதில்லை. எத்தனை சடலம் வந்தாலும் எரிப்பில் போட்டு விட்டு காலையில் வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று அவன் வெளியேறி விடுவ துண்டு.

சில சமயங்களில் இருக்க நேர்ந்து, அவன் காதில் விழுந்த சில விசேஷ சப்தங்களில் அவனே மிரண்டும் போன துண்டு.

வீட்டுக்குள் வளரும் பூனை விசுக்கென்று தாண்டிச் செல்கின்ற மாதிரி ஒரு புகைமூட்டம் போவதையும், கோடி முனைச் சமாதி ஒன்றிடமிருந்து மிக மிகச் சன்னமான குரலில் நெஞ்சைப் பிசையும் ஒருவகை ஒப்பாரி முனகலையும் அவன் கேட்டதுண்டு.

அந்த மாதிரி தருணங்களில் இடுப்பில் கட்டியிருக்கும் ஈச்சநாரி வேரையும், ஜக்கம்மாள் தாயத்தையும் இறுக்கப் பற்றிக் கொண்டும், அய்யனார் சிந்து பாடிக்கொண்டும் மயான வாசலுக்கு போய்விடுவான். கைவசம் பிரம்பும் வைத்திருப் பான்.

சமயத்தில் வாசல் வரை காலிரண்டின் ஊடே நாய்க் குட்டி ஒன்று புகுந்து புகுந்து வருகிற மாதிரி ஒருவித உரசலும் உச்சந்தலை முடியை திடீர் என்று யாரோ சீண்டி இழுத்த மாதிரியெல்லாமும் இருக்கும்.

''ஏய்ய்... யாரது? வெளுத்துடுவேன் ஆமா. இது அய்யனார் பிரம்பு. எஞ்சாமி பிரம்பு வந்தா தெரியும் கிட்ட''

என்று 'விய்ய் விய்ய்க்' என்று அதைக் கொண்டு சிலம்பாட்டக்காரன் ஊடு கட்டுகிற மாதிரி சுழற்றவும் செய்வான்.

அப்படி ஒரு பயத்தாலடிக்கும் அந்தச் சுடுகாட்டில் பரமேஸ்வரன் கிட்டத்தட்ட அரைபாகம் வெந்து விட்டார். பெரும்பாலும் பருத்த சரீரங்கள் வேகமாக வெந்துவிடும். இந்த எலும்பும் தோலுமானது தான் நெருப்புக்கு அதிகம் வேலை வைக்கும். எரியும்போது விசுக்கென்று எழுவதும். சடசடவென மூட்டு எலும்பு பாகத்தில் இருந்து ஒருவித சப்தம் கேட்பதெல்லாம் மெலிந்த பிரேதங்களிடம் தான்...

இப்படிப்பட்ட சரீரங்களை பருத்த கழியால் தட்டித் தட்டி படுக்க வைத்து எரித்து முடித்தாக வேண்டும்.

"நெஞ்சு கொள்ளாத ஆசைகளோடு செத்து வெச்சு செத்தும் உசுரை வாங்குதீகளே..." என்று மயானத்தான் இந்த மாதிரி உடல்களைப் பார்த்து சலித்துக் கொள்வதுண்டு.

நல்லவேளை பரமேஸ்வரன் சடலம் அப்படிப் பாடாய் படுத்தவில்லை. மயானத்தானும் காலையில பார்த்துக் கொள் ளலாம் என்று போய்விட்டான் போலும்.

புகை மூட்டத்தேடு வெந்நீர்பானை அடுப்பாட்டம் அடக்கமாய் எரிந்து கொண்டிருக்கிறது.. மேலே அமுக்கி மூடிய எரி மூட்டையிலிருந்து புளியான் விறகு வரை எல்லாமே பஸ்பமாகி உடம்பின் கொழுப்பில் தீ பரவி திகு திகுப்பு காட்டிக் கொண்டிருக்கிறது.

மயானப் பாதையில் மாதங்கி ஓடி வந்து கொண்டிருந் தாள். சுடிதார் துப்பாட்டா வழியிலேயே எங்கோ விழுந்து விட்டது. பார்ப்பதற்கு மராத்தானில் ஓடும் ஓட்டப் பந்தய வீராங்கனையாட்டம் தான் இருந்தாள்.

மனசு முழுச்சு பரமேஸ்வரன் நிரம்பி நின்று கொண்டு 'வாடா கொழந்தே.. வா... வா!' - என்று அழைக்கிறாரோ?

சரசரவென கங்கு பிடித்த விறகுகள் பக்கவாட்டில் விலகிச் சரிய ஓடிவரும் மகளை எழுந்து வரவேற்க ஆசைப் பட்ட மாதிரி பரமேஸ்வரனின் சடலம் சற்றே எலும்புகளின் நொறுங்குதலோடு எழுந்து அமரத் தொடங்கியது.

நெருங்கிவிட்ட மாதங்கிக்கு அது துளி கூட அச்சத் தையோ, பயத்தையோ தரவில்லை.

''ஐய்யோ அப்பா...'' இப்படியா உங்களை இந்த நெருப்பு சாப்பிடப் பார்க்கும். பாழாய்ப் போன நெருப்பே அணைந்து போ..' என்கிற மாதிரி கிட்டே நெருங்கி நின்று இமைக்கக் கூட மறந்தவளாக பார்த்தாள்.

'மார்பில் மூச்சிளைப்பு.. கழுத்தில் வியர்வை வாய்க் கால், கலைந்த தலைமுடிகளிடம் மெலிதான காற்றின் நீவல்.'

இத்தனையோடும் நின்று கொண்டேயிருந்தாள். 'என்னடா கொழந்தே வேடிக்கை பார்க்கறே... எத்தனை தான் நான் எரிஞ்சாலும் நீ போடப்போற கொள்ளிதான் என்னை முழுசா எரிக்கும்.'

மனதிற்குள் புகுந்து பரமேஸ்வரனே சொல்வது போல் ஒரு பிரமை. சட்டென்று குனிந்து ஒரு விறகுத் துண்டை எடுத்து அதில் தீயைப் பிடித்து சடலத்தின் மேல் போட அதுவரை அமர்ந்த நிலையில் இருந்த அந்தச் சடலம் நான்கு கால்களை இழக்கும் கூம்புக் கூரை எப்படி தரை தட்டின மாதிரி விழுமோ, அப்படியே கீழே நொறுங்கி விழுந்து நாலாபுறமும் பரவி எரியவும் ஆரம்பித்தது.

''அய்யோ அப்பா...'' உதட்டில் வெடிப்பு கண்களிரண் டிலும் ஆற்று மதகாட்டம் கசிவு.

நின்று கொண்டேயிருந்தாள். 'நடுநிசி நேரம். நின்று கொண்டிருப்பது மயானம். தானொரு கன்னிப் பெண்' என்று எந்த உணர்தலுமில்லை. மாறாக, 'அப்பா இப்படி

எரிகிறாரே... ஓர் அன்பு இப்படி எரிகிறதே?' என்று கண்ணைப் பிழியும் கசிவு.

பக்கவாட்டு மரக்கிளையின் உச்சியிலிருந்து ஆந்தையும், தேவாங்கும் இப்படி ஒரு பெண் நின்று அழுவதை ஓர் அதிசயமாகக் கருதி தலையைத் தாழ்த்தி நோக்குகின்றன. மற்றபடி காதை பம்மென்று அழுத்தும் வேறெங்குமில்லாத அமைதித்தன்மை! நடுவில் எப்பொழுதும் கேட்கும் தொலைதூரத்து அழுகை போன்ற சப்தமும் மிகுந்து வந்து மிக மெலிதாய் காதில் மோதத் தொடங்குகிறது. இறந்து போன ஒரு பிள்ளைக்காக ஒரு தாய் ஒப்பாரிச் சிந்து பாடுகிற ராகத்தில்.. சில சங்கல்பங்கள் பூசைகளுக்காக தலைமேல் குறளியை கட்டிக் கொண்டு குடுகுடுப்பைக் காரன் ஒருவனும் மயானத்தின் பின்பாகத்து புதர் ஒன்றில் ஊடுருவி உள் நுழைய ஆரம்பித்திருந்தான்.

அப்பொழுது தான் கிசுகிசுப்பான அந்தக் குரல் மாதங்கி காதில் மோதத் தொடங்கியது.

‘‘கொழந்த நான் இயல்பாச் சாகலடா! என்னைக் கொன்னுட்டாங்க...’’.

★ ★ ★

# 3

*எனது உறவுகள் முன் போல இல்லை. மிக மாறி விட்டார்கள். பணம் பணம் என்று அலை கிறார்கள். இது ஒருவனிடம் அதிகம் இருந்தாலும் ஆபத்து. குறைவாக இருந்தாலும் ஆபத்து. நான் அதிகபட்ச ஆபத்தை சந்திக்கப் போவதாக வக்கீல் இன்று கூறினார். மேட்டூர் காவிரியை ஒட்டிய காடும் கழனியும் கோர்ட்டில் எப்படியும் என் பக்கம் தீர்ப்பாகிவிடுமாம். பங்காளிகள் வக்கீலுக்கே விலை வைக்கப் பார்த்து ஜட்ஜ் வரை லஞ்சம் கொடுக்க முயன்றதெல்லாம் தெரிய வந்தது.. கடவுளே!'*

- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...

அந்தக் குரல்...

அந்தக் குரல்..!

எங்கிருந்து கேட்டது...? அப்பாவின் குரலைப் போலவே இருந்ததே.. அப்பாதான் செத்துப்போய் அதற்கும் மேலாக இதோ எரிந்தும் கொண்டிருக்கிறாரே..

மாதங்கி அந்தக் குரலில் நிமித்தம் நாலாபுறமும் பார்த் தாள். சிதை வெளிச்சம் ஓர் ஐம்பது மீட்டர் தூரத்துக்கு வெளிச் சத்தை வீசவிட்டிருந்தது.

அந்த நொடிப்பொழுதில், தான் தனியாக இப்படி மயா னத்தில் நின்று கொண்டிருக்கும் பிரக்ஞையும் அவளுக்கும் ஏற்பட்டது போல அந்த சின்னப்பெண் மிரள ஆரம்பித்தாள்.

''கொழந்தே நின்னது போதும், போயிடு. நான் அப்புறமா உங்கிட்ட பேசறேன்..''

திரும்பவும் காதோரமாக அதே குரல்!

''யாரு...அப்பாவா?.. அப்பா..'' அவளது குரல் உடைகிறது. அதில் தேடலின் உச்சபட்ச வேட்கை.

''அப்பா...''

''இனி நீ இங்க இருக்கறது ஆபத்து. போயிட்றா கொழந்தே.''

''அப்பா.''

''போடா கொழந்தே..''

''யாரோ கொன்னுட்டாங்கன்னேளே...?''

''மொதல்ல போடா..''

''ஏம்பா?''

''போடா.. போடா.. போடான்னா..''

அந்தக் குரலில் ரௌத்திரம் பிடித்தது போல் ஓர் உச்சமான ஓங்கல்.

மாதங்கி அடுத்த நொடி திரும்பி ஓட ஆரம்பித்தாள்.

ஒரு சமாதி மேட்டை தன் வலக்கால் உயர்த்தி தாண்டும் போது அந்த மயானத்தின் உள் பிரவேசித்து விட்ட குடுகுடுப்பைக்காரனும் ஆச்சரியம் குறையாதபடி அந்தக் காட்சியை பார்த்தான். அவனைப் போன்ற பூதபிசாசுகளை நம்பிப் பிழைப்பு நடத்துபவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கன்னிப் பெண்ணுமே ஒரு பொக்கிஷம்.

அவர்களது பூஜைகளிலும், உபாசனைகளிலும் கன்னிப் பெண்களை விதவிதமாக பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு கன்னிப்

பெண்ணை வசப்படுத்தி மயானம் வரை தள்ளி வந்து அவளை அமர்த்தி வைத்து பூஜிப்பதெல்லாம் அத்தனை சுலபமானதா என்ன?

அதனாலேயோ என்னவோ ஓடிப்போகும் மாதங்கி அவன் மனதில், 'அடடா சற்று முன் வராமல் போய்விட்டோமே?' என்கிற கேள்வியை எழுப்பினாள்.

டார்ச்சின் வட்ட ஒளி மயானப் பாதையில் பட்டுப் பிரள ஸ்ரீதரனும், நட்டு எனும் நடராஜன் மாமாவும் அந்த மயானப் பாதையில் மாதங்கியைத் தேடி வந்து கொண்டிருந்தார்கள்.

நட்டு மாமா மறை கழண்டவராட்டம் உளறிக் கொண்டே வந்தார்.

"இந்தப் பொண்ணுக்கு ஆனாலும் நெஞ்சழுத்தம். பெண் பிள்ளைங்க மயானத்தை நினைச்சாவது பாக்க லாமோ...? பாருங்க.. இந்த ராத்திரியில நம்மள இப்படி அல்லாட விடறா.. ஸ்ரீதர்.. இன்னிக்கு அமாவாசையோ, பாட்டிமையோ இல்லையே..?"

"அதெல்லாம் எனக்கு தெரியாது மாமா..."

"பயமா இருக்குடா.. நேரம் என்ன இப்போ?"

"ஒண்ணு அஞ்சு!"

"ஐய்யோ... ஆவிகள் பிரண்டு படுக்கற நேரம்."

"பேசாம வாங்க.. என்னமோ பக்கத்துல இருந்து பாத்தா மாதிரி..."

"இப்ப பாக்கத்தானே போறோம். பகவானே..

ஓம் மந்த்ரேச மகாபாகா... சத்ருவாக் ஸ்தம்பனாயச!

கார்ய ஜனபதே யுத்தே ஜெயம் தேஹி மமோப்ரபோ.."

ஓம் கரீ சவர்ண ரூபாய.. கணேசாய நமோன் நம.."

"என்ன ஸ்லோகமா?"

"ஆமாம்.. காட்டுக் கணபதி ஸ்லோகம். காத்து கறுப்புகள் கிட்ட இருந்து நம்ம காப்பாத்தப் போற கவசம்."

"இவ்வளவு பயத்தோட எதுக்கு நான் கூப்பிட்ட உடனே கிளம்பினேள்?"

"சொன்னா நம்புவியா?"

"முதல்ல சொல்லுங்கோ." ஸ்ரீதரன் டார்ச் உதவியோடு நாலாபுற துழாவலுடன் நடந்தபடியே பேசினான்.

இடுப்பில் வேட்டி.. கழுத்தை மறைத்த நெக் பனியன். குளித்த தலையை வாரவேயில்லை. அர்த்த ராத்திரியில் என்ன தலை சீவல் என்று விட்டு விட்ட கலைவு. ஆனாலும் பார்க்க வாரிக்கட்டும் இளமை. அவனது மீசை ஒன்று போதும் மொத்த முகத்துக்கே ஒரு மதிப்பை வாங்கித் தந்துவிடும்.. இந்தக் காலத்து இன்டர்நெட் சிந்தனை. எனவே, ஆவி பயமெல்லாம் வெறும் கிராஃபிக்ஸ் விளையாட்டு என்கிற கேலியான எண்ணம். எனவே, நட்டு மாமா போல பயமோ, படபடப்போ இல்லை. ஸ்லோகம், மந்திரம் என்கிற பற்றுதல் இல்லை.

"உக்குக்குக்கும்.." நட்டு மாமா சொல்ல ஆயத்தமாகி விட்டு பின்பு திரும்பவும் ஸ்லோகம் சொல்ல ஆரம்பித்தார்.

"என்ன மாமா.. நம்புவியான்னுல்லாம் கேட்டேளே.. உம் ஒட்டுங்கோ... சாரி சொல்லுங்கோ.."

"பயலே.. பாத்தியா கிண்டல் பண்றே.. ஆளை விடு நான் எதையும் சொல்லலை."

"அட சும்மா சொல்லுங்கோ மாமா.."

"சரி... நீ நம்பினாலும் நம்பாட்டாலும் சரி சொல்லிப்

பிடறேன். பொதுமா ஓர் உசுர் போன வீட்ல அன்னிக்கு ராத்திரி அந்த போன உசுர் ஆசாபாசம் குன்றாம திரும்ப வந்து அலையும்னுவா. ஆனா நான் நேத்து வரை பாத்ததில்ல. இன்னிக்கு பாத்துட்டேன்.''

நட்டு மாமா திக்கித் திணறி மிடறு விழுங்கி ஒரு மாதிரி சொல்லி முடிக்கவும் அவர் பக்கம் டார்ச் ஒளியோடு திரும்பினான் ஸ்ரீதரன்.

''சத்யமா ஸ்ரீதரா... செத்துப் போன பரமேஸ்வரன் அந்த வீட்டைச் சுத்திச் சுத்தி வந்ததை நான் பாத்தேன். நான் இப்ப சில உபாசனைல்லாம் பண்றேன். லட்சக்கணக்கான தடவை சில மந்திரங்களை அப்யாசிக்கிறேன். கல்யாணம் பண்ணிக் காத பிரம்மச்சாரியாவும் இருக்கறதால ஸ்கலிதபலம் எனக்கு அதிகம். அதனால தானோ என்னவோ என் கண்ணுக்கு பரமேஸ்வரன் தெரிஞ்சான். பொணத்த எடுத்த பிறகு தட்டுப் படலை. அதான் அந்த வீட்ல தங்க பயமா இருந்தது.''

நட்டு மாமா பொய் பேசுகிற மாதிரி தெரியவில்லை. அதற்காக அதை உண்மை என்று எப்படி எடுத்துக் கொள் வது? பொதுவில் இந்த மரணமும் அதன் மறுபக்கமும் காலங் காலமாக புதிர்க்கோட்டைகளாகவே தானே இருக்கின்றன? இதைப் பற்றித்தான் யார் வேண்டுமானாலும், எதை வேண்டு மானாலும் சொல்லலாமே..?

ஸ்ரீதரன் நட்டு மாமாவின் கருத்தைப் பற்றி நினைத்த போது, மூச்சு முட்ட மாதங்கி அவர்களைக் கடந்து ஓடத் தொடங்கியிருந்தாள்.

''ஏய் மாதங்கி...'' நல்லவேளை ஸ்ரீதரன் உணர்ந்து குரல் கொடுக்க நின்று திரும்பினாள்.

''எங்க ஓடறே.. உன்னைத் தேடி தான் வந்துகிட் டிருக்கோம். என்ன பொண்ணு நீ? இப்படியா வீட்ல

நுழைஞ்சதும், நுழையாததுமா சுடுகாட்டுப் பக்கம் வருவே. ஸ்டுப்பிட்'' அவனிடம் கோபக்குமுறல்.

''சரி சரி.. திரும்பி நட! நல்லவேளை தப்பிச்சோம் சுடுகாட்டுக்குள்ள பிரவேசிக்கிற அவசியமில்லாம போயிடித்து.. நடங்க.. நடங்க...''

நட்டு மாமா பரபரக்கிறார். மாதங்கியும் சேர்ந்து நடக்கத் தொடங்கியபோது, திரும்பவும் அந்தக் குரல் அவள் காதில் ஒலிக்கத் தொடங்கியது.

''கொழந்தே.. இந்த நட்டுவை நம்பாதே!''

★ ★ ★

# 4

*என்னைக் கொல்ல என் பங்காளிகள் திட்டமிட்டிருப்பதாக ஒரு மொட்டைக் கடிதம் இன்று வந்தது. அதை நான் ஜானகியிடமோ, லக்ஷ்மி, ரேவதியிடமோ சொல்லவில்லை. சொன்னால் தாங்க மாட்டார்கள். அப்படி என் தலையில் எழுதியிருந்தால் யாரால் அதை மாற்றி விட முடியும்? ஆனால், ஒருக்கால் அப்படி மட்டும் நடந்து விட்டால் என் ஆன்மா அடங்காது. அடங்கவே அடங்காது. என் நெஞ்சும் வேகாது. இது பற்றி மாதங்கியிடம் தான் பேச வேண்டும்.*

- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து..

**மா**தங்கிக்கு பொட்டில் இடித்தது. காதில் திரும்ப விழுந்த குரலால் உளைய ஆரம்பித்தது.

நல்ல கரி இருட்டு.

ஸ்ரீதரனின் டார்ச் வெளிச்சம் மட்டும் பாதை காட்டு கிறது. இதில் எத்தனை தான் சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும் தெரிய வேண்டியது தானே தெரியும்.

''என்ன மாதங்கி.. நட!'' ஸ்ரீதரன் அவள் மேல் வெளிச் சம் உருட்டுகிறான். அவளது துழாவலை பார்த்து,''யாரைத் தேடறே?'' என்று கேட்டான்.

''ஸ்ரீ.. உன் காதுல இப்ப ஏதாவது குரல் விழுந்ததா?'

''குரலா?''

''ஆமாம்.. அப்பா குரல்.''

''என்ன ஏதாவது பிரமையா.. முதல்ல நட! இது நின்னு பேசற இடமில்ல.''

''ஆமாண்டி குழந்தே.. அப்பா குரல் அது இதுங்கறே நட நட.. உனக்கு இந்த துணிச்சல் கூடாது.''

நட்டு மாமா ஸ்ரீதரனுக்கு வக்காலத்து வாங்கினார்.

**வீடு!**

எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருக்க, தனி யறை ஜன்னல் முன் மாதங்கியை எதிர்நோக்கி ஜானகி நின்ற வண்ணமிருந்தாள். ரேவதி வாசல் படியருகில்.. லக்ஷ்மி வீதியில்..

சொல்ப உறவுக் கூட்டம்.

''ஸ்ரீதரனும், நடராஜ் மாமாவும் போயிருக்காங்கள்ல.. நீங்க உள்ள வாங்க. எப்படியும் கூட்டிண்டு வந்துடுவாங்க.''

''அவ வந்த பிறகு அப்படியே உள்ள சேக்காதீங்க. தலை முடில நாலப் பிடிங்கி பொசுக்கிட்டு, கரித்துண்டை கைல குடுத்து தலைய சுத்திப் போடச் சொல்லிட்டு கால கழுவிகிட்டு உள்ள வரச் சொல்லுங்க..''

குற்றாலத் துண்டு ஒன்றை தரையில் விரித்து அதன் மேல் சயனித்திருக்கும் அரைத்தூக்கத்திலிருந்த கிழடு ஒன்று சாங்கியம் சொல்கிறது.

ஹாலில் பரமேஸ்ரன் படம் மாலையிடப்பட்டு..

முன்னால் மண் பானையில் வெள்ளைத்துணி போர்த் திய நிலையில் தண்ணீர். ஊதுவத்தி அவிந்து அடங்கிக் கிடக்கிறது.

நடுவில் ஸ்ரீதரன் குரல் கேட்கத் தொடங்கியது.

''வந்துட்டா.. வந்துட்டா..'' அக்காக்கள் படபடக்க ஜானகி அறையை விட்டு வெளியில் ஓடி வந்தாள்.

மளமளவென்று உள்ளே நுழையப் பார்த்த மாதங்கியை கிழடு சொன்னபடி தடுத்து, தலைமுடியைப் பிடுங்கினாள் பெரியவள் லக்ஷ்மி. சிறியவள் ரேவதி கரித்துண்டு ஒன்றை உள்ளங்கையில் புதைத்தாள்.

''எதுக்குடி இதெல்லாம்..?''

''முதல்ல தலையை சுத்திப் போடு.. இந்தா தண்ணீர்.. கால் கழுவு..''

''உனக்கு இந்த தைரியம் கூடாது மாதங்கி. அம்மா துடிச்சு போயிட்டா, ஏதாவது ஆயிருந்தா என்னடி பண்றது?''

எல்லாம் கால் கழுவும்போதே சொல்லப்பட மாதங்கி மௌனமாக உள்ளே நுழைந்தாள்.

எதிரில் அம்மா.

பார்த்த க்ஷணம் ஓடிப்போய் கட்டிக் கொண்டாள். அழுகையின் பீறிடல் இரவின் அமைதியை உலுக்கி எடுத்தது.

''எப்படி ஆச்சு... எப்படிம்மா ஆச்சு?''

''இப்ப கேள்.. நாயே இப்படியா சுடுகாட்டுப் பக்கம் வந்ததும் வராததுமா ஓடுவே?''

''ஐயோ இதையே எத்தனை தடவை சொல்வீங்க. அப்பாவுக்கு கொள்ளி போடப் போனேன்.''

''பொம்பளப்புள்ள.. கொள்ளி போட்டியா?''

''அப்பா ஆசை அது. அதான் போடப் போனேன். என் கேள்விக்கு பதில் சொல்லுங்க. அப்பா எப்படி இறந்தார்..?''

''என்னத்த சொல்ல..? சாப்பிட்டுட்டு உக்காந்தவர் தான். வெத்தலை மடிச்சு போட்டுகிட்டு இருக்கும்போதே போயிட்டார்.''

''ஹார்ட் அட்டாக்?''

''அப்படித்தான் டாக்டர் சொன்னார்..''

''ஆமா கூட யார் இருந்தா அப்ப..?''

''நான் இருந்தேன் மாதங்கி..'' நட்டு மாமா குரல் குறுக்கில் புகுந்தது.

''நீங்களா..?'' மாதங்கியிடம் அசாத்ய ஆச்சரியம்.

''ஆமாம்மா.. பல வருஷமா இந்தப் பக்கமா வராதவன் நேத்து வந்தேன். நான் வந்த நேரம் எல்லாம் சமாதான மாகி நல்லவிதமா முடியும்னு நினைச்சேன். ஆனா, பரமேஸ் வரன் இப்படி நம்மை விட்டுப் போவான்னு துளிகூட எதிர் பார்க்கலை.''

''நீங்க எதுக்கு வந்தீங்க?''

''அதான் சொன்னேனேம்மா. சமாதானம் பண்ணிக்க தான்.''

''என்ன சமாதானம். புடலங்கா சமாதானம். காசும் பணமும்தான் பெரிசு. உறவும் பாசமும் சுண்டைக்காய்ன்னு சொல்லிட்டு கோர்ட்ல கேஸ் நடக்கும்போது என்ன சமா தானம் பேச இருக்கு?''

மாதங்கி நடுக்கூடத்தில் நின்று நரம்பு புடைக்க கத்தி னாள்.

''எல்லாம் பிறகு பேசிக்கலாம். முதல்ல நீ ஏதாவது சாப்பிடு. போ.. முதல்ல போய் குளிச்சிட்டு வா மாதங்கி..''

ஸ்ரீதரன் இடையிட்டுத் திசை திருப்பப் பார்த்தான்.

''ஆமாம்மா... மணி என்ன பாத்தியா? ஒண்ணரை! காலைல பால் விடப் போகணும்மா. சீக்கிரமா போகலைன்னா எலும்பை ஓரம் கட்டிட்டு அடுத்து பொணத்த போட்டுடுவாங்க.''

''ஸ்ரீ காலைல நானும் வரேன். எத்தனை மணிக்கு போகணும்.''

''நோ... இனி நீ அந்தப் பக்கமே போகக்கூடாது. அதெல்லாம் எங்க வேலை.''

''இல்ல ஸ்ரீ.. என் அப்பாவைப் பொறுத்தவரை நான் ஓர் ஆண்பிள்ளை. நான்தான் பால் தெளிப்பேன். உங்களுக்கு தெரியாது. அவர் எனக்கு எழுதின கடிதங்களைப் படிச்சீங்கன்னா புரிஞ்சுப்பீங்க.''

''அய்யோ மாதங்கி.. சுடுகாட்டு விஷயம் ஒண்ணும் சாதாரண விஷயமில்ல.. பெண்கள் அங்க பிணமாத்தான் நுழையலாம்.''

''போடா... சந்திரனுக்கு போய்ட்டு வந்துட்டா பெண். வெட்டிச் சாஸ்திர கதை பேசறியே. ஐ வில் கம்.. ஐ வில் கம்..''

அந்த இரவில் மாதங்கி காட்டிய தீவிரம் எல்லோரையுமே திகைப்பில் தான் புதைத்தது.

குளித்து முடித்து ஒரு டம்ளர் பாலை மட்டும் குடித்து விட்டு அப்பா படம் அருகே சென்று அமர்ந்தாள் மாதங்கி.

''மாதங்கி வா.. வந்து படு காலைல பாத்துக்கலாம்.''

''இல்லக்கா.. என்னக்கா அப்பா இப்படி நம்மை ஏமாத்திட்டார். என்னால நினைச்சே..'' வார்த்தையை முடிக்க முடியாமல் நிலம் பிளந்த மாதிரி வெடித்தாள்.

"ப்ளீஸ்.. வா! வான்னா.." பெரியவள் லக்ஷ்மி பிடித்து இழுத்துச் சென்று தன் அருகில் தலையணை ஒன்றைப் போட்டு படுக்கச் சொல்ல, மாதங்கியும் உறக்கம் பிடிபடாத படி படுக்க, மல்லாந்த நிலையில் பக்கத்து சுவர் ஷெல்பில் அப்பாவில் ஆசைக்குரிய புத்தகங்கள். அவற்றின் மேல் அந்த டைரி!

'நான் மனம் விட்டுப் பேசுவது உன்னிடமும், என் டைரியிடமும்தான்' என்று அப்பா கடிதத்தில் குறிப்பிட்டது ஞாபகத்துக்கு வரும்போது யாரோ உந்தித் தள்ளியது போல் அந்த டைரி பொத்தென்று அவள் மார்பு மேல் விழுந்தது.

★ ★ ★

# 5

*'சூனியமெல்லாம் சாத்தியமில்லை. அது ஒரு குரூரக் கற்பனை என்றார் டாக்டர் சாண்டில்யன். தனக்கு சூனியம் வைக்கச் சொல்லி ஒரு காலத்தில் தான் பகிரங்க சவாலே விட்டதாகவும், இதுவரை ஒருவர்கூட வரவில்லை என்றும் சொன்னார். எனக்கு தெம்பாக இருந்தது. ஆனால், சாஸ்திரங்களில் தேர்ந்த சந்தான கோபாலச்சாரி ஜாதகத்தில் இடமிருந்தால் சூனியம் வைக்க முடியும். அது ஓர் அருளுக்கு எதிரான இருள் விளையாட்டு என்ற போது பகீரென்றது.'*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...*

பொத்தென்று விழுந்த டைரி குறிப்பிட்ட ஒரு பக்கத்தை காட்டியபடி மாதங்கி மார்பு மேல் படபடக்கிறது.

அப்பா டைரியோ என்று நினைத்த க்ஷணத்தில் அது மேலே விழுந்த விதத்திலும், குறிப்பிட்ட பக்கம் திறந்து கொண்ட விதத்திலும் மாதங்கியிடம் ஆச்சரியப் பிடுங்கல். நடுவில் ''லைட்டை அணைச்சுட்டு படு மாதங்கி..'' எனும் லக்ஷ்மியின் முணுமுணுப்பு அவள் தூங்கத் தயாராகிவிட்டதை உணர்த்துகிறது.

அம்மா தூங்கவில்லை. தூக்கம்தான் வருமா என்ன? மற்றவர்கள் அங்கங்கே படுக்கையில் நெளிந்து கொண்டிருக் கின்றனர். செத்த சோகம் இத்தனை சீக்கிரமாகவா மனிதர் களை விட்டுவிடும்?

மாதங்கி ஆச்சரியம் குன்றாதபடி டைரியை கையில் பிடித்தபடி எழுந்து அமர்ந்தாள். கோலிபல்ப் வெளிச்சம் பட்டு டைரியின் பக்கத்து எழுத்துக்கள் மாதங்கியின் மனதைக் கொத்தத் தொடங்கின.

'பாவம் என் தங்கை கணவன் ராமசேஷன். இன்று அவன் கால் கைகள் இழுத்துக் கொண்டு விட்டன. வயோதிகத்தில் எல்லோரையும் தாக்கும் ஆர்த்ரைடிஸ் பிராப்லம் என்றுதான் நானும் முதலில் நினைத்தேன். ஆனால், தபாலில் எனக்கு வந்த கடிதம் அது அப்படி இல்லை என்று சொன்னது. கேஸ் விஷயத்தில் ராமசேஷன் என் குடும்பத் துக்கு பெரிதும் உதவுவதாலும், அவன் மகன் ஸ்ரீதரனையே என் இளைய மகள் மாதங்கிக்கு தர பிரியப்படுவதாலும், எனது பங்காளிகள் அவனுக்கு சூனியம் வைத்து கை கால் களை முடமாக்கி விட்டனராம்! இது ஓர் எச்சரிக்கையாம்.. கேஸ் விஷயத்தில் முடிவு அவர்களுக்கு பாதகமாக அமைந் தால் என் மொத்த குடும்பத்துக்கும் சூனியம் வைத்து விடுவார்களாம். எனவே வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு அவர்கள் கொடுப்பதை நான் வாங்கிக் கொள்ள வேண்டுமாம். கடவுளே.. என்ன இதெல்லாம்? இதை நான் குடும்பத்தில் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை. கடிதமும் மொட்டைக் கடிதமாக இருந்தது. அதை எந்த அளவு நம்புவது என்றும் எனக்குத் தெரியவில்லை. ஜானாவுக்கு இதெல்லாம் தெரிந்தால் உயிரையே விட்டு விடுவாள். இவ்விஷயத்தில் என் ஆப்த ஸ்நேகிதன் சக்கர வர்த்தி தான் எனக்கு உதவி செய்ய முடியும் என்று சக்கரவர்த்தியை நெருங்கினேன். அவனும் வழக்கை வாபஸ் வாங்கு என்று தான் சொன்னான்.'

சக்கரவர்த்தி ஒரு தேர்ந்த வக்கீல். என் கேசை எடுத்து நடத்துபவன். மிக பயந்து போனான். 'டேய் பரமு எனக்கு பயமா இருக்குடா.. எனக்கும் ஏதாவது சூனியம் வெச்சுடப் போறாங்க' என்று புலம்பினான்.

'இந்த சூனியமெல்லாம் எந்த அளவு உண்மை? புரியவில்லை. மாதங்கியிடம் விவாதித்தால் எதாவது தெளிவு ஏற்படலாம். பத்திரிகைத் துறையில் இருப்பவள். நாலு விதமாக சிந்தித்து சுஜாதா, பாலகுமாரன் போன்ற எழுத்தாளர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வர அவளால் முடியலாம்!'

படித்தபடியே இருக்கும் மாதங்கியிடம் இரவின் குளுமையையும் மீறி கண்டங்கழுத்தில் வியர்வை, வரப்புத் தண்ணீராட்டம் பெருகியிருந்தது.

மூச்சிலும் உச்சபட்ச பருமன்.

''மை காட்!'' குரலில் அச்சமேறிய பலம்.

''மாதங்கி லைட்டை அணை. இன்னுமா தூங்கல. என்ன பண்றே?''

லக்ஷ்மி திரும்ப முனங்கினாள்.

மாதங்கி அதை லட்சியம் செய்யாமல் தொடர்ந்து படிக்க முனைந்தபோது பட்டென்று விளக்குகள் தானாக அணைந்து போயின. பவர் கட். அந்தக் காலத்து ராலி ஃபேன் சுவரின் சுண்ணாம்பை சுரண்டும் சப்தத்தோடு வேகம் குறைந்து சப்தம் போட்டபடி நிற்க ஆரம்பித் திருந்தது.

மாதங்கி கைகளை குத்திக் கொண்டாள்.. ச்சே!

டைரியை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

லேசாக புழுங்க ஆரம்பித்தது. வாசல் பக்கம் லேசாய் வெளிச்சம் தெரிந்தது. தடுமாற்றத்தோடு நடந்து மல் லிகைக் கொடி ஏறிப் படர்ந்திருக்கும் வாசல்படி அருகில் போய் குத்துக்காலிட்டு அமர்ந்து கொண்டாள். முகத்தில் தீவிர சிந்தனை. அந்த நிலையில் அவள் அமர்ந்திருப்பது நொணா மரக்காட்டில் கருமைப்பூச்சுடன் குட்டை முனி அமர்ந்திருக்கிற மாதிரி தான் இருந்தது.

கூடவே உள்ளே புழுக்கம் தாங்காத புரளல்களும் முனகல்களும் கேட்கும்போது பக்கமாய் யாரோ வந்து நிற்பது போலிருந்தது.

திரும்பினால் இருட்டில் இன்னொரு கறுப்புத் திட் டாட்டம் ஸ்ரீதரன்.

''மாதங்கி..'' அவன்தான்..

''உம்..''

''என்ன இங்க வந்து உக்காந்துட்டே புழுக்கமா?''

''உம்..''

அவனும் அவளருகே உட்கார்ந்தான். கை பிசைந்த படி பெருமூச்சு விட்டான்.

''என்னவெல்லாமோ நடந்து போச்சு..'' பேச்செடுத் தான்.

''ஸ்ரீ..''

''சொல்லு..''

''உன் அப்பா எப்படி இருக்கார்?''

''ப்ச்ச்ச்.''

''டாக்டர் என்ன சொன்னார்?''

''ஆயிரக்கணக்குக்கு மருந்து மாத்திரை எழுதித் தந்திருக்கார்.''

''இட்ஸ் ஆர்த்ரைட்டிஸ்?''

''வேற என்ன.. அந்த எழவுதான்.''

''அதுவேதானா?''

''வயதான காலத்துல கால் கை போனா வேற என்ன சொல்ல முடியும்.''

''ஆர் யூ ஷ்யூர்?''

''ஏன் அப்படி கேக்கறே?''

''சொல்றேன். என் அப்பா உன்கிட்ட கடைசியா என்ன பேசினார்?''

''எங்க பேசினார்.. பேயறைஞ்ச மாதிரில்ல கடந்த இரண்டு நாளா இருந்தார்.''

''கேஸ் விஷயமா யாராவது ஏதாவது சொன்னாங் களா?''

''தெரியல மாதங்கி. ஆமா என்ன படிச்சுகிட்டிருக்கே?''

''பாத்தியா?''

''எங்க தூக்கம் வந்தது. புரண்டு படுக்கும்போது பாத்தேன்.''

''அப்பா டைரி.''

''ஐ ஸீ.. மாமா ஏதாவது எழுதியிருக்காரா?''

''நிறைய்யடா..''

''என்ன மாதங்கி..?''

''பேசறேன். இப்ப வேண்டாம். விடியட்டும். ச்சே..

என்ன மனுஷங்க.'' அவள் அலுப்பின் உச்சத்திற்கு போகும் போது தெருவில் குடுகுடுப்பைக்காரன் இறங்கியிருந்தான்.

அவனது குடுகுடுப்பை ஒலி இரவின் கருமைக்குள் இதயத்தை குடாய்வது போல ஒலிக்கத் தொடங்கியிருந்தது.

''சரி சரி எழுந்து வா உள்ள.. குடுகுடுப்பைக்காரன் வரான்.'' ஸ்ரீதரன் பயத்துடன் எழுந்து கொண்டான்.

''ஏன் வந்தா என்ன?''

''இல்ல மாதங்கி. வா உள்ள, அவன் வரும்போது ஒரு வயசு பொண்ணு இப்படி வாசப்படில உட்கார்ந் திருக்கக் கூடாது.''

''போடா.. எதுக்குதான் பயப்படறதுன்னு இல்லையா?''

''நான்சென்ஸ்.. வாடின்னா..'' அவன் உரிமையுடன் அவள் தோளைப் பற்றி தூக்கினான். அவளும் அரைமன தாக எழுந்து கொண்டாள். உள்ளே நடந்தாள். கூடத்தில் அப்பா படத்தின் முன் எரியும் அகல் விளக்கின் வெளிச்சம். அங்கே வந்து ஜானகியும் அழுத வண்ணம் அமர்ந்து கொண் டிருந்தாள்.

''அம்மா..'' மாதங்கி அவளை நெருங்கிச் சென்று அமர்ந்தாள். அந்த தாயின் கரங்கள் அவளை தன் மடி மீது இழுத்து விட்டுக் கொள்ள ஒரு புறாக் குஞ்சாட்டம் மாதங் கியும் முடங்கிப் போனாள். இருவரிடமும் துக்கம் விம்மலை உருவாக்கத் தொடங்கியது. ஸ்ரீதரன் நகர்ந்து கொண்டான். கச்சிதமாக வாசலில் குடுகுடுப்பைக்கார னின் பிரவேசம். அப்படியே அவன் குரலிலும் மிரட்டும் ஒரு தகவல்!

''நல்ல காலம் பொறக்குது.. ஜெய் ஜக்கம்மா காளி காளாபுரி நீலி.. மல்லிகை மனை இது பாழ்படப் போகுது

கொள்ளிவாய் பேயெல்லாம் குடியேறப் போகுது. ஆலாத் தழைச்ச குடும்பம் பாழாப் போகுது. எண்ணி ஏழு நாளில் ஒரு மகராசன் உசுர் போன வழி ஒரு மவராசி ஒருத்தி உயிர் வானமேறப் போகுது.. வானமேறப் போகுது.

நல்ல காலம் பொறக்குது.. நல்ல காலம் பொறக்குது.. ட்ரௌய்.. ட்ரௌய்.. ட்ரௌய்..!"

அவன் குரல் உள்ளே பாய்ந்து ஜானகியையும், மாதங்கியையும் நெம்பித் தூக்கியது.

★ ★ ★

# 6

*சூன்யம் பற்றி வேத வித்தகர் தத்தாச்சாரி யாரிடம் கேட்டேன். ''சுருக்கமாகச் சொல் கிறேன் புரிந்து கொள்ளுங்கள்'' என்றவர், உடம்பில் உயிர் இருக்க மூளை செயல் இழந் தால் கோமா என்கிறோம்.*

*அதேபோல் உடம்பில் உயிர் இருக்க அதற்கு காரணமாக இருக்கும் கோள்களின் துணையை துண்டித்துவிட்டால், உயிர் இருந்தும் உடல் செயல் இழக்கும். கோள்களின் கோடுகளை கத்தரிக்க அந்தக் கோள்கள் ஒத்துழைக்க வேண்டும். எல்லோருக்கும் இது சாத்தியமல்ல என்றார். உலகமே.. உன்னுள் தான் இது போல் எத்தனை புதிர்?*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...*

குடுகுடுப்பைக்காரன் சேதியை சொல்லிவிட்டுச் கடந்து போனான். அதுவரை கத்திக் கொண்டிருந்த சுவர்ச் கோழிகள் கூட அவன் சொன்ன சேதியாலோ, இல்லை வேறு எதன் காரணமாகவோ தங்களின் திருகலான சப்தத்தை நிறுத்திக் கொள்கின்றன.

வீட்டினுள் சேதியின் விளைவுகள், ஜானகி 'அய் யய்யோ' என்று பீதியில் உறைந்து போய் விட்டிருந்தாள் அரைகுறை தூக்கத்தில் கிடந்தவர்கள் புரண்டெழுந்து அமரு கிறார்கள். ஸ்ரீதரன் கூட எழுந்து வந்து மாதங்கிக்கும் ஜானகிச் கும் இடையில் அமர்ந்தான்.

''அத்தே.. படுங்க. இரண்டு பேரும் ஒரு மணி நேரமாவது தூங்குங்க. கார்த்தால பேசிக்கலாம்.''

''ஸ்ரீதரா குடுகுடுப்பைக்காரன் சொன்னதைக் கேட்டியா?''

''அவன் கிடக்கறான். அதெல்லாம் சும்மா அத்தே...''

''சும்மாவா.. எனக்காக சொல்லாதே ஸ்ரீதரா, ஒரு வாரத்துக்கு முந்தியும் இப்படித்தான் சொன்னான். ஒரு வாரத்துல ஒரு பெரிய உயிர் போகப் போகுதுன்னான். உன் மாமா உன்னை மாதிரிதான் சமாதானப்படுத்தினார். ஆனா அவன் சொன்னது போலதானே நடந்தது. இப்பவும் இப்படி சொல்லிட்டானே...?''

ஜானகி, அழுகையில் பயத்தை பீதியை கலந்து இருளைத் துளையிட்டாள்.

மாதங்கி எதுவும் பேசாமல் அனைத்தையும் பார்த்தபடி வெறுப்புடன் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு எல்லாமே புதிராக புதிதாக இருந்தது.

சற்று முன் அவள் காதில் கேட்ட அப்பாவின் குரல். டைரியில் படித்த சங்கதிகள். இப்பொழுது குடுகுடுப்பைக் காரனின் எச்சரிக்கை.

'இதெல்லாம் என்ன?

அறிவே பதில் சொல்..

அவள் புரிபடாத குழப்பத்தில் இருந்தபோது வாசற் புறத்தில் ஓர் உருவம் கடந்து கொண்டிருந்தது.

அதை அந்த இருளிலும் பார்த்து விட்டு ஸ்ரீதரன் கத்தினான்.

''யாரது வெளிய...?''

"நான் தான் ஸ்ரீதரா.." என்று ஒரு பதில் நட்டு மாமா குரல் போல் வந்தது.

"தூங்கலியா நீங்க.. எங்க கிளம்பிட்டீங்க?" ஸ்ரீதரன் எழுந்து வாசல் நிலையை நோக்கி நடந்தபடியே கேட்டான்.

"வயிறு சங்கடம்டா.. காத்தாட வெளிய உக்கார லாம்னு போனேன்..." என்றபடி நட்டு நெளிந்தார்.

மளுக்கென்று மின்சாரம் உயிர் பெற்றெழுந்து வந்தது. வாசல் பல்பிற்கும் உயிர் வந்ததில், நட்டு மாமா இடையில் வேட்டியில் துருத்தலாக பர்ஸ் தெரிந்தது.

"என்ன இது பர்ஸ்...?"

"ஒண்ணுமில்ல காலைல வாக் போகும்போது பேப்பர் வாங்கறதுக்காக பர்ஸை எடுத்து வெச்சிண்டேன்." என்று அவர் சொல்லிவிட்டு நெளிந்தார்.

"சரி சரி போயிட்டு வாங்க.."

விடிந்து விட்டது!

கொல்லைப்புறத்தில் சாவுக்கு வந்த கூட்டம் பல் விளக்கி தண்ணீர் கொப்பளித்தபடி..

வாசலில் ஐயர் நுழைந்து கொண்டிருந்தார்.

பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ஸ்ரீதரன் நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன அம்பி.. ரெடியா? கிளம்பலாமா?"

"பால் வார்க்கத் தானே மாமா.. எல்லாம் ரெடி.."

"சடார்னு கிளம்பி உன்னோடு காட்டுக்கு வந்து பால் தெளிச்சிட்டு அப்படியே இரண்டாம் நாள் பிரேத சாந்தியை முடிக்கணும். பத்து மணிக்கு எனக்கு இன்னொரு

சாவு வீடு இருக்கு. ஒரு வயசுப் பையன் தூக்குல தொங்கிட்டான். காதல் தோல்வியாம்.''

அருகே வந்து திண்ணையில் அமர்வதற்குள் ஐயர் ஒரு டைம் டேபிளே போட்டு முடித்தார்.

''மாமா காபி..''

''கட்டாயமா.. ஒருவாய் அதை குடிச்சா தான் எனக்கு சுறுசுறுப்பே வரும்.'' அப்படியே அவர் பூணூலால் முதுகு சொறிந்து கொண்டார். அண்ணாந்தபோது மாதங்கி நிலைப்படி அருகே நின்று கொண்டு அவரையே பார்த்தபடி இருந்தாள்.

''நீ.. நீ தான் பரமேஸ்வரனின் கடைசிப் பெண்ணா.. அப்புறமா எப்ப வந்தே?''

''நாம போய் விட்டு காரியம் முடிச்சிட்டு வரவும் வந்தா.. சரி வந்தவ எங்களை எல்லாம் ஓர் உலுக்கு உலுக்கிட்டா மாமா..'' ஸ்ரீதரன் சொன்னான்.

''என்னம்மா.. பொணத்த ஏன் போட்டு வைக்கலேன்னு சத்தம் போட்டியா.. கூடாதும்மா ஒரு குறிப்பிட்ட காலம்தான் பிணங்கள் வீட்ல கிடக்கலாம். அதுக்கு மேல இருந்தா அது அந்த வீட்டுக்கும் நல்லதுல்ல. அந்த ஆன்மாவுக்கும் நல்லதுல்ல.''

''என்னாகும்?'' - மாதங்கி கை கட்டிக் கொண்டு ஒரே வார்த்தையில் கேட்ட விதமே ஒரு தினுசாக இருந்தது.

''அந்த பிரேதத்தோட ஆவி சுத்திச் சுத்தி வரும்.''

''நீங்க வேற மாமா.. மாதங்கி சுடுகாட்டுக்கே ஓடிப் போயிட்டா. நான் அதைச் சொன்னேன்.'' - நடுவில் ஸ்ரீதரன் திரும்பப் புகுந்து அவரை விதிர்க்கச் செய்தான்.

"அய்யோடி.. பொம்மனாட்டி கொழந்த சுடுகாட்டுக்குப் போனியா.. அப்புறம்?"

"அப்புறமென்ன.. நானும், நட்டு மாமாவும் போய் கூட்டிக்கிட்டு வந்தோம்."

"அய்யோடா.. நல்லவேளை கொழந்தே உனக்கு ஒண்ணும் ஆகலைன்னு நினைக்கறேன். எதுனா ஆகியிருந்தா என்ன பண்றது?"

"என்ன ஆகும்?" - திரும்பவும் மாதங்கி அதே தினுசில் கேட்டாள்.

"என்ன ஆகுமா? சொடேல்னு முதுகுல அடிவிழுந்து வாய்ல மூக்குல நுரை தள்ளி செத்துப் போக நேரலாம். காத்து கருப்பு ஆக்ரமிச்சு ஆட்டியும் படைக்கலாம். என்னன்னு சொல்ல?"

ஐயர் விளக்கமளிக்கும் போது பெரியவள் ரேவதி, காபி தம்ளருடன் வந்து காபியைத் தந்து விட்டு கலக்கமுடன் நின்றாள்.

"ஆமா மாமி எங்கே?"

"தூக்கம் பிடிக்காம, துக்கம் தாங்காம அனத்திண்டே இருந்தா. நாலு மாத்திரையை கொடுத்து தூங்க வெச்சுருக்கோம். நீங்க காபியை சாப்பிடுங்கோ." - என்றான் ஸ்ரீதரன்.

காபியில் ஓர் உறிஞ்சு. நிமிரும் போது மாதங்கியிடம் சலனமேயில்லை. கூர்ந்த பார்வை. முகப் பரப்பில் அநியாயத்திற்கு ஒரு திடம்.

"என்னம்மா நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கையில்லையா?"

"ப்ச்ச..!"

''அவள விடுங்க மாமா.. ராத்திரி குடுகுடுப்பைக் காரன் வேற பேதிக்கு கொடுத்துட்டான். இந்த வீட்டை பேய் பிடிக்கப் போறது. பிடிச்சாட்டப் போறது. இன்னோர் உயிர் போகப் போறதுன்னு.''

''நிஜமாவா?'' ஐயரின் கை நடுங்கி காபி அவர் வயிற்றுப் பாகத்தில் தத்தளித்து வழிந்தது.

''இதுல எதுக்கு பொய். மாமிக்கு அது வேற பயம்.''

''ச்சொச்சொச்சொச்..'' - ஐயர் கவளிபோல் பரிதாபச் சொட்டு போட்டார். திரும்ப மாதங்கியை பார்த்தார்.

அவளிடம் மாறாத அதே கூர்ந்த பார்வை அசகாய திடம்.

''சரி கிளம்பு.. நாழியாயிண்டு இருக்கு பார்..'' - ஐயர் துண்டை உதறியபடி எழுந்தார்.

''என் கேள்விக்கு பதில் சொல்லலையே நீங்க..'' ஸ்ரீதரன் விடவில்லை.

''என்னத்த சொல்ல. ஜாக்கிரதையா இருங்கோ. அந்த பரமேஸ்வரனை பிரார்த்திச்சுக்கோ. நான் சொன்னது உன் மாமா பரமேஸ்வரய்யர இல்ல. கைலாச பரமேஸ்வரனை..''

''அப்ப குடுகுடுப்பைக்காரன் சொன்னதுல உண்மை இருக்கா?'' மாதங்கி சடாரென்று கேள்வி எழுப்பவும் ஐயரும், ஸ்ரீதரனும் சற்று அதிரத்தான் செய்தனர்.

★ ★ ★

# 7

*எனது பூர்வீக சொத்து ஒன்றும் அத்தனை கோடி பெறாது. நல்ல புஞ்சை பூமி. போனால் சில லட்சங்கள் போகலாம். ஆனால், அதற்காக என் பங்காளிகள் ஏன் இப்படி அடித்துக் கொள் கிறார்கள் என்றே தெரிய வில்லை.*

*நான் இளைய தாரத்து மகன். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? என் அம்மா வேறு ஜாதி, அப்பா வேறு ஜாதி. அதனால்தான் இத்தனை அநீதி இருந்தும் அப்பா அவர்களுக்கும் சரி, எனக்கும் சரி சரிசமமாக சொத்தை பிரித்துத் தரப் பார்த்தார். முடியவில்லை. நான் அவர் மகனே இல்லை என்று கூறி என் மூலாதாரத் தையே கொச்சைப்படுத்தினார்கள். அது ஒர்க் அவுட்டாகவில்லை. நீதிமன்றமும் நான் அவர் பிள்ளைதான் என்று கூறிவிட்டது. இனி சொத்து வழக்கு மட்டுமே பாக்கி! அதிலும் எனக்கு சாதக மாகத்தான் தீர்ப்பு வரும். ஆனால், வரவிட மாட்டார்கள் போல் உள்ளது..'*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து..*

"எனக்கு தெரிஞ்சு சொல்றேன் கொழந்த.. அதெல் லாம் சத்தியமான உண்மை."

பதில் வெளியே இருந்து இங்கிலீஷ் பத்திரிகையுடன், உள்ளே நுழையும் நட்டு மாமாவிடம் இருந்து வந்தது.

ஐயரின் மௌனமும் அதை ஆமோதித்தது.

''ஆமா ஆவிகள் பேசுமா?'' மாதங்கியின் அடுத்த கேள்வி ஐயரை அதிகமாகவே நெருடியது. நட்டு மாமா மிடறு விழுங்கினார்.

''ஏம்மா எதுனா காதுல விழுந்ததா?'' இது ஐயர்.

''நிறைய்ய..''

''மாதங்கி.. என்ன சொல்றே?'' இது ஸ்ரீதரன்.

''இல்லை ஸ்ரீ.. நான் சொல்றது சத்தியமான உண்மை.''

''அப்படின்னா பரமேஸ்வரய்யர் ஆவிக்கு சாந்தி ஏற் படலையா?'' இது நட்டு மாமா.

''இந்தப் பொண்ணு சொல்றது நெஜம்னா, பரமேஸ் வரய்யர் சிதைல நெஞ்சு மட்டும் வெந்துருக்காது. அங்க போய்ப் பார்த்தா தெரிஞ்சிடும்.'' ஐயர் ஒரு புதிய கோணம் பிடித்தார்.

''அத நான் அவசியம் பாக்கணுமே..'' மாதங்கி வாசலை தாண்டினாள்.

''மாதங்கி வேண்டாம்.'' என்று கூக்குரலிடுபவர்களை அவளின் அனல் பார்வை அடக்கியது.

**ம**யானம்.

போனால் போகிறதென்று மெலிதான காற்று.

பிரேதப் புகையும், காலைப் பனியும் கூடிப் புணர்ந்த ஒருவித மூட்டம் போட்ட சூழல்.

உள்ளே நுழையும்போதே நான்கைந்து காட்டு நாய்கள் பாய்ச்சல் எடுத்து வெளியே ஓடுகின்றன. அவற் றில் ஒன்றின் வாயில் ஒரு கையின் முழுநீள பாகம்!

''ஆறடிக்கு குறையாம குழி தோண்டிப் புதைங்கன்னா கேக்கறாங்களா.. குழி தோண்டறதுல கூட ஃப்ராடு வேலை. ''ஐயர் முணுமுணுப்போடு பரமேஸ்வரனின் சடலம் எரிந்த கொட்டகையை எட்டினார். கூடவே ஸ்ரீதரன், மாதங்கி, நட்டு மாமா, இன்னும் சிலர்.

சடலம் முழுவதும் எரிந்து அவிந்து அடங்கிக் கிடந்தது. ஊதுபத்தி எரிகிற தினுசில் சன்னமான புகைப் பெருக்கம்.

என்ன ஆச்சரியம்.

ஐயர் சொன்னது போலவே அத்தனை வேக்காட்டிலும் மார்பு பாகத்து சதை எரிந்து கருகியிராமல், சாம்பலில் புரட்டி எடுத்த கரித்துண்டு போல இதயம் கண்ணுக்குத் தெரிந்தது.

அதை ஐயர் ஒரு கழியால் புரட்டிக் காண்பிக்கும் போது, மாதங்கி ''அப்பாாாாா'' என்று வெடித்ததில் அந்தச் சுடுகாடே ஆடிப்போனது!

மாதங்கியின் விசும்பல் அனைவரையும் ஈரல் வரை வலிக்கச் செய்தது.

''மாதங்கி என்ன இது.. கண்ட்ரோல் யுவர் செல்ஃப்!''

ஸ்ரீதரன் அவளை அடக்கப் பார்க்க அவள் முடியாமல் விசும்ப, வெட்டியான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

நெருங்கியவன் விஷயமறிந்து சாம்பல் படுகையையே வெறித்து வெறித்துப் பார்த்தான்.

''ஏய்யா.. ஒழுங்கா விறகு வெச்சு எரிக்கறதில்லையா.. பாத்தியா பீதி வெந்தும், மீதி வேகாமலும்..'' உறவினர்களில் ஒருவர் அவனை விரட்டினார்.

''அட என்னாங்க நீங்க.. ஒரு குண்டு விறகு போட்டுருக்கேன். நெஞ்சு வேகலைன்னா அதுக்கு நான் என்ன செய்வேங்க? செத்தவருக்கு என்ன தீராத துக்கமோ?''

''அவருக்கு துக்கம் இருந்தா நெஞ்சு வேகாதாக்கும். என்னய்யா உளர்றே?'

''உளறலை. அதான் உண்மை. இந்த இடத்துல இந்த மாதிரி எத்தனை கேஸ் பார்த்திருக்கேன் தெரியுமா?''

அவன் பேச்சில் அதீத தெனாவெட்டு. கூடவே ஓர் எச்சரிக்கைக் குத்து.

''பாத்து சார்.. செத்த மனுஷன் சத்தியமா என்ன கர்மம் பண்ணாலும் சாந்தியடைய மாட்டார். சுத்திச் சுத்தி தான் வருவார்.. பாத்து!''

மொத்தப் பேர் முகமும் உடனேயே வெளிறிப் போனது.

''சரி சரி. இவனண்ட போய் பேசிண்டு. ஆஃப்ட்ரால் ஹி ஈஸ் லேபர் - டசண்ட் நோ எனிதிங் அபௌட் ஆஃப்டர் தி டெத். பெரிய எரிக்வான் டானிகாட்டம் நினைச்சுண்டு உளர்றான்.''

''ஸீ மாதங்கி.. ஒரு நாளைக்கு லட்சம் உயிர் பொறக்கறது.. லட்சம் உயிர் சாகறது. நானும் நீயும் நிக்கற இந்த க்ஷணத்துல, நம்ம உடம்புல புதுப்புது செல் பிறக்கறதும், பழைய செல் அழியறதுமா நேச்சுரல் பிராசஸ்ல எல்லாம் போயிண்டிருக்கு. இந்த ஆவி, சாந்தி, சமாசாரமெல்லாம் சினிமாப் பொய்யை விட மோசமான விஷயம். தட்ஸ் ஆல்.'' என்று ஓர் அத்தை புருஷன் உறவில் உள்ள ஒருவர் சொல்லிவிட்டு, ''ஸ்ரீதரன் மளமளன்னு பாலைத் தெளி, கிளம்பலாம்'' என்றார்.

உடன் வந்திருந்த ஐயர் எதுவுமே பேசவில்லை.

இனி வாயைத் திறந்தால் ஆபத்து என்று நினைத் தாரோ? எலும்பையும், சாம்பலையும் பொறுக்கி பானை யில் போட்டுக் கொண்டார். மறக்காமல் அந்த வேகாத இதயச் சதையையும்.

**தொ**லைபேசியின் அலறலைத் தொடர்ந்து காதைக் கொடுத்தாள் மாதங்கி.

''என்னம்மா காரியம்லாம் முடிஞ்சுதா?'' மறுமுனை யில் ஆசிரியர் ரங்கராஜன்.

''முடிஞ்சது சார்..'' சொல்லும்போதே அழுதாள் மாதங்கி.

''மாதங்கி நீயா அழறே. நோ... ரொம்ப ஆச்சரியமா யிருக்கு.''

''சார் அப்பா சாவு கூட என்னை பாதிக்கல. சுத்தி பல விஷயங்கள் இருக்கு.. புதிரா இருக்கு.''

''டோண்ட் வொர்ரி. மரண பாதிப்பு தந்த அழுத்தம் அப்படித்தான் சில நாளைக்கு வெச்சிருக்கும். ஜஸ்ட் டூ டேஸ் போதும். ஆர் யூ பி கமிங் நார்மல்.''

''நான் இப்பவே நார்மலாதான் இருக்கேன். அப் நார்மல் திங்க்ஸ் என்கிட்ட இல்ல. அப்பா சாவுல..''

''என்னம்மா சொல்றே?''

''ஆமாம் சார்.. இறந்த அப்பாவோட குரல் என் காதுல விழுந்தது. ஒரு தடவை இல்ல.. பல தடவை..''

மறுமுனையில் அதை கேட்டு பதில் சொல்லாதபடி சிரித்தார் ரங்கராஜன். சிரிப்பு போல ஒரு சரியான உணர்ச்சிக் கடத்தியே இந்த உலகத்தில் கிடையாது.

''தெரியும்.. இப்படி நீங்க சிரிப்பீங்க.. அதனால்தான் நான் இதைப் பத்தி வீட்ல கூட யார்கிட்டேயும் பேசல.. முதல்ல என்னை கொன்னுட்டாங்கன்னார்.''

''தென்..''

''நட்டுங்கற நடராஜ மாமாவை நம்பாதேன்னார்..''

''அவ்ளோதானா?''

''இன்னும் இருக்கு.. சுடுகாட்டை விட்டு என்னை போகச் சொன்னார். அப்புறம் வந்து பேசறேன்னார். அது மட்டுமில்ல, அவர் டைரியை நான் பார்த்த மாத்திரத் துலேயே யாரோ தள்ளினது மாதிரி என் மேல விழுந்தது அது..''

''அதுல ஏதாவது இன்ட்ரஸ்ட்டிங்கா..?''

''இன்ட்ரஸ்ட்டிங்கா.. ஏராஸ்டிக்கா ஏகப்பட்ட விஷயங்கள். பில்லி சூன்யம்னு புதுப்புது சமாசாரங்கள். அதுல அவரோட பாதிப்புகள்.''

''ஓ.கே. நீ இதை எல்லாம் ஒதுக்கி வெச்சுட்டு நான் சொல்லிக் கொடுத்த யோகாவை செய்! தியானம் பண்ணு. உனக்குள்ள டிசார்டர் ஏற்பட்டிருக்கு.''

''அப்புறம் நான் இதை எல்லாம் பிரமைன்னு சொல்வேன்னு நினைச்சு தானே இப்படிச் சொல்றீங்க.''

''ஓ.. மாதங்கி உன்னோட இந்த ஐக்யூவை பாராட்றதா இல்ல கண்டிக்கறதான்னே எனக்குத் தெரியல..''

''உங்க சிஷ்யை நான். பத்திரிகை உலகப் பிரதிநிதி! இன்டர்நெட்ல தினம் நூறு வெப் சைட் பார்க்கறவ நான். அதை எல்லாம் யோசிக்காம கொள்ளாம பேசுவேனா.. என்னோடது சந்தேகமில்லாம ஒரு ட்ரூ எக்ஸ்பீரியன்ஸ்..''

“ஓ. கே.. உன் மாதிரி எக்ஸ்பீரியன்ஸ் பலருக்கு இருக்கு சுஜாதா கூட கட்டுரைல எழுதினாரே? இது தனி மனித அனுபவமா இருக்கற வரை நம்ப முடியாத ஒண்ணு தான். விஞ்ஞானத்துக்கு சாட்சி வேணும். நிருபணம் வேணும். மாறாத்தன்மை வேணும்.”

“அதனால..’

“முடிஞ்சா உன் அப்பா குரலை டேப் செய்.. அவரை போட்டோ பிடி. அவர் இப்ப இருக்கற நிலையைப் பற்றி சொல்லச் சொல். பாத்து... ஏற்கனவே ஓர். ஆவி அமுதா இருக்காங்க. அப்படி நம்பியும், நம்ப முடியாமலும் நடுவுல சிக்கிக்காதே.”

“நிச்சயம் சார்.. அதுல தான் என் முழு கவனமும்.”

“குடும்பத்தை மறந்துடாதே மாதங்கி. அது சம்பந்தமா சட்ட உதவி, போலீஸ் உதவி தேவைப்பட்டா போன் பண்ணு.”

“ஷ்யூர் சார்.”

“முடிஞ்சா நான் வரேன்.”

போன் குரல் நீக்கி குழிப்படுக்கையில் சென்று படுத்துக் கொண்டது.

திரும்பியவளை அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். இமைக்க மறந்த பார்வை.

“அம்மாா..”

“எல்லாம் கேட்டுக்கிட்டிருந்தேன். ஏன் என்கிட்ட சொல்லலை.”

“அது.. அது..”

“சுடுகாட்டுல நெஞ்சு கூட வேகலையாமே..”

''அம்மா.. அது ஒரு சாதாரண விஷயம்.''

''இல்ல மாதங்கி.. எனக்கு பயமா இருக்கு. நான் கேஸை வாபஸ் வாங்கிடறேன். போதும் இந்த மாய விளை யாட்டு.''

''என்னம்மா சொல்றே.. இதுக்கு நாம விஷம் குடிச்சு சாகலாம்.''

''போடி... உனக்கென்ன? பணம் காசை எப்ப வேணா சம்பாதிச்சுக்கலாம். ஆனா உங்களுக்கொண்ணுன்னா என்னால தாங்க முடியாது.'' ஜானகி வெடித்துக் குமுறும் போது வீல் என்று அலறல், கூடத்தில் இருந்து வந்தது. எட்டிப் பார்க்கவும் நெற்றிப் பொட்டில் சூடு தகித்தார் போல் ஒரு திடுக். ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ரேவதி முருங்கைக்காய் என்று நினைத்து கடிக்கப் பார்த்தது ஒரு மனித விரலை!

★ ★ ★

# 8

*ஆவிகளோடு பேசுவது தொடர்பாக எவ்வ ளவோ புத்தகங்கள். அத்தனையும் அண்டப் புளுகு, ஆகாசப்புளுகு என்றெண்ணியிருந் தேன். ஆனால் இறந்தவர்களோடு பேசலாம் எனும் ஒரு புத்தகம் என் கருத்தை மாற்றியது. நான் இறந்து போன என் தாய் தந்தை மூதாதை யரோடு பேசினேன். அந்த அனுபவத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. பேசிப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் புரியும். ஒரு சமயம் அதெல்லாம் கனவோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது.*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...*

கட்டை விரலை முருங்கைக்காய் என்று நினைத்து வாய் வரை கொண்டு சென்று விட்டு பின் அதைப் பார்த்து வீல் என அலறிய ரேவதி கட்டை விரலை உதறி எறிந்ததில் அது எங்கோ போய் விழுந்தது.

ஓடிவந்து பார்த்த மாதங்கிக்கு முதலில் ஒன்றும் புரிய வில்லை. பின்னர் புரிய வந்த போது எல்லோர் முகத்திலுமே அதிர்ச்சி.

பந்தியில் நட்டுமாமாவும் உட்கார்ந்திருந்தார்.

நடுக்கத்தோடு தன் சோற்றுப் பிசைவில் விரலால் அளைந்தார். அவர் வசமும் ஒரு விரல் அகப்பட்டது. கண்முழி அவர் வரையில் அப்படி மறுபக்கம் திரும்பி பின் பழைய நிலைக்கு வந்து நின்றது.

சமையல்கட்டிற்கு ஓடிச் சென்ற ஸ்ரீதரன் சாம்பார் வாளியை கரண்டியால் கிளறித் தூக்கினான். ஐய்யா.. ஒரு பிஞ்சுக் குழந்தையின் மணிக்கட்டோடு கூடிய கை பாகம் அப்படியே தோலெல்லாம் வழண்டிருக்க மஞ்சள் திப்பியோடு கூடி கரண்டியின் மேல் அழுந்து தழும்பி வந்தது.

ஜானகி தாமதிக்காமல் மயக்கத்தில் வழுக்கத் தொடங்க மொத்த வீடும் திடுக்கிட்டு திமிலோகப்பட, சமையல் கட்டில் சமையலில் ஈடுபட்டிருந்த லக்ஷ்மி, எப்படி இது சாத்தியம் என்று புரியாதவளானாள். சேலை முந்தியால் வாய் பொத்திக் கொண்டு அகலத் திறந்து காது வரை விரியப் பார்த்த விழி களோடு பக்கத்து மளிகை அலமாரி மேல் சாய்ந்தாள். அதில் எல்லாம் கடமுட என்று ஒன்றுமேல் ஒன்று பிரண்டு விழ ஆரம்பித்தன.

மிளகாய் வற்றல் டப்பாவும் திறந்து கொண்டு விழுந்து மிளகாய் வற்றலை தரையில் பரவ விட்டிருந்தது.

சிவந்து பின் கறுத்துவிட்ட பழைய மிளகாய்கள், அதில் ஒன்று பார்க்கும்போது நெளிவது போலத் தோன் றியது.

ஊன்றிப் பார்த்தபோது அது ஒரு கருந்தேளாகக் காட்சி யளித்தபடி விறுவிறுவென ஓடத் தலைப்பட்டது.

லக்ஷ்மியால் அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை. அடுப்பங்கரையையே அமளிப்படுத்தியபடி பாய்ந்து வெளி யில் வரலானாள்!

கூடத்தில் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். பிரதான மாகத் தெரிந்தார் வக்கீல் சக்கரவர்த்தி. மாதங்கி மட்டும் உட்காராமல் சுவரில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ஸ்ரீதரனும் அவளை ஒட்டி அவளைப் போலவே, ஆனால் கைகட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

''நான் சொல்றேனேன்னு தப்பா நினைக்காதீங்க. இதுக்க மேலயும்.இந்த வீட்ல நடக்கறத வேடிக்கை பார்க்க நான் [illegible] இல்லை.'' பீடிகையுடன் ஆரம்பித்தார் நட்டு மாமா... ஜானகி லேசாக நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

''அப்படி பார்க்காதே ஜானகி.. உன்னோட எதிரிகள் எல்லையில்லாதபடி விளையாட ஆரம்பிச்சுட்டாங்க. சாம்பார்ல கைவிரல்! மிளகா டப்பால கருந்தேள். என்ன இதெல்லாம்..? நீங்க சட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்தாக ணும்.''

அவரது தொடர்ச்சியை நறுக்கினார் வக்கீல் சக்கர வர்த்தி.

''என்ன பண்ணணும்னு சொல்றீங்க?''

''எல்லா எழவுக்கும் காரணம் இந்த கேஸ்தான். பங்காளிச் சண்டைதான். மூணு பெண் குழந்தைகளோட இந்த சண்டைல உன்னால ஜெயிக்க முடியும்னு நினைக் கறியா ஜானகி?'' நட்டு மாமாவின் கேள்வி கொஞ்சம் நரம்பில் ஊசி ஏற்றியது.

''அதனால..?'' மாதங்கியிடம் இருந்து வந்த கேள்வி அவரை நோக்கி விழுந்தது. அந்த அதனாலயில் அவள் புதைத்திருந்த தொனி நட்டு மாமாவை சங்கடப்படுத்திற்றோ என்னவோ, அவளைப் பார்த்து மிடறு விழுங்கினார்.

''நீ சும்மா இருடி..'' குறுக்கில் கத்தரித்தாள் ஜானகி.

''இவர் என்ன சொல்ல வர்றார். பெரியப்பா சித்தப் பாக்களோட சமாதானமா போகணுமாமா?''

''அதுல தப்பு என்னடா கொழந்தே..?''

''அப்பா இருந்தப்போ சமாதானமா போக நினைக் கலையா என்ன?''

''நினைச்சார்மா.. ஆனா..''

''என்ன ஆனா?''

''அந்த டீல் ஒத்து வரல்ல

''அது என்ன டீல்?''

''அவங்க கொடுக்கறதை வாங்கிக்கணும் கேஸை வாபஸ் வாங்கிக்கணும்.''

''அவங்க என்ன கொடுப்பாங்க..?'

மாதங்கிக்கு எல்லாம் தெரியும். தெரியாதது போல அவள் கேட்பதையும், நட்டு மாமா விவரிப்பதையும் பார்க் கும்போது, வக்கீல் சக்கரவர்த்திக்கே அது பிடிக்கவில்லை என்பது முகபாவங்களில் தெரிந்தது. சற்று கோபமாக இடை வெட்டினார்.

நாள் :

''மிஸ்டர் நடராஜன் கொஞ்சம் சும்மா இருக்கீங்களா. அம்மா மாதங்கியும் என்ன தெரியாத மாதிரி அவரைக் கேள்வி கேட்கறே...

விஷயம் முத்த வேண்டியதுக்கு மேல முத்தி எங்கேயோ போயாச்சு. எப்படியும் அடுத்த வாரமோ இல்ல, அடுத்த மாசமோ ஜட்ஜ்மெண்ட் வந்துடும்.

சொத்து முழுவதும் உங்களுக்குத்தான். இது என் அசைக்க முடியாத நம்பிக்கை. எதிரிகளுக்கு தோல்வி பயம் வந்தாச்சு. அதான் பிளாக் மேஜிக் பண்ணி காபரா பண்ணப் பார்க்கறாங்க. இதை எப்படி கவுண்ட்டர் பண்ணப் போறீங்க. அதைப் பத்தி பேசுவோம் இப்ப.''

''என்ன சொல்றீங்க வக்கீல் சார். இதை எதிர்த்து கவுண்ட்டர் பண்றதா? அப்படின்னா...?'' ஜானகி அலறினாள்.

''ஆமாம்மா.. இந்த வீட்டுக்கு சூன்யம் வெச்சிருக்காங்க. இப்போ அதை எடுக்கலைன்னா ஆபத்து.''

''ஐயய்யோ..''

[illegible] கொஞ்சம் கத்தாம இருக்கியா. வக்கீல் சார் சூன்யம் வெச்சுருக்காங்கன்னு சொல்றீங்களே.. எதை வெச்சு?''

''எதை வெச்சா.. என்னம்மா கேட்கறே நீ. முருங்கைக்காய் விரலா மாறினா வேற என்ன?''

''சரி... அதை எப்படி தடுப்பீங்க?''

''நாம ஒரு மாந்தீரிகனைப் பார்க்கணும். அவனால தான் அந்த சூன்யத்தை எடுத்து இதை எல்லாம் தடுக்க முடியும். இல்லேன்னா ஆபத்து..''

''ஐயோ முதல்ல அதை செய்யுங்களேன். எனக்கு என் பசங்க நல்லபடியா இருந்தா போதும். சொத்துகூட வேண் டாம். அவங்களே எடுத்துக்கட்டும். வக்கீல் சார் முதல்ல இந்த சூன்யத்தை எடுக்கப் பாருங்களேன்.'' ஜானகி பயங் கரமாக அலறினாள்.

''ரொம்ப சரியா சொன்ன ஜானகி, காசு பணத்தை எப்ப வேணா சம்பாதிக்கலாம். ஆனா, உசுருக்கு எதாவது ஒண்ணுண்ணா என்னாகறது. நீ சொல்றதுதான் சரி. எனக்கு தெரிஞ்ச ஒரு மாந்திரீகன் இருக்கான். கூட்டிக் கிட்டு வரட்டுமா?''

நட்டு மாமா அக்கறை காட்டிய விதமே மாதங்கியைப் பிசைந்தது.

''தாராளமா மாமா.. அன்னிக்கு குடுகுடுப்பைக்காரன் சொன்னது. இப்ப நடக்கறது. எல்லாத்தையும் பார்த்தா ரொம்ப பயமா இருக்கு எனக்கு. சீக்கிரம் எதையாவது பண்ணுங்க.''

''ஜானகியின் வெடிப்பை நட்டு மாமா உச்சு உச்சு சப்தத்தோடு ஒப்புக்கொணட்டார்.

''இப்பவே கிளம்பறேன். முதல்ல அவனை அழைச் சுண்டு வந்துட்டு மறு வேலை பார்க்கறேன்'' என்று துண்டை உதறிக் கொண்டு கிளம்பினார்.

வக்கீல் சக்ரவர்த்தி எதுவும் பேசாமல் அதை வெறிக் கிறார்.

மாதங்கிக்கு நெற்றி புடைப்பெடுத்து வியர்க்கத் தொடங்கியது.

ஆசிரியர் ரங்கராஜனோடு திரும்பப் பேசினால், மன துக்கு தெம்பாக இருக்கும் போல தோன்றியது.

விரலும், தேளும் குழப்பு குழப்பு என்று குழப்பிப் பிசைய தொலைபேசியை நோக்கி நடந்தாள்.

நடுவிலேயே சட்டென்று நறுக்கப்பட்ட மாதிரி புத்தக ஷெல்ஃபை நோக்கி நடந்தவள். அந்த டைரியை திரும்ப எடுத்தாள்.

இந்த முறை கூடவே இன்னொரு புத்தகமும் சேர்ந்து வந்தது கையோடு..

'இறந்தவர்களோடு பேசலாம்' என்றது அதன் தலைப்பு!

* * *

# 9

*'எனக்கு உரிமைப்பட்ட சொத்தான நிலப் பரப்பில் ஓர் ஏக்கர் பரப்பளவில் சுமாராக ஐம்பதடி உயரத்துக்கு ஒரு குன்று ஒன்று இருக் கிறது. அதில் ஜிப்சம், மாக்னசைட் போன்ற கனிம வளப் பொருள்கள் இருப்பது போல தெரி கிறது. அந்தக் குன்றில் காக்கைப் பொன்னின் மினுமினுப்பை நானே பார்த்திருக்கிறேன். என் உறவினர்கள் இந்த சொத்துக்கு அடித்துக் கொள் வதன் பின்னால் இந்தக் கனிவளமும் ஒரு காரணமாக இருக்குமோ என்னவோ.. அரசுக்கு இதை தாரைவார்க்கும் பட்சத்தில் காம்பன் சேஷனே பல கோடி கிடைக்கலாம்.. சக்கரவர்த்தி ஓர் அபிப்பிராயமாகச் சொன்னான்.'*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து.*

இறந்தவர்களோடு பேசுவது எப்படி? எனும் அந்த புத்தகம் மாதங்கியை புருவம் சுருங்கச் செய்தது. இந்த மாதிரி தான் எத்தனை எத்தனை புத்தகங்கள்? நினைத்தாள். அந்த சோகத்திலும் சிரித்தாள்.

பின்னால் வந்து நின்றான் ஸ்ரீதரன்.

''என்ன மாதங்கி புத்தகம்?''

''ஆவியோடு பேசுவது எப்படியாம்.. பேசறியா?''

''ப்ச்.. ஆமா. இது எப்படி உன் கைல?''

''இங்க இருந்தது ஸ்ரீ.. அப்பா வாங்கி வெச்சிருந்துருக்கார். நான் வேலைக்குப் போன பிறகு அப்பா அநியாயத்துக்கு மிஸ் கைட் ஆகியிருக்கார்னு நினைக்கறேன்.''

''அதைவிடு.. நம்ப வீட்ல இப்படி கை விரல்லாம் வந்து சாப்பாட்டுலேயே விழுந்திருக்கே.. நீ என்ன நினைக்கறே?''

''புரியல ஸ்ரீதர்.. ஒரே குழப்பமா இருக்கு. இதெல்லாம் என்ன டர்ட்டி கேமோ தெரியல. பத்திரிகைக்கு இந்த மாதிரி நிறைய கதை வரும். படிச்சிருக்கேன். படிக்கும் போதே சிரிப்பு வரும். என் எடிட்டர் எனக்கும் மேல.. அவரும் சேர்ந்து சிரிப்பார். தட்ஸ் ஆல்.. ஆனா இன்னிக்கு இப்ப என் வீட்லையே..!''

''நான் உன்னை மாதிரி சந்தேகப்படவோ, நம்பிக்கை இல்லாம பேசவோ தயாரா இல்லை மாதங்கி. நட்டு மாமா சொன்ன மாதிரி முதல்ல இந்த சூன்யத்தை எடுக்கணும், அப்புறம்தான் மறுபேச்சே...''

''போடா.. சூன்யமாம். பில்லியாம். யூ நோ ஒன் திங்க். இறந்து விட்ட அப்பா என்கிட்ட பேசினதையே என்னால நம்ப முடியல..''

''வெரி பெக்கூலியர் மாதங்கி நீ.. சாதாரணமா அமானுஷ்ய அனுபவங்களுக்கு உள்ளானவங்க அதை சாதிச்சு பேசுவாங்க.' மத்தவங்க தான் அதை பிரமைன்னு சொல்லுவாங்க. உன் விஷயம் தலைகீழா இருக்கு..''

''என் விஷயம் மட்டுமில்ல, இந்த வீட்ல எவ்வளவோ விஷயங்கள் தலைகீழாகத்தான் இருக்கு.''

''சரி.. நீ கொஞ்சம் அத்தைய பாத்துக்கோ, தைரியம் சொல்லு, நான் இந்த நட்டு மாமா விஷயத்தை கவனிச்

சிக்கிறேன். அப்படியே கேஸ் சம்பந்தமான வேலைகளும் இருக்கு... பார்த்துட்டு வரேன்..''

ஸ்ரீதரன் நடந்தான். மாதங்கி அவன் தன் குடும்ப நிமித்தம் படும்பாட்டுக்காக ஒரு விநாடி கசிந்தாள். பின் கைவசம் உள்ள புத்தகத்தைத் திறந்தாள்.

முதல் வரியே கவ்வி இழுக்கத் தொடங்கியது.

'இறந்தவர்களோடு பேசலாம்.. என்டோபிளாசம் அதிகம் சுரக்கும் திரேகங்கள் மனிதர்களில் உண்டு. அனேகமாக இவர்கள் அமாவாசைக்கு முதல் நாளில் ஜனித்திருப்பார்கள். அன்னையின் கருப்பையில் இவர்கள் தாய் தந்தையர் அண்டகோச அடிச்சுவட்டில்தான் உருத்திரள்வார்கள். ஆயினும் பிரபஞ்ச வெளியின் ஒளியும் இருளுமான கால கட்டங்கள், நட்சத்திரக் கதிரொளிகள், திதி கால விசேடாம்சங்கள் கருவின் உயிர்ப் பந்தான உடலைத் தூக்கி உயிரணுக்களை இயக்கி ஆசைகளை மூட்டும். அவ்வேளையில் தான் உடலின் உள்ளுறுப்புகள் ஒவ்வொன்றும் கரு வளர்ச்சியில் தத்தம் வடிவைப் பெற்றவண்ணமிருக்கும். இதில் கபால பாகம் மட்டும் நெற்றிக்கு மேல் ஓர் அங்குல தொலைவில் ஒரு சுண்டு விரல் உள்நுழையும் அளவான துவாரத்தோடு முழுமை சேராமல் இருக்கும். அந்த உயிர், அன்னையின் கருப்பையை விட்டு வெளியேறிய பிறகு வெளி உலக இருள், ஒளி, காற்று, அருள் மற்றும் அன்னையின் அமுது (பால்) இவற்றால் தாங்கப்பட்டு மெல்ல வளர்ச்சி கண்டு, கபால பாகம் மூடப்பெறும். இதை பொதுவில் இயற்கை என்பார்கள்.

ஆனால், ஆயிரத்தில் ஒருவருக்கு இந்த கபால பாகம் சரியாக மூடப்பெறாது. கைகளால் தொட்டுப் பார்த்தே தலை பாகத்தில் அது மூடப்படாததை உணரலாம். இத்தகைய

கபாலமுடையவர்கள் ஆவிகளோடு எளிதில் பேச வல்லமை யுடைய மீடியங்களாக முடியும். இவர்கள் உடலில் என்டோ பிளாச திரவ அளவு கூடுதலாக இருக்கும். இது காற்றில் அலைந்து திரியும் ஆல்ஃபா, பீட்டா, காமா மற்றும் மின் காந்த அலைகளை மிக வேகமாக ஸ்வீகரித்து உணரக்கூடியது.

புலன்களுக்கு புலனாகாத விஷயங்கள் இவர்கள் சரீரத்தால் ஈர்க்கப்படும். பயிற்சி பெறப் பெற இவர்கள் சரீரமே ஒரு மின்காந்த சமுத்திரமாக மாறிவிடக் கூடியது.

இவர்கள் தியானம் செய்தால், அது மிக இலகுவாக இவர்களுக்கு வசப்படும். மனம் மிகச் சீக்கிரம் ஒருமைப் படும். இருந்தும் இல்லாதவராக இவர்களால் ஆக முடியும்.

அப்படி ஒருவர் தன்னை மீடியமாகக் கருதி காற்றுப் புகமுடியாதபடி அல்லது காற்று அவ்வளவாகயில்லாத ஒரு வெற்றிடப் பரப்பை உருவாக்க முடிந்த பாத்திரம் ஒன்றை கவிழ்த்துப் பிடித்து, தன் சிரத்தை அதன் மேல் வைத்து ஒரு தொடர்பினை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். பின் இறந்த வரை எண்ணி தியானித்து அழைக்க. இறந்தவர் அந்தப் பாத்திரம் வசம் நுழைந்து தங்கள் அலை போன்ற வடிவிலான சூட்சும தேக சக்தி யால் அந்தப் பாத்திரத்தை அசைத்து தங்கள் வருகையை நிரூபிப்பார்கள்.

நமது கேள்விகளுக்கு பதிலை அவர்களால் நமது சிரத்தின் வழியாக புகுந்து எழுதிக் காட்டவும் இயலும்.

மிக நீண்ட அந்த விளக்கத்தை படிக்கும் மாதங்கி சற்று நிதானித்தாள். அதுவரை படித்த விஷயம் ஓர் அண்டப் புளுகாகத் தெரியவில்லை. அதில் சில வகை ஆய்வுகளும், அதன் உள்ளடக்கமும் இருப்பதாகவே தெரிந்தது. இந்நிலை யில் கைகள் தானாக தனது கபாலத்தைத் தொட்டு தலைமுடி

நடுவில் நிரடிப் பார்க்கிறது. என்ன ஆச்சரியம்.. குழி போல் லேசாகத் தட்டுப்பட்டது. முழு கபாலமும் சேர்ந்திராதபடி ஒரு குழிப்பள்ளம் தோலைத் தாண்டி உள் பாகத்தில் இருப் பதை விரல் நுனிகள் உணர்த்துகின்றன.

அப்படி என்றால் தான் ஒரு மீடியமா?

காதோரம் ரங்கராஜன் சொன்னதும் ஓடிடத் தொடங் கியது.

‘இந்த மாதிரி விஷயங்களுக்குத் தேவை நிதர்சன மான அனுபவம் மட்டுமல்ல.. நிரூபணமும் கூட...நீ நிரூ பணங்களைத் தேடு.. புகைப்படம் எடு.. குரலை ரெக்கார்டு செய்..?’

அவள் சிலையாட்டம் நிற்கும் அந்த தருணத்தில் நட்டு மாமா ஒரு மாந்திரீகனோடு வீட்டு வாசலுக்கு வந்திருந் தார். கூடவே ஸ்ரீதரனும்..

அடேயப்பா என்ன ஒரு வேகம்! வந்த மாந்திரீகன் வீட்டு வாசலிலேயே நின்று விட்டான். கறுப்பு வேட்டி கட்டி நெற்றி கொள்ளாதபடி விபூதி, குங்குமம், சந்தனம், மை செந்தூரம், இரத்தத்திப்பி என்று சகலமும் தரித்திருக் கிறான். மத்திமமான வயது.

கையில் ஓர் எலும்புத் துண்டை கோலாட்டம் பிடித் திருந்தான். இவையெல்லாம் வழக்கமான மாந்திரீக லட்சண சொரூபங்கள் தான். வாசலில் நிற்பவனைச் சுற்றி நட்டு மாமாவும், ஸ்ரீதரனும் நிற்க, உள்ளிருந்து எல்லோரும் எட்டிப் பார்த்து இதயத்தில் மிகுந்த துடிப்பை உருவாக்கிக் கொள்ள, அவன் பார்வை வீட்டுக் கூரை மேல் எதையோ உற்றுப் பார்க்க ஆரம்பித்தது.

“கணியரே.. இங்க இப்படி நின்னுட்டா எப்படி?” என்று

நட்டு மாமா கேட்டும் பலனில்லை. அவர் எதனால் அவரை கணியர் என்றாரென்பதும் தெரியவில்லை.

உற்றுப் பார்த்த அவன் அப்படியே ஆகாசத்துக்கு பார்வையை உயர்த்தியபோது நான்கு கழுகுகள்! ஒன்றன் பின் ஒன்றாய் ஒரு சிறு வட்டம் போட்டபடி மிகச் சரியாக நேர் மேலே ஓராயிரம் மீட்டருக்கு குறைவில்லாத உய ரத்தில் பறந்த வண்ணமிருந்தன!

பார்வையை தாழ்த்தி பக்கத்து மரத்தைப் பார்க்கவும் கிளை ஒன்றில் வயதான அண்டங் காக்கை ஒன்று கண் ணுக்குப் பின்னால் சிங்கப் பிடரியின் சிலிர்ப்பு போல கழுத்துப் பாக முடிக் கற்றைகளைச் சிலிர்ப்பிக் கொண்டு நெட்டக் கூரான ஒரு பார்வை பார்த்தபடி அமர்ந்து கொண் டிருந்தது!

★ ★ ★

# 10

*கன்னியாகுமரி மாவட்டத்தில் திற்பரப்பு என்று ஓர் இடம். இங்கே ஒரு நீர்வீழ்ச்சியும் உண்டு. இந்த திற்பரப்பில் ஒரு சாமியார் இருக்கிறார். நிஜமாகவே போலித்தனமில்லாத நிஜ சாமியார். இவரை ஒரு நண்பர் அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த சாமியார் என்ன நினைத்தாரோ தெரியாது. ஓர் உலோக விக்ரகத்தை என் கையில் தந்து, 'இதை உன் வீட்டுக் கிணற்றில் போட்டுவிடு. பிற்காலத்தில் ஒரு பெரிய நன்மைகளைத் தரும்' என்றார். இந்த விஷயத்தை விஞ்ஞானக் கண் கொண்டு பார்த்தேன். ஓர் எழவும் புரியவில்லை இருந்தாலும் விக்ரகத்தை கிணற்றில் போட்டு விட்டு நானும் ஒரு சராசரி மனிதன்தான் என்று நிரூபித்து கொண்டேன்.'*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து*

கணியன் என்னும் அந்த மாந்திரீகன் கூரை. வானம், மரம் என்று மூன்று இடங்களைப் பார்ப்பதையும், பின் கண்கள் இழுக்க வாசல் நிலைக்கால் மேல் நின்று தியானிக்கத் தொடங்கியதையும் பார்த்துக் கொண்டே வந்தாள் மாதங்கி.

பக்கமாக ஓர் அரசனை ஒட்டி நிற்கும் அடிமைகளைப் போல கை கட்டி வாய் பொத்தாத குறையாக நிற்கும் நட்டு மாமா, ஸ்ரீதரன்.

நடுவில் ஜானகி மெல்ல பயத்துடன் பார்த்தாள்.

கணியனும் அவளை தியானம் கலைந்து பார்த்தான்.

''இவங்கதான் வீட்டு எஜமானியம்மாவா?'' நல்ல தமிழில் கேட்டான்.

''ஆமாம் வைத்தியரே..''

''சரி உள்ளே போகலாமா?''

''தாராளமா..''

அவர்கள் பிரவேசம் உள் நிகழத் தொடங்கியது. ஆனால், கணியன் மட்டும் உள்ளே வந்த வேகத்தில், ஒரு ஹாலில் விளக்கேற்றி வைக்கப்பட்டிருக்கும் பரமேஸ்வரனின் படத்தைப் பார்த்துவிட்டு திடுக்கிட ஆரம்பித்தான். நட்டு மாமா அதை சரியாக கவனித்து கேட்டார்.

''என்ன வைத்தியரே.. இவரை ஏற்கனவே தெரியுமா உங்களுக்கு..?''

''தெரியும்..''

''எப்படி...?''

''இவர் என்னைப் பார்க்க வந்தார்.''

''உங்களையா.. எப்போ?''

''சொந்தக்காரங்க தொல்லை தாங்க முடியல. சூன்யம் வெச்சுட்டாங்க. எடுத்துத் தாணும்னு.''

''நீங்க என்ன சொன்னீங்க..''

''அப்ப நான் உபவாசத்துல இருந்தேன். இரண்டு நாள் கழிச்சு வரச் சொன்னேன். ஆனா இரண்டு நாள்ல செத்தே போயிட்டாராக்கும்?''

''கடவுளே.. இந்த கண்றாவியெல்லாம் உன் அப்பாவுக்கு தெரிஞ்சு, அதனாலதான் அவர் அழிஞ்சு போனாரா.. கடவுளே!''

நடுவில் டைனமைட் வைக்கப்பட்ட பாறை நில மாட்டம் வெடித்து அழுதாள் ஜானகி.

''பயப்பட வேண்டாம். இனி நான் பாத்துக்கறேன். ஆனா ஒண்ணு.'' கணியன் இடைவெளி விட்டு நிறுத்த, எல்லோர் பார்வையும் அந்த நபரின் முகத்தையே பார்த்தது.

''நான் இங்க சூன்யம் எடுக்கற வரை யாரும் என் பேச்சுக்கு மறுபேச்சு பேசக்கூடாது. அவநம்பிக்கையோ, அதிர்ச்சியோ துளியும் அடையக்கூடாது. அப்படின்னா நான் இந்த விஷயத்துல இறங்கறேன்.''

''என்ன வைத்தியரே நீங்க.. இதை நீங்க சொல்லணு மாக்கும். எங்க நிம்மதியே உங்க கைல தான் இருக்கு. நீங்க என்ன சொன்னாலும் கேக்றோம்.''

நட்டு மாமா பலமாக அட்சதை போட்டார். ஸ்ரீதரன் ஆமோதித்தான். நடுவில் மாதங்கியைப் பார்த்தான். அவள் கண்களில் கேலி, கேள்வி, கோபம் என்று சகலமும், அவனை அது என்னவோ செய்ய முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

'ஸ்ரீதரா நீகூடவா இவற்றை நம்ப ஆரம்பித்து விட்டாய்?'

இதை கணியனும் கவனித்தது போல தோன்றியது.

மாதங்கியை கையசைத்து அருகில் அழைத்தான்.

அவள் நிதான நடை நடந்து அருகில் வந்தாள். கைகளை முன்புறம் கட்டியிருந்தாள்.

''கைகட்டாதே..''

''ஏன்?''

''கூடாது. நீலிக்கு பிடிக்காது.''

“யார் அது நீலி?”

“என் இஷ்ட தெய்வம். ஏழு தடவை மனுஷப் பிறப் பெடுத்து ஏழு தடவையும் கன்னியாகவே இருந்து பின்னே அக்னியில் பிரவேசம் செய்து உயிர்விட்டவ..”

“கதை நல்லா இருக்கு.. இது என் வீடு, இது என் கை, கட்டிக்கறது என் மேனரிசம். உங்க நீலிகிட்ட சொல் லுங்க. இது மேனர்ஸ் இல்லாத ஆசைன்னு..”

மாதங்கி அந்த பதிலால் தன்னை இனம் காட்டிவிட் டாள். கணியன் முகம் நல்ல மஞ்சள் பப்பாளியாட்டம் மாறிப்போனது.

“நடராஜன்..” அலறினான்.

“என்னம்மா மாதங்கி இது. என்ன பேச்சுஇது. முதல்ல கை கட்றத விட்டுட்டு வைத்தியர் கால்ல விழு. இவர் உங்க குடும்பத்தையே காப்பாத்த வந்தவரம்மா.”

“ஓஹோ.. காப்பாத்த வந்தவரோ.. ஐ டோன்ட் பிலீவ் திஸ் திங்க்ஸ், பில்லி, சூன்யம்னு கதையா விடறீங்க. நான் என் அப்பா என்கிட்ட பேசினதையே நம்பாமலும், நம்பியும் தடுமாறிகிட்டு இருக்கேன். இதெல்லாம் என்ன.. நான்சென்ஸ்.”

“ஜானகி.. இவளை கொஞ்சம் உள்ள கூட்டிப் போய் சமாதானம் பண்றியா.. என்னம்மா இது வெண்ணெய் திரண்டு வரும்போது தாழிய உடைக்கறா இவ?”

“மாதங்கி.. என்னடி இது. போடி உள்ள.. பெரியவங் களுக்கு தெரியாதது உனக்கு தெரிஞ்சு போச்சோ... போடி போ உள்ள..”

“ஐய்யோ அம்மா... இதெல்லாம் பித்தலாட்டம். என் பேச்சைக் கேள்.”

''எது பித்தலாட்டம். எது..?'' கணியன் மிக வேகமாக எழுந்து மாதங்கியை நோக்கி முன் வந்தான். என்னதான் தைரியசாலிப் பெண்ணாக இருந்தாலும் அவன் வந்த விதம் பார்த்து மிரண்டு போனாள் மாதங்கி.

அவன் அவளை உற்றுப் பார்க்கத் தொடங்க, அந்தப் பார்வை அவளை என்னவோ செய்யத் தொடங்கியது. பார்வையா அது? அவனது கருநிறப் பார்வையிலிருந்து கற்றை கற்றையாக ஒளிக் கற்றைகள் பெருகி வழிந்து அவளை அப்படியே வளைத்து மயக்கமடையவும் வைத்தது!

தடுமாறி கீழே விழப் போனவளை ஸ்ரீதரன் தாங்கிக் கொண்டான்.

''இந்தப் பெண்ணை இந்த வீட்ல வைச்சிருக்க வேண்டாம். என் நீலி கோபிப்பா. காரியம் முடியும் வரை இவளை வேறு இடத்துல வையுங்க..''

''வேறு இடமா?''

''ஆமாம் தாமதம் வேண்டாம். சீக்கிரம்..'' கணியன் கத்தவும் ஸ்ரீதரனுக்கு ஓர் ஐடியா தோன்றிற்று. நேராக அத்தை ஜானகியிடம் சென்றான்.

''அத்தே''

''என்ன ஸ்ரீ''

''மாதங்கிய நான் எங்காத்துக்கு கூட்டிண்டு..''

''தாராளமா.. அவ என்னிக்கு இருந்தாலும் உங்காத்துக்கு வரப்போறவதானே? ஆமா அவளுக்கு வந்துருக்கறது சாதாரண மயக்கம் தானே?''

''ஆமாம் அத்தை...!''

ஸ்ரீதரன் முகத்தில் அபார மகிழ்ச்சி, மயங்கியவளை தொட்டுத் தூக்கிக் கொண்டான். லக்ஷ்மியை பார்த்தாள்.

''லக்ஷ்மி நீயும் வா.. ஓர் ஆட்டோவ பிடிச்சு அழைச்சிண்டு வா. ஆட்டோவுல போய் இவளை விட்டுட்டு நாம இரண்டு பேரும் அதே ஆட்டோவுல திரும்பிடுவோம். வைத்தியரே நான் வர ஓர் அரை மணி நேரம் ஆகும். பாதகமில்லையே.''

''இல்ல.. நான் அதுவரை சூன்ய பாகங்களை கண்டு பிடிச்சு வெச்சிருக்கேன். யூ கேன் கோ...''

கணியன் ஆங்கிலமும் பேச அது ரேவதி, லக்ஷ்மியை சற்று ஆச்சரியப்படுத்திற்று.

ஸ்ரீதரன் மாதங்கியோடு வெளியேற கணியனிடம் அவர்கள் ஆச்சரியத்திற்கான பதில்.

''நான் ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர். கோல்டு மெடலிஸ்ட்! இந்த மாந்திரீக வித்தை எங்க குலத்தொழில். கோடியில் ஒருத்தர் தான் மாந்திரீக குருவாக முடியும். இது அத்தனை சிக்கலான வித்தை. ஆகையால என் அப்பா என்னை டாக்டரா நீ இருக்க வேண்டாம். உன் ஜாதகத்துலையும் அது இடமில்லைன்னு சொல்லி என்னை இதுல இழுத்துவிட்டுட்டார். சரி... சரி மொதல்ல நான் கேணிய பாக்கணுமே.. இந்த வீட்ல கேணி உண்டு தானே?''

''இருக்கு வைத்தியரே..'' நட்டுமாமா பரிதவிப்போடு கிணற்றுப் பக்கம் செல்ல கிளம்பியும் விட்டார்.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க அந்த வைத்தியன் இடுப்பிலிருந்து வேர் போன்ற ஒன்றை எடுத்தான்.

ஹாலின் நடுவில் வைத்து உற்றுப் பார்க்கத் தொடங்கினான்.

சில விநாடிக்குப் பிறகு அது தீப்பற்றிக் கொண்டது. அதிலிருந்து மிக அடர்த்தியாக புகையும் தோன்றி சுற்றி நிற்பவர்கள் மூக்கை, கண்ணை கரிக்க விட்டு தும்மலும் போடச் செய்தது.

கணியன் கை கூப்பி கண் மூடியிருந்தான். உதடு பட்டாம் பூச்சி சிறகசையும் தினுசில் ஏதோ மந்திர உச்சாடனத்தில் இருந்தது.

சில நொடிகள் தான். பின் ஒரே பாய்ச்சல் வீட்டுக்குள் அப்படி ஓட வேண்டிய அவசியமில்லை. இருந்தும் ஓடி கிணற்றை எட்டி நின்றான். கிணற்றை எட்டிப் பார்க்க விடாதபடி யாரோ அவனை இழுத்துப் பிடிப்பதாக ஒரு திணறலையும் காட்டுகிறான்.

"என்ன வைத்தியரே.. என்ன பண்ணுது?"

"பயப்படாதே.. இந்தக் கிணத்துல ஒரு சூன்ய பாகம் இருக்கு. அதான் என்னை வர விட மாட்டேங்குது.."

"தண்ணிக்குள்ளையா?"

"ஆமாம்.. இறங்கி மூச்சு கட்டி அதை வெளிய எடுக்கணும்.. விடமாட்டேன்.. விடமாட்டேன்.."

அந்த வைத்தியன் பலமாகக் கத்த. அக்கம் பக்கத்து வீட்டு மாடியில் அந்தந்த வீட்டுக்காரர்கள் நின்று பார்த்தபடி இருந்தனர்.

அவர்களை எல்லாம் பார்த்து உள்ளே போகும்படி சமிக்ஞை காட்ட ஆரம்பித்தான்.

அவர்கள் போகாதபடி அவனைப் பார்க்க, அவன் இடுப்பு சுருக்குபையில் இருந்து விபூதி எடுத்து அவர்களை நோக்கி வாயால் ஊதிவிட்டுப் பின் கத்தினான்.

“யாரும் பாக்காதீங்க. பாத்தா பார்வை போயிடும். உங்க நல்லதுக்கு சொல்றேன். பாக்காதீங்க, உள்ளே போங்க. இந்த வீட்ல கூட யாரும் பார்க்க வேண்டாம். உள்ள போயி டுங்க.. போயிடுங்க..” அவன் கத்த அவர்களும் பயத்துடன் உள்ளே போகத் தொடங்க, அதே சமயம்..

★ ★ ★

# 11

*'பில்லி சூன்யம் இருப்பதாக நான் நம்புமளவு விஷயங்கள் நடந்து விட்டன. ஆனால் எனக்கோ என் குடும்பத்துக்கோ ஒன்றும் ஆகாது. யாராலும் ஒன்றும் செய்ய முடியாது என்றார் திற்பரப்புக் காட்டில் வாழும் அந்த சாமியார்.*

*எப்படி என்று கேட்டபோது, உனக்கு உதவி செய்யத்தான் நான் பைரவியை அனுப்பியுள் ளேன். ஜல சமாதியில் இருந்து அவள் பரிபாலிப் பாள் என்றார்.*

*இதை எல்லாம் அனுபவித்துப் பார்த்துதான் அறிய வேண்டும். அதுவரை புத்தி ஏதோ கேட்டுக் கொள்ளும்.'*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...*

**கை**த்தாங்கலாக மாதங்கியோடு வீட்டுக்குள் நுழை யும் ஸ்ரீதரனையும், லக்ஷ்மியையும் பார்த்து ராமசேஷன் அதிர்ச்சி கொண்டார்.

ஏற்கெனவே வாதம் வந்து இழுத்துக் கொண்டு விட்டகையும் காலுமாய் கிடப்பவர் முகத்தில் சுமாரான கோணல், இப்பொழுது அது அசுர வளைவுகளைக் கொள் கின்றது. பேச்சும் சரியாக வர மறுக்கின்றது.

"ஸ்ரீ... ஸ்ரீ.. எந்தா இது... எந்தா...?"

"ஒண்ணுமில்லப்பா, மாதங்கிக்கு கொஞ்சம் உடம்பு முடியல அதான் அங்க ஒரே கசகசன்னு இருக்குன்னு இங்க கூட்டிண்டு வந்துருக்கேன். கொஞ்சம் பார்த்துக்குங்கோ, வந்துடறேன்." அப்படி சொல்லி விட்டதற்காக தலையிலும் பின்னர் அடித்துக் கொண்டான்.

'இவரைப் பார்த்துக் கொள்ளவே ஒருவர் வேண்டும். இவரைப் போய் நான் மாதங்கியைப் பார்த்துக் கொள்ளச் சொல்கிறேனே... ச்சை!' அவன் சலிப்போடு மாதங்கியை படுக்க வைக்க லக்ஷ்மி, மாமாவை நெருங்கிச் சென்று நலன் விசாரிக்க ஆரம்பித்தாள்.

அப்பாவின் குரல் மீண்டும ஒலித்தது.

'எழுந்துருடா கொழந்தே..

என்னடா கொழந்தே இப்படி மயங்கிட்ட? வந்திருக்கிறவன் சூன்யம் எடுக்க வரலைடா, வைக்க வந்துருக்கான்...!'

எழுந்த நொடிப் போதில் மறுபடியும் காதோரமாக கிசுகிசுப்பு, அதுவும் விபரீதச் செய்தியாக.

அய்யோ அப்பா...!

மாதங்கி வாரிச்சுருட்டிக் கொண்டு எழ ஆரம்பித்தாள். புதிய சூழ்நிலை ஆச்சரியப்படுத்தியது.

மயங்கியது தன் வீட்டில், விழித்தெழுவது இன்னொரு வீட்டிலே?

சில நொடிதான்..

மாமா வீடென்பது பிடிபட அறையை விட்டு வெளியே வந்தாள். திரும்பவும் காதுக்குள் சற்று முன் கேட்ட குரலின் ஓட்டம்.

"அவன் சூன்யம் எடுக்க வரலை.. வைக்க வந்துருக்கான்!"

மாதங்கிக்கு தலையை திரும்பவும் சுழற்றியது.

எதிரில் மாமா ராமசேஷன்.

சற்று தள்ளி வெற்றிலைப் பொட்டியும் குமுதமும் ஒன்றன் மேலோன்று குந்தியிருக்க அதை எடுக்க படாத பாடுபட்டுத் கொண்டிருந்தார்.

மாதங்கி நெருங்கி பெட்டியை எடுத்து அவர் அருகே கொண்டு சென்று நீட்டினாள்.

"மாதங்கி..."

"நான்தான்... நன்னா இருக்கேளா... சாரி! எப்படி இருக்கு உடம்பு?"

அவர் கண்களில் அடுத்த நொடி ஈரம் பீய்ச்சியடித்தது.

"அந்த ஷிவன் என்தை இப்டி பண்திப்புட்டான்.." விசும்பி வெடித்தார்.

"நான் எப்படி இங்க வந்தேன் மாமா..?"

"ஸ்ரீ.. ஸ்ரீ.. ஸ்ரீதான் கூத்திண்டு வந்தா..." அவர் கோணல் வாயில் இருந்த வார்த்தைகள் சிரமத்துடன் வெளிவர அவளிடம் சிந்தனையின் கூட்டணி.

"ஒக்கார்.. ஒக்கார்.." அவர் பரிவு காட்டினார்.

"இல்ல மாமா.. அவசரமான வேலை இருக்கு. தப்பா எடுத்துக்காதேள்.. நான் அப்புறமா வந்து பார்க்கறேன்." அவள் உடனேயே வெளியே ஓட ஆரம்பித்தாள்.

'ம்ம் சீக்கிரம்..' என்கிற மாதிரி காதோரம் திரும்பவும் ஒரு குரல்!

அந்தக் கிணறு சூரியனைப் பிடித்து வைத்திருந்தது. நீர்ப்படுகையில் வெள்ளித் தன்மை. தோட்டத்து மாத்து இலை தழைகள் விழுந்து படமாட்டம் அங்கங்கே மிதந்த படி இருக்க கிணற்றின் உட்பாகம் செங்கல்லால் கட்டப் பட்டு அதிலும் உதிர்வுகள். அங்கங்கே கால் பதித்து இறங்கத் தோதாக ஓரிரு செங்கல் நீக்கப்பட்ட துவாரங்கள்.

எட்டிப் பார்க்கும் கணியன் முகத்தில் விதவிதமான உணர்ச்சிக் கோடுகள். நட்டு மாமா இடையில் புகுந்தார்.

"கிணத்துலதான் சூன்யம் இருக்குன்னீங்களே.. இறங்கி எடுக்கணுமோ?"

கணியன் முகத்தில் அதற்கான மறுப்பு.

"இப்படியே பார்த்து நின்றுகிட்டிருந்தா எப்படி வைத்தி யரே..?"

"என்ன செய்யறதுன்னு தான் யோசிக்கறேன். நீருக் குள்ள இருக்கு ஒரு சக்தி. அதை நீக்கினாத்தான் குடும் பத்துக்கு நல்லது. மூழ்கி எடுக்க யாராலேயும் முடியாது. நீருக்குள்ளேயே அது தன் சக்தியை இழந்தாகணும், அப்ப தான் நல்லது."

"சரி என்ன செய்யலாம்?" கணியன் முகம் அடுத்த நொடி நிமிர்ந்து ஒரு வட்டம் அடித்தது. சுற்றிலும் இமைக்க மறந்த விழிகளுடன் லக்ஷ்மி, ரேவதி சற்றுத் தள்ளி ஜானகி, ஸ்ரீதரன் இன்னும் சிலர்.

''எல்லோரும் உள்ள போங்க.. நடராஜன் ஸ்ரீதரன் மட்டும் இங்க இருந்தா போதும்.''

அவன் கருத்துக்கு அரைமனதாக எல்லோரிடமும் அங்கீகாரம்.

''யாரும் இங்க திரும்பிப் பார்க்கக்கூடாது. நான் இப்ப ஒரு மந்திரம் ஜெபிக்கப் போறேன். பாக்கறவங்க கண்ணு போனா நான் பொறுப்பில்ல..''

கணியனின் மலிவான எச்சரிக்கைக்கு நல்ல பலன். எல்லோரும் சிட்டாய்ப் பறந்து மறைய, ஸ்ரீதரன் அழைக்கப் பட்டு நெருங்கினான்.

''ஒரு முக்கிய வேலை.''

''சொல்லுங்க.''

''நல்லா கேட்டுக்கோ... உனக்கு தெரிஞ்சு இந்த வீட்ல யாரும் தீட்டான பெண்கள் உண்டோ?''

''தீட்டான பெண்ணுன்னா?''

''மாச விலக்கான பெண்ணுன்னு அர்த்தம்.. அந்த மூணு நாள் ஒதுங்கி ஓரம் கட்டி உட்காருவாங்களே.. தெரியாது?''

''ஆங்.. அப்படி யாரும் இன்னிக்கு தேதிக்கு இல்ல.''

''வைத்தியரே.. அவங்க எதுக்கு?'' - நட்டுமாமா திரும்ப மூக்கை நுழைத்தார்.

''அவங்கதான் இப்ப எனக்கு முதல் தேவை. நான் ஒரு துணி தரேன்.. அதுல அவங்க.. அவங்க..''

மிச்சத்தை அருகில் அழைத்து காதில் சொன்னார்.

ஸ்ரீதரனும், நட்டு மாமாவும் தொண்டையில் டென்னிஸ் பந்து இறங்குகிற மாதிரி மிடறு விழுங்கினார்கள்.

''தாமதிக்க வேண்டாம். கஷ்டம் தான். இருந்தாலும் எனக்கு அந்த இரத்தத் துணி வேணும். கிடைக்குமோ?''

''எப்படி வைத்தியரே.. போய் கேக்கறது. காரித் துப்பிட மாட்டாங்க?''

''பயப்பட வேண்டாம். நான் ஒரு மந்திரம் சொல்றேன். அதை பதினொரு முறை சொல்லிட்டு, யார்கிட்ட இந்த உதவி கேட்டாலும் செய்வாங்க. அந்த மந்திரம் அரை நாழிதான் அவங்களைக் கட்டும். அதுக்குள்ள காரியம் முடியணும். காரியத்தை முடிக்கணும்.''

''முயற்சி செய்யறோம். இந்த வீட்ல இப்ப அப்படி நபர்கள் இல்ல.. வெளிய தான் விசாரிக்கணும்.''

''விசாரிச்சு சீக்கிரமா திரும்பி வாங்க. நானும் சில பூஜை பொருள்களை எடுத்துக்கிட்டு வரேன். தேவாங்கு இரத்தம், கபால ஓடு, பன்றி நகம், அழுகண்ணி வேர்னு நானும் நிறை சேகரிக்கணும். இந்த கிணத்தை நான் இப்ப பந்தனம் செய்து கட்டிட்றேன். இதுல தண்ணி எடுக்கவோ, குடிக்கவோ கூடாது. நாளை காலை சூரிய உதயத்தின் போது நான் வருவேன். அப்ப நான் சொன்னதோட நீங்க தயாரா இருங்க. எல்லாம் சரியா இருந்தா. அரைமணில பூஜை முடிஞ்சு. நீரை சுத்திகரிச்சு சூன்யத்தை எடுத்துடு வேன். அப்புறமா ஒரு பிரச்சினையும் இருக்காது உங்களுக்கு..''

''அப்ப அதுவரை...?''

''யாரும் இந்த கிணத்துப் பக்கம் எட்டிக்கூட பார்க்கக் கூடாது. காவலுக்கு நான் க்ருதகியை வைக்கப்போறேன். பல நூறு வருஷமா பித்ருலோகம் போக முடியாம தத்தளிக்கற ஆங்கார தேவதை அவள்.''

கணியன் சொல்லிக் கொண்டே ஒரு மரப்பாச்சி பொம்மையை எடுத்து கிணற்றுத் திட்டின் மேல் வைத்தான். அந்தப் பொம்மைக்கு நாக்கு வெளியே நீண்டிருந்தது. பார்க்க விகாரமாக இருந்தது. தலைவிரி கோலம்.. வட்டக் கண்கள். பெண்களுக்கே இல்லாத உருண்ட தொந்தி! மொத்தத்தில் மிரட்டும் சொரூபம்.

ஸ்ரீதரனுக்கு பார்க்கப் பார்க்க என்னவோ செய்தது. திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வீட்டுக்குள் நடந்தான்.

உள்ளே நுழைபவர்களை எல்லோரும் வெறித்துப் பார்க்கிறார்கள்.

''என்ன.. எடுத்துட்டீங்களா?'' ஜானகி திணறித் திணறி கேட்டாள்.

''காலைல தான் எடுக்கணும். அதுவரை யாரும் கொல்லைப்புறம் போகாதீங்க. கிணத்துத் தண்ணியையும் தீண்டக்கூடாது. நடராஜன் நான் கிளம்பறேன்..''

கணியன் கிளம்பும போது மூச்சிறைக்க உள்ளே நுழைந்தாள் மாதங்கி. எதிரில் வந்து நிற்பவளைப் பார்த்து கணியனிடம் கணிசமான அதிர்ச்சி. ஸ்ரீதரனும் அதிர்ந்து போய் பார்த்தான். சில நொடிகள்தான். கணியன் கடந்து மறைந்தான்.

''மாதங்கி.. என்ன இது ஓடி வந்தியா?''

“பின்ன.. ஆமா என்ன நடந்தது.. இந்த வீட்ல?”

“ஒண்ணும் நடக்கல.. நீ மயங்கினியே, எப்ப தெளிஞ்சது!”

“கேட்டதுக்கு பதில் சொல்லு... அந்த ஆள் என்ன செய்தான்..?”

“மொள்ள... மொள்ள... அமைதியா பேசு.”

ஸ்ரீதரன் அவளை அடக்க முயல, சட்டென்று பக்கமாய் உள்ள அறையில் நுழைந்து தாளிட்டுக் கொண்டாள்.

உள்ளிருக்கும் மேஜை நாற்காலி அருகே சென்று அமர்ந்து முன்னால் கை பரப்பி தலையை சாய்த்துக்கொண்டு அழப் பார்த்தாள்.

‘அசடே...’ என்றது உள்மனது.

நடந்தது. நடப்பது எல்லாம் சற்று குழப்பி எடுத்தது. சிக்கலாகிப்போன நூல்கண்டின் ஆரம்பம் கண்டுபிடிக்க அவஸ்தைப்படுகின்ற மாதிரி ஓர் உணர்வு தோன்றி மறைந்தது.

நெடுநேரம் எதையும் யோசிக்கவே தோன்றவில்லை. கண்களில் ஒருவகை குத்தி நிற்கும் தன்மை. மேஜை மேல் இறந்தவர்களோடு பேசுவது எப்படி என்னும் அந்தப் புத்தகம்.

கண்மணிகளில் அசைவு நேரிடும் போது அந்தப் புத்தகம் படுகிறது. அடுத்த விநாடியே காசா பணமா பேசிப் பார்க்க முனைந்தால் என்ன என்று ஓர் எண்ணம்.

மாதங்கியின் இரத்தத்தில் குளுகோஸ் கரைவது போல புதிதாக ஒரு தெம்பு.

புத்தகத்தை புரட்டி பேசும் முறையை வாசிக்க ஆரம் பித்தாள்.

‘இறந்தவர்களை எண்ணித் தியானியுங்கள். அவர்கள் முகம் மட்டும் நினைவில் நிற்க புற உலகை மறந்துவிட்டு அவர்களை மனதால் அழையுங்கள். அந்த அழைப்பு அசா தாரண அழைப்பாக இருக்கட்டும். ஒரு மைதானத்தின் நடுவில் நின்று கொண்டு வானத்தைப் பார்த்து தொண்டை கிழியும் வண்ணம் கத்தினால் எப்படி இருக்கும். அப்படி உணர்வு வயப்பட்டு அழையுங்கள். அழைக்கும் வேளை அஸ்தமனமாக இருப்பது நல்லது. இங்கே அழைப்புதான் முக்கியம். அதில் இருக்கும் நம்பிக்கையும் உணர்ச்சி வயப்படும் அதனால் உங்கள சரீரத்தில் நிகழும் பௌதீக மாறுதல்களும் மிக மிக முக்கியம்.

அப்படி பிரார்த்தித்து அழைக்கும்போது மறவாமல் சம்மணமிட்டு அமர்ந்த நிலையில் உங்கள் நெற்றி முன் குனிந்து தரை மீது பட்டபடி இருக்கட்டும். முதுகுத்தண்டு பாகம் வான் நோக்கியது போன்ற அமைப்பு மிக முக்கிய தேவை. இப்படி இருந்த நிலையில் உங்கள் பிரார்த்தனை பலித்து நீங்கள் அழைத்த ஆவியானது உங்களில் இறங்கிப் பேசத் தொடங்கும்.

உங்கள் சரீர அமைப்பைப் பொறுத்து உங்கள் குரல் மூலமாக, கைகளால் எழுதிக் காட்டுவதன் மூலமாக மீடிய மாகி நீங்கள் உங்கள் கடமையைச் செய்வீர்கள்!’

முக்கியமான அந்த விஷயத்தைப் படித்தவள் அது உண்மை, பொய் என்கிற ஆராய்ச்சியை மூட்டை கட்டி

விட்டு மனதுக்குள் அப்பா என்று விசும்பி அழ ஆரம்பித் தாள்.

இந்த வயதிலும் கட்டிப்பிடித்து கழுத்துப் பாகத்தில் அவர் தரும் கனிவான முத்தம் முதலில் உணர்வில் சுரந்தது. ஒரு ரயில் பயணத்தில் குளிரெடுக்க அவர் தன் வேட்டி யால் போர்த்திவிட்டு அடைகாத்தது போல அமர்ந்திருந்தது அடுத்துத் தோன்றி நெகிழ்த்தியது.

தன் கடிதங்களை எல்லாம் பீரோவில் வைத்து பூட்டி யதைப் பார்த்து என்ன இது பணமாட்டம் பீரோவில் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்க, பணத்தைக் கூட வெளி யில் வைப்பேன். உன் கடிதம் எனக்கு அதுக்கும் மேலடா குழந்தை என்று சொன்னது மனதை அழுத்தியது. கண் ணில் கசிவு தொடங்கியது. 'அப்பா... அப்பா... அப்பா... வாப்பா.. குழப்பமா இருக்குப்பா.. நீயா பேசினே.. நம்ப முடியலப்பா... அப்படி வளர்த்தது நீ தானே?... வாப்பா... என்ன நடக்குது எங்களச்சுற்றி...? சொல்லுப்பா... நீ காப்பாத்தலேன்னா யாருப்பா காப்பாற்றுவா... வாப்பா... வாப்பா...' மாதங்கி உள்ளுக்குள் பரமேஸ்வரனை நினைத்துக் கரைந்து வருந்தியதற்கு பலன் அடுத்த நொடியே கிட்டியது.

தீச்சங்கு பட்டது போல் ஒரு கட்டத்தில் சிலிர்த்து எழுந் தவளின் கரங்கள் மேஜை டிராயரை திறந்து பேனாவை எடுத்தன. பேனாவும், ஒரு வெள்ளைத்தாள் மேல் ஓடத் தொடங்கியது. அச்சு அசல் பரமேஸ்வரனின் கையெழுத் தில்..

'மாதங்கி.. என் கொழந்தே! நான் இருக்கேன்டா

கவலப்படாதே... முதல்ல நம்ம வீட்டுக் கிணத்தை காப் பாத்து. கிணத்து திட்டு மேல அந்த வைத்தியன் வெச்சு ருக்கற அந்த பொம்மைச் சனியனை தூக்கி நெருப்புல போடு. காலைல பூஜை நடக்கவிடாதே.. அப்புறமா கூப்பிடு வரேன்... அப்பா.'

பேனா ஒடிந்தது போல் கை நழுவியது. மாதங்கியும் ஒரு புதிய அனுபவ வயப்பட்டவளாக சிலிர்த்துப் போய் மீண்டும் எழுதியதைப் படிக்கத் தொடங்கினாள்.

★ ★ ★

*அமானுஷ்ய அனுபவங்கள் பற்றி அந்த சாமியார் சொன்னதில் தான் எத்தனை பொருள்.. எத்தனை பொருள். ஒருவருக்கு இருக்கும் நம்பிக்கை இன்னொருவருக்கு ஏன் இல்லாமல் போகிறது என்று கேட்டேன். பிரசவ வேதனை பற்றி உங்களுக்கு ஏதும் தெரியுமா? என்று திருப்பிக் கேட்டார். மிக அதிக பட்ச வேதனை அது என்று மட்டும் தெரியும் என்றேன். உம்மால் உணர முடியுமா? என்று திரும்பவும் கேட்டார். அது எப்படி சாத்தியம் என்றேன். என்றால், உம்மால் உணர முடியாத அது பொய்யா என்று திருப்பிக் கேட்டார். அது எப்படி பொய்யாக முடியும் என்றேன். அமானுஷ்ய அனுபவங்களும் அப்படித்தான். அனுபவ வயப்பட்டவன் அடித் துத்தான் பேசுவான். படாதவர்கள் எதிர்த்துத் தான் பேசுவார்கள் என்றார்... இதில் நிறைய உட்பொருள் இருப்பது தெரிந்தது.*

- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...

**மா**தங்கியிடம் சிலிர்ப்பு, உதறல் எடுத்தது உடம்பு. இதுவரை ஏற்பட்டிராத அனுபவம் தான் எழுதியதைப் பார்த் தாள். தன் கையெழுத்தேயில்லை. அச்சு அசல் அப்பாவின் கையெழுத்து! திரும்பத் திரும்பப் பார்த்தாள். வியந்தாள். முதலில் கொஞ்சமாக... பின் நிறைய்ய.. அப்புறம்தான் அந்த செய்தியே உறைத்தது. 'அந்த பொம்மையை எடுத்து

எறி, கிணற்றைக் காப்பாற்று' என்ன இதெல்லாம்..? திரும்பவும் புத்திக் குழப்பம்.

நிறையக் குழம்பி, நிறைய வியர்க்கும்போது, கதவு தட்டப்படும் சப்தம், எழுந்து சென்று திறந்தபோது எதிரில் ஸ்ரீதரன். பார்வையே புருவத் துணையோடு கேட்டது.

"என்ன?"

"உனக்கு போன்."

"யார்கிட்ட இருந்து?"

"எடிட்டர் ரங்கராஜன்."

அடுத்த நொடி பாய்ச்சல் அவளிடம். பற்றுதல் ரிசீவரிடம்.

"ஹலோ சார்..."

"எப்படிம்மா இருக்கே? சும்மா தான் போன் பண்ணினேன்."

"சார் ஓர் ஒண்டர் எக்ஸ்பீரியன்ஸ்."

"என்னம்மா."

"நானே ஒரு மீடியம் சார். அப்பா என் உடம்புல வந்து ஒரு மெஸ்ஸேஜ் சொன்னார்."

"ஐ.சீ."

"சாதாரணமா கேட்டுக்காதீங்க சார். இட் ஈஸ் ரியலி ஃபென்டாஸ்டிக் எக்ஸ்பீரியன்ஸ். அப்பா என் மேல வந்து என் கை வழியா எழுதிக் காட்டினார். அவர் கையெழுத்து தான். பார்த்தா அசந்து போயிடுவீங்க. இது நீங்க கேட்ட விட்னஸ்."

"அப்படி இல்லம்மா.. அப்பா, அம்மா கையெழுத்து பசங்களுக்கு பொருந்தி வரும். இது வந்த வகையை.."

“நோ சார்.. நீங்க மெட்ராஸ்ல இருந்துகிட்டு புரியாமலே பேசறீங்க. வுட் யு ப்ளீஸ் நேர்ல வாங்க சார். வீடே ரணகளம். மாந்திரீகன்லாம் வந்துட்டு போயிருக்கான்.”

“சரிம்மா.. இப்பவே என் கார்ல கிளம்பறேன். டோண்ட் ஒர்ரி...”

“தேங்க் யூ ஸோ மச் சார்!”

ரிசீவரை வைத்தாள். திரும்பினால் மொத்தக் குடும்பமே அவளைப் பார்த்தபடி..

“அப்பா வந்தார்.. எழுதினார்னுல்லாம் சொன்னியே மாதங்கி.”

லக்ஷ்மி பேச்சை ஆரம்பித்தாள்.

“ஆமாம், நீங்க நம்ப மாட்டீங்க. வாங்க காட்றேன்.’

உள்ளே ஓடி அந்தத் தாளை எடுத்து வந்து நீட்டினாள். அதன் செய்தியும் அந்தக் கையெழுத்தும் அவர்களை நிஜமாலுமே திக்குமுக்காட வைத்தது.

நட்டு மாமா முகத்தில குப்பென்று வியர்வை.

ஜானகி கைகளைக் கூப்பிக் கொண்டு பரமேஸ்வரன் படம் முன் போய் விழுந்தாள்.

“என்னங்க இது குழப்பம்..”

ஒரு பக்கம் சூன்யம் இருக்கு எடுக்கணும்னு மாந்திரீகன் சொல்றான். நீங்க என்னடான்னா இல்லைங்கற மாதிரி பேசியிருக்கீங்களே. கிணற்றை வேற காப்பாற்றச் சொல்லியிருக்கீங்க. ஒண்ணுமே புரியலையே..

“நான் சொல்றேன்.” நட்டு மாமா நடுவில் புகுந்தார். எல்லோர் கவனமும் அவர் பக்கம் திரும்பியது.

''இது மாதங்கியோட சில்மிஷம். பரமேஸ்வரன் வந்தான். எழுதினான்ங்கறதெல்லாம் எதுலேயும் நம்பிக்கை யில்லை. அதனால இதையெல்லாம் தடுக்க இவ ஆடற நாட்கம் இது.''

''மாமா... அந்தக் கையெழுத்தப் பாருங்க...''

''புடலங்கா...அப்பா கையெழுத்து பொண்ணுக்கு வராதாக்கும். நான் சொல்றதை கேளுங்கோ. நான் கூட்டிண்டு வந்த கணியன் ஒண்ணும் கூலிக்கு மாரடிக்கற அல்பப் பய இல்ல. எம்.பி.பி.எஸ். முடிச்சிட்டு டாக்டரா ஸ்டெதஸ்கோப் எடுக்காம குருவோட முதுகெலும்புத் துண்டை எடுத்து அந்த மகோன்னதமான வித்தைக்குக் காவலா இருக்கறவன். அவன் சொன்னா சொன்னதுதான். அவன் நாளைக்கு வருவான். சூன்யத்தை எடுப்பான். உங்களை எல்லாம் ஆபத்துல இருந்தும் காப்பாத்துவான். அப்படியே அவன் சில யோசனைகளைச் சொல்வான். அதைக் கேளுங்க. எல்லார்க்கும் நல்லது. இல்லன்னா உங்க குடும்பத்தை யாராலேயும் காப்பாற்ற முடியாது..''

''இல்ல.. இந்த நட்டு மாமா சொல்றதைக் கேக்காதீங்க. இவரையே நம்பாதேன்னு தான் அப்பா முதலில் சொன்னார்.''

''மாதங்கி ஏன் உன் படிச்ச புத்தியை காட்டி குடும்பத்துல குழப்பம் உருவாக்கறே. இருக்கற பிரச்சினை போறாதா?''

''ஐயோ, அம்மா.. கொஞ்சம் புரிஞ்சுக்கோ. அப்பாவை கொன்னுட்டாங்க. அவர் இயல்பா சாகலை. இப்ப நம்மை மிரட்டி சொத்தை எழுதி வாங்கப் பாக்கறாங்க.''

''போடி.. அப்பாவை யாரும் கொல்லலை. நீ உளறே. சாப்டுட்டு வெத்தலை போட்டுண்டு உக்காந்த வரை நான்

பக்கத்துல இருந்தேன். ஹார்ட் அட்டாக்னு டாக்டர் ஊர் ஜிதம் செய்தார். இன்னும் சொல்லப் போனா இந்த நடராஜ் மாமா கூட அப்ப பக்கத்துல இல்ல. சாப்ட்டு முடிச்சப் பிறகுதான் வந்தார்.''

''இவர் எதுக்கு வரணும். இவர் எதுக்கு வரணும்னேன். இவர் தான் அங்கையும் போவாரே.. இத்தனை நாள் இல்லாம இவர் எதுக்கு வரணும்.''

''நானா வரலை. உன் அப்பா தான் சொத்துத் தகராறு சம்பந்தமா பேசணும் வான்னான். தெரிஞ்சுதா கொழந்தே. எனக்கு எழுபது வயசாறது. இந்த வயசுல என் மேல உனக்கு ஏன் இத்தனை காட்டம்? உன்னை நான் என் பொண்ணாட் டம் நினைக்கறேன்.''

''வாய மூடுய்யா... நீங்க சொல்ற எதையும் நான் நம்ப மாட்டேன். நான் சொல்றத கேளுங்க.''

''ஐயோ.. என்ன மாமா இது. இவ இப்படி பைத்தியம் மாதிரி பேசறாளே. நான் எதைக் கேப்பேன்.''

''எல்லாம் அர்த்த ராத்திரில சுடுகாட்டுக்கு தனியா ஓடிப்போயிட்டு வந்ததன் பலன். கொஞ்சம் கொஞ்சமா மூளை குழம்ப ஆரம்பிச்சாச்சு. அதான்..''

நட்டு மாமா சொல்லச் சொல்ல எல்லோர் முகத்திலும் வெளிறல்.

''சரி... எனக்கு பைத்தியம்னே வையுங்க. நான் உயி ரோட இருக்கற இந்த வீட்ல முட்டாள் தனமான காரியங்கள் நடக்க அனுமதிக்கமாட்டேன். உங்ககிட்ட என்ன பேச்சு?'' என்று கத்தியவள் விறுவிறுவென்று கொல்லைப்பக்கம் நடக்க ஆரம்பித்தாள்.

கிணற்றுத் திட்டின் மேல் அந்த பொம்மை.. க்ருதகி

பொம்மை. ஓடிச்சென்று அதை எடுத்தவள் அங்கிருந்த படியே அதை எடுத்து விட்டெறிந்தாள்.

ஆகாசம் ஏற ஆரம்பித்தது அது.

திரும்பவும் அறைக்குள் நுழைந்து கதவை தாழிட்டுக் கொண்டாள்.

நட்டு மாமா குரல் பெரிதாகக் கேட்டது.

"போச்சும்மா... எல்லாம் போச்சு. இனி உங்கள அந்த ஆண்டவனால கூட காப்பாத்த முடியாது. டேய் ஸ்ரீதர் நான் கிளம்பறேன். காலைல அந்த கணியன் வந்தா நடந்ததைச் சொல்லி திருப்பி அனுப்பு. ஹூம்! பரமேஸ்வரன் குடும்பம் பாழாப் போகணும்னு இருக்கு. நான் என்ன செய்ய.."

நட்டு மாமா துண்டை உதறிக் கொண்டு கிளம்பும் போது ரேவதியின் குரல் பின்னால் இருந்து கேட்டது.

"மாமா... திரும்ப அந்த பொம்மை கிணத்துத் திட்டு மேல!"

★ ★ ★

# 13

*நிச்சயமாக வழக்கு ஜெயிக்கும் என்றார் வக்கீல்! அப்படி மட்டும் நடக்கட்டும், வைத்துக் கொள்வோம் என்று என் பங்காளிகளில் பிரதான மான வீரநரசிம்மன் சொன்னானாம்.*

*இவன் ஜாதகத்துக்கு கல்யாணமே நடக்காது. இவன் ஓர் அசுரகணத்தவன், அநியாயமாக சாகப் போகிறவன் அதாவது உயிரோடு ஒரு மிருகத்துக்கு இவன் இரையாவான். இவனுக்கு மண்ணாகும் பாக்கியமில்லை. திரும்ப இரத்தச் சதையாகும் குரூர வாய்ப்பே உள்ளது என்று இவன் ஜாதகமறிந்த ஒருவர் சொன்னதை நம்ப முடியவில்லை என்னால்..?'*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து..*

ரேவதியின் குரல் ஒட்டு மொத்த வீட்டையும் பர பரக்க வைத்தது. வாசல் வரை போய்விட்ட நட்டு மாமா சட்டையைப் பிடித்து இழுத்தது போல திரும்பினார்.

திரும்பின வேகத்தில் ஸ்ரீதரனோடு சேர்ந்து கொல்லைக் கிணற்றுப் பக்கம் போனார்.

கிணற்றுத்திட்டின் மேல் முன்பு எப்படி வைக்கப் பட்டிருந்ததோ அதே நிலையில் அந்த பொம்மை.

''எப்படி வந்தது?''

மாதங்கியும் ஓடி வந்து பார்த்து விட்டு வாய் பிளந்தாள்.

''பராசக்தி'' என்று நட்டு மாமா கைகளைக் கூப்பினார்.

''சரி... சரி... உள்ள வாங்கோ. கணியன் வைத்தியர் க்ரூதகியை பலமான காவலாதான் வெச்சுட்டுப் போயிருக்கார். அதான் எறிஞ்சும் எங்கோ போய் விழாம திரும்ப வந்துடுத்து. மாதங்கி பார்த்தியா? இனியாவது நம்பு..'' என்று நட்டு மாமா அவளை தொட்டுச் சொன்னார்.

''மாதங்கியிடம் நிஜமாலுமே திணறல். நடுக்கடலில் விழுந்த மாதிரியான திணறல்.

அறை, மெல்லிருட்டு. குத்துக் காலிட்டு அமர்ந் திருக்கிறாள். எட்டிப் பார்க்கிறது ஓர் உருவம்.

அம்மா!

''அம்மாாா...''

''நானேதான்.. ஏன் மாதங்கி இப்படியெல்லாம் நடந் துக்கறே?'' கூடவே லேசான அழுகை.

''எப்படியெல்லாம்..?''

''நட்டு மாமா நல்லவர் நமக்காக சமாதானம் பேச வந்தவர்.''

''ஓஹோ...''

''என்ன ஓஹோ! நம்ம குடும்பத்துல கேள்விப்பட் டிராத விஷயமெல்லாம் நடக்க ஆரம்பிச்சிருக்கு. காசு பணத்தை எப்ப வேணா சம்பாதிச்சுக்கலாம். ஆனா உங்க ளுக்கொண்ணுன்னா?''

''எங்களுக்கு என்ன இப்ப?''

''ஏதாவது ஆயிட்டா?''

''எப்படி...''

''என் அண்ணனுக்கு ஆன மாதிரி...''

''அது ஆர்த்ரைடிஸ்... வயசானா வரும்.''

''இல்லையே. அது சூன்யம்னு உன் அப்பாவே எழுதியிருக்காரே.''

''டைரிய நீயும் படிச்சியா?''

''ஆமாம். நீ சொன்ன பிறகு ஆர்வம் ஜாஸ்தியானது. ஸ்ரீதரனும் வந்து சொன்னான்.''

''சரி என்ன பண்ணலாம்கறே?''

''நாளைக்கே பங்காளிகளை வரச் சொல்வோம். அவங்க கொடுக்கறத வாங்கிப்போம்.''

''உம். அப்புறம்?''

''நாம நாலு பேரும் இந்த ஊரை விட்டே போயிடலாம். உன்கூட மெட்ராஸ் வந்துடறேன். அங்க போய் சந்தோஷமா இருப்போம்.''

''உம். அப்புறம்?''

''என்னடி.. கதையா சொல்றேன். அப்புறம், அப்புறம் கறே?''

''அம்மா உனக்கு இப்படி பேச வெக்கமா... சாரி அம்மா நீ பாவம். உன் பாசம். எங்களுக்கு ஏதாவது ஆயிட்டா என்ன பண்றதுன்னு பயப்படறது. ஒண்ணும் ஆகாது. சொத்தை இழக்கறதுன்னு அப்பா முடிவு செய்திருந்தா அவர் செத்திருக்கவே மாட்டாரே?''

''இழக்கக்கூடாதுங்கறது தானே அவர் ஆசை! அதுக்கு மாறா நாம பயந்து போய் கோழையா ஒதுங்கிண்டா அவர் ஆத்மா சாந்தியடையுமா?''

''எல்லாம் அடையும். நீ போனவரைப் பத்தி நினைக்கறே. நான் வாழற உங்களைப் பத்தி நினைக்கறேன்.''

''திரும்ப சொல்றேன். கவலைப்படாதே. நான் அப்பா பொண். அவர் சொல்றபடிதான் கேப்பேன்.''

''அது என்னடி அது.. அவர் உன்மேல தான் வரு வாரோ? நான் அவர்ல பாதியா இருந்தவண்டி. என் மேல வந்து சொல்லச் சொல்லு நம்பறேன்.''

''அப்ப உனக்கு சந்தேகம் இருக்கு.''

''நிச்சயமா. உன்கிட்ட சொன்னதெல்லாம் அவர் என் கிட்டேயும் சொல்லணும். அப்படியே தைரியமும் சொல் லணும்.''

''அவ்ளோதானே... இரு இப்பவே அப்பாவை கூப் பிட்டு கேக்கறேன்.''

மாதங்கி எழுந்து கதவை அடைத்துவிட்டு திரும் பினாள். முற்றிலுமாய் இருட்டி ஆளாளுக்கு ஒரு வேலை யில் இருந்தார்கள்.

நட்டுவும், ஸ்ரீதரனும் ஹாலில் ஊஞ்சலில் அமர்ந்த படி காரசாரமாய் எதையோ பேசியபடியிருந்தனர்.

பார்த்துக் கொண்டே திரும்பினாள்.

பழையபடி சப்பணமிட்டு அமர்ந்தாள்.

முன்பு செய்த அந்த முயற்சிகள் தொடர்ந்தன.

கையில் நோட் பேடும், பேனாவும்..

மனதில் தியானம். அன்புள்ள அப்பாவைக் குறித்த தியானம்.

'அப்பா... அப்பா... வாப்பா... வா! அம்மா நம்ப மாட் டேங்கறா! வா... வந்து அவளுக்கு புரிய வை! வாப்பா.. வா.. உன் மாதங்கி கூப்பிடறேன். வாப்பா!'

மாதங்கி அவரை உச்சபட்சமாய் அழைக்க அந்த அற்புதம் அடுத்து நிகழத் தொடங்கியது. கைகள் வேகமாக இயங்கின. பேனா எழுதத் தொடங்கியது.

'ஜானகி...

நான்தான் பரமேஸ்வரன் வந்துருக்கேன்.

என்ன நீ.. எப்பருந்து உன் பொண்ணு, புருஷனையே சந்தேகப்பட ஆரம்பிச்சே? உனக்கு பயந்துண்டு தான் நான் பல உண்மைகளை மறைச்சேன். தப்புதான். நீ தாங்கிக்க மாட்டேங்கற எண்ணம்தான் காரணம். போகட்டும். இனி யாவது மாதங்கி சொல்றபடி கேளு.

நான் கொலை செய்யப்பட்டது நிஜம். நட்டுவை யும் நம்பாதே. பங்காளிகள் தான் வெத்தலை பாக்குல விஷம் வெச்சுட்டாங்க. அது நட்டுவா கூட இருக்கலாம். என் பொணத்தை வேகமா எடுக்க அதுவும ஒரு காரணம். அந்த ஐயருக்கு பணம் கொடுத்து தூண்டிவிட்டாங்க. மாதங்கி வந்துருந்தா நிச்சயம் போஸ்ட்மார்ட்டம் பண்ண ணும்னு சொல்லியிருப்பா. நீலம் பாரிச்ச என் உதட்டைப் பார்த்தும் உங்களுக்கு ஏன் இதெல்லாம் தோணலை?

செத்தும் நான் அடங்காம அலையக் காரணம் காசு பணத்துக்காகவோ, சொத்துக்காகவோ இல்லை. அதர்மம் ஜெயிக்கக்கூடாது. அதுக்காகத்தான்!

நம்பு ஜானகி நம்பு. இதுநாள் வரை இங்க சூன்யம் இல்லை. வைக்கவும் முடியலை. ஆனா அந்த கிணற் றிலுள்ள பைரவியை எடுத்துட்டா என்ன வேணா செய்ய லாம். எனக்கு இப்படி ஆகும்னு தெரிஞ்சுதான் அந்த திற்பரப்பு சாமியார் இந்த உதவியை செய்திருக்கார்.

கிணத்து நீரே இப்ப மந்திர ஜலம். அதுக்குள்ள

சூன்யக் கதிர் ஊடுருவாது. ஒட்டாது அதை அந்த பைரவிப் பிரதமை செய்துண்டுருக்கு.

அதன் மேல ஏற்படுத்தப்பட்ட மந்திரங்கள் சப்தமா மாறி காலத்துல கரைஞ்சு படிஞ்சிருக்கு.

ஆவியா மாறின பிறகு எனக்கு புரிஞ்சிருக்கற விஷயங்கள் பல. அதை எப்படி உங்களுக்கு புரிய வைக்கறதுன்னுதான் தெரியல.

சுருக்கமா சொல்றேன். மூட நம்பிக்கைன்னு நினைக்காம ஆழமா யோசி. மந்திரம்ங்கறது காலம். ஸ்தூலம் அல்லது பிரதமை அதுவுமல்லாது எந்திரம்ங்கறது இடம். மூணு பரிமாணமுள்ள இடத்துல காலத்தால நிகழும் மாற்றங்கள்லதான் எல்லாமே இருக்கு. இதை விஞ்ஞான ரீதியாகவும் பாக்கலாம்.

மாதங்கி... என் கொழந்தே. நான் உனக்கு இவை பத்தி எல்லாம் பிறகு சொல்லித் தரேன். இப்போதைக்கு நம்ம குடும்பச் சிக்கலை தீரு. முதல்ல சூன்யம் வைக்க விடாம செய். அதுவே பாதி வெற்றி. அடுத்து கோர்ட் தீர்ப்பு வரும். அது அடுத்த வெற்றி. மூணாவதா என்னைக் கொன்னவனை என்ன பண்றதுன்னு சொல்றேன். அதுதான் முதலும் முடிவுமான வெற்றி.

போய்ட்டு வரேன் ஜானகி.

வரேன்டா கொழந்த!' - பரமேஸ்வரன்.

கடிதம் முடிவு பெற்றது.

மாதங்கி உடம்பை உதறிக் கொண்டு மீண்டும் மாதங்கியானாள். கடிதத்தை ஜானகி வாசிக்கத் தொடங்கினாள்.

கண்களின் விரிவில்.. கன்னத்து தசை நார்ச் சுருக்கத்தில் அவள் உணர்ச்சி வசப்படுவது புரிந்தது.

அதிர்ச்சி, ஆச்சரியம் இன்னும் என்னென்ன உண்டோ எல்லாம் அவளிடம் கூத்தாட ஆரம்பித்தன.

"ஐயோ.. என்னென்ன நடந்துருக்கு! ஏங்க மாதங்கி மேல்தான் வருவீங்களா? என் மேல வரமாட்டீங்களா... நான் என்னங்க தப்பு செஞ்சேன். வாங்கன்னா.. வாங்கோ! எனக்கு இந்த க்ஷணம் உங்க அருகாமை தேவை. வாங்கோ.. வாங்கோ.. நீங்க சொல்றபடியெல்லாம் கேக்கறேன். வாங்கோ.."

ஜானகி அதிகமாக உணர்ச்சிவசப்பட்டதன் பலன் பரமேஸ்வரன் வாழும் நாளில் எதிர்பார்த்தது போலவே நடக்க ஆரம்பித்தது.

ஹார்ட் அட்டாக்!

★ ★ ★

## 14

*நான் ஆவிகளோடு பேசிய அனுபவம் விசித்திரமானது. எனது சொத்து விஷயம் என்னாகும்? எனக்கு ஆயுள் எவ்வளவு? என் பெண்களுக்கு மாப்பிள்ளை யார்? என்று விடை தெரியாத கேள்விகளாகவே கேட்டேன்.*

*உன் சொத்து ஜெயமாகும். உனக்கு ஆயுள் தொண்ணூறு, உன் பெண்களுக்கான மாப்பிள் ளையை நாங்களே பார்த்து அனுப்புவோம் கவலைப்படாதே என்று தெம்பாக பதில் வந்தது. நடக்க நடக்க இவை சத்யமாகிவிடும்.*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...*

திடீரென்று தோன்றிய அந்த நெஞ்சு வலி ஜானகியை அப்படியே மாதங்கி மேல் சரிக்கிறது.

''அம்மாாா...'' மாதங்கி அலற, எல்லோரும் ஓடிவர ஸ்ரீதரன் குனிந்து குளித்ததுபோல ஜானகிக்கு வியர்த்திருப் பதைப் பார்த்து கச்சிதமாக யூகித்தான்.

''ஐயோ ஹார்ட் அட்டாக். நட்டு மாமா, ரேவதி, லக்ஷ்மி சீக்கிரமா டாக்டர்கிட்ட கூட்டிண்டு போகணும். ஓர் ஆட்டோ..'' சொல்லி முடிக்காமல், அவனே ஓடியாடி சட்டையை மாட்டிக் கொண்டு வீதியில் இறங்கினான். உள்ளே..

''என்னடி பேசினே.. ஹார்ட் அட்டாக் வர்ற அளவு?''

''நான்சென்ஸ்... அப்பா திரும்ப வந்தார் என் மேல., அம்மா உணர்ச்சி வசப்பட்டு தன் மேல வரச் சொன்னர்... அதனாலதான் இப்படி ஆயிடுத்து. அம்மா.. அம்மா..''

''ஏன் மாதங்கி இப்படி படிச்ச திமிரை காட்றே. இது நீ விளையாடற விஷயமா? முதல்ல ஆவி, பில்லி சூன்யம் எல்லாம் பொய்னே. இப்ப அப்பா வந்தார். பேசினார்ங்கறே.. உன்னால அம்மா போய்டுவா போல இருக்கேடி..''

''நோ... என்னை நம்புங்கோ. நான் இந்த குடும்பத் துக்கு நல்லது நினைக்கறவ. இது என் குடும்பம்.'' மாதங்கி தொண்டை கிழிய கத்தினாள்.

வீட்டு உத்தரமே நடுங்கிற்று.

உறவுக்காரர்கள் காற்று வராதபடி வளைத்து நின்றனர்.

'பச்ச... பச்ச..' என்ன சப்தம்.

''குடுகுடுப்பைக்காரன் சொன்னது சரியாயிடும் போல இருக்கே?''

நடுவில் ஓர் உதடு இங்கிதம் தெரியாமல் பேசி மிரட்டியது.

மாதங்கிக்கு ஊசி ஏறியது. அழுகையோடு கோபம் சேர்ந்து வந்தது. சில நிமிடங்களில் வாசலில் ஆட்டோ சப்தம். டப்.. டப்.. டப்..

ஜானகி குண்டுகட்டாக தூக்கிச் செல்லப்பட்டாள்.

ஆட்டோவில் லக்ஷ்மியும், ரேவதியும் ஏறிக்கொண்டு நடுவில் ஜானகியை அமர்த்தி மடியில் சரித்து தோளைப் பிடித்துக் கொண்டனர்.

முன்னால் டிரைவிங் சீட்டுக்கு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான் ஸ்ரீதரன். மாதங்கிக்கு இடமில்லாது போனது...

''சுந்தரம் நர்ஸிங்ஹோமுக்கு போப்பா...!'' கத்தி னான் ஸ்ரீதரன்.

அழுது வடியும் வெளிச்சம்.

கிணற்றுத்திட்டு மேல் அந்த க்ருதகி பொம்மை.

உள்ளே தலைவிரி கோலமாக மாதங்கி அமர்ந்தபடி இருந்தாள்.

முதல்முறையாக வாழ்க்கை என்பது வாழ்பவர் வசம் இல்லவே இல்லை எனும்படியாக ஒரு சிந்தனை.

அம்மாவும் போய்விட்டால் என்னாகும்?

ஐயோ... நாதியற்றுப் போவோமே...?

தனக்கு சரியாக நடந்து கொள்ளத் தெரியவில் லையா. பேசாமல் சொத்து போய்த் தொலைகிறது என்று விட்டுவிடலாமா...? விதம்விதமான எண்ணங்கள். நடுவில் யாரோ பாயைப் பிராண்டுவது போல் ஒரு சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. வேறு நினைப்பில் மனது நிரம்பி யிருந்ததால் கவனம் அதில் பதியவில்லை மெல்ல சன்ன மாக அது பதியத் தொடங்கும் போது சுவரில் தொங்கும் அப்பா போட்டோ படம் மட்டும் மெலிதாக இடவலமாக ஆடிக் கொண்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது. பெரிய ஃப்ரேம் போட்ட படம். பக்கத்து காலண்டர் ஆடாதபோது அது மட்டும் ஆடுவது ஆச்சரியத்தை தந்தது.

'அப்பாாா...

பாத்தீங்களா? என்னென்னவோ நட்கறதுப்பா?

நானா காரணம்.. அம்மா கூப்பிட்டப்போ வந்துருக் கலாமே.. ஹார்ட் அட்டாக்கா வரணும்?

ஏன்ப்பா வரலை?'

புத்தி கேள்வி கேட்டு பினாத்தியது. படம் தொடர்ந்து ஆடிவிட்டு சாய்வாகவே புவி ஈர்ப்பு விசைக்கு முரணாக இடமாக போன நிலையில் அப்படியே நின்றும் போனது. அப்போது கச்சிதமாக எட்டிப் பார்த்தார் நட்டு என்கிற நடராஜன் மாமா. அவரும் அந்த அதிசயத்தைப் பார்த்தார். என்ன நினைத்தாரோ துண்டால் குப்பென்று பூத்த வியர் வையை துடைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

மாதங்கிக்கு புரிந்தது.

'அப்பா பேசணுமா... பேசணும்கறேளா?'

மனதில் கேள்வியோடு உடனே மண்டியிட்டாள். தலைகுனிந்து நெற்றியை தரையில் பதித்தாள். உருகி அழ ஆரம்பித்தாள்.

'அப்பா வாப்பா.. வந்து வழிகாட்டு அம்மாவுக்கு எதுவும் ஆயிடக் கூடாதுப்பா. நீங்க அம்மாகிட்டேயும் வாங் கோப்பா. அப்பதான் அம்மா நம்புவா. பலமும் வரும் அவ ளுக்கு.. லக்ஷ்மி, ரேவதி எல்லார்க்கும் தெரியற மாதிரி ஒரு தடவை வாங்கப்பா. வரக்கூடாதா? எனக்கு பதிலைச் சொல்லுங்கோ? இல்லேன்னா நான் பிரமைன்னுதான் எடுத்துக்கும்படியாயிடும். வாங்கோ.. வாங்கோ.. வாங் கோப்பா..'

''புத்திசாலித்தனமா நடந்துக்கோ..'' என்றது ஒரு குரல், வெளியில் இருந்தும் ஒரு குரல் கேட்டது.

''புத்திசாலித்தனமா நடந்துக்கச் சொல்லுங்கோ சார்.'' நட்டு மாமா குரல் போல் இருந்தது. உடம்பு தளர்ந்து இரத்தம் சீர்பட்டு அழுத்தம் குறைந்து எல்லாம் லேசாகி நிமிர்ந் தெழுந்து திரும்பிய போது, எடிட்டர் ரங்கராஜன் நின்று கொண்டிருந்தார். வேகமாக வந்து சேர்ந்திருக்கிறார்! விறைப் பாக அவரைப் பார்க்கிறாள் மாதங்கி.

"மாதங்கி.." இது அவர்.

"வா ரங்கராஜா..." இது மாதங்கி.

"ஏய் மாதங்கி.. இவர் உன் எடிட்டர், பாஸ்." இடையில் புகுந்து எகிறினார் நட்டு மாமா.

"தெரியுண்டா.."

"தெரியுண்டாவா.. உன்னை பாக்க மெட்ராஸ்ல இருந்து வந்துருக்கார். என்ன இது மரியாதையில்லாம..."

"மாதங்கி.. வாட் ஹேப்பண்ட்?"

"வந்த செகண்ட்ல இருந்தே இப்படித்தான் இருக்கா சார். சுடுகாட்டுக்கு ஓடினா... அப்பா பேசினார்னா.. என்னை மோசக்காரன்னா.. அவங்கம்மாவை குழப்பி ஹார்ட் அட்டாக் வரும்படி பண்ணினா.. இப்போ வாடா போடாங்கறா.."

நட்டு மாமா விலாவரியாக விளக்கம் தர ரங்கராஜன் நெற்றியில் வரிகள்.

"மாதங்கி.. என்னம்மா ரொம்ப டென்ஷன்ல இருக்கியா?"

நைச்சியமாக பேச்செடுத்தார். அவளிடம் பதிலில்லை. வெறிப்பு இமைக்க மாட்டாத வெறிப்பு.

"என்னம்மா.. நீ சொல்லிதானே நான் வந்துருக்கேன். ஏன் இப்படி நடந்துக்கறே.. உடம்புக்கு என்ன?" திடீரென்று மாதங்கியிடம் சிரிப்பு... கலங்கடிக்கும் சிரிப்பு மொத்த வீடே எட்டிப் பார்த்தது.

ஐயோ...!

"மாதங்கி.. மாதங்கி.. ஏய் என்ன இது?" நட்டு மாமா கத்தவும், அவரை நெட்டுக் குத்தலாக ஒரு பார்வை

உதட்டில் இருந்து வேறுபட்ட குரலில், ''நான் மாதங்கி யில்லை க்ரூதகி.'' என்று அவள் சொன்னபோது நடராஜ னுக்கு அமிலம் சப்பிய மாதிரி ஓர் அதிர்ச்சி!

'ஹக்!'

சினிமா டாக்டர் போலவே பேசினார் அந்த டாக்டர்.

''நல்லவேளை... ஒரு நிமிஷம் தாமதிச்சிருந்தாலும் உயிர் போயிருந்திருக்கும். இப்போதைக்கு இன்டென்சிவ் கேர்ல இவங்க கொஞ்ச நாள் இருக்கணும். நல்ல ரெஸ்ட் ரொம்ப முக்கியம். அதிர்ச்சியான விஷயங்களை நினைச்சுக் கூட பார்க்கக்கூடாது.''

வார்டுக்கு வெளியே வந்து ''அப்பாடா..'' என்று காற்றாட நின்றனர் மூவரும்.

அதில் லக்ஷ்மி ஸ்ரீதரை நெருங்கி, ''தேங்க்ஸ் ஸ்ரீ..'' என்றாள் வாஞ்சையாக.. அப்படியே கொஞ்சம் விசும்பி அழவும் செய்தாள்.

''என்ன லக்ஷ்மி, எதுக்கு தேங்க்ஸ்லாம். நான் என்ன அந்நியனா?'' சொன்னபடி கடிகாரம் பார்த்தான். அதிகாலை மணி ஐந்து. இப்படியா இரவு உறக்கம் கழியும்?

''ஏய்.. ஆறு மணிக்கு அந்த கணியன் வீட்டுக்கு வந்துடுவான். ஐயோ அவனோட அசைன்மென்ட்டை முடிக்காம போய்ட்டேனே.''

''என்ன அசைன்மென்ட்?'' லக்ஷ்மி கேட்கவும், அதைச் சொல்ல கூச்சமாக இருந்தது. எப்படி சொல்வது? அது அந்த மூன்று நாள் சமாச்சாரமாயிற்றே...?

''அது.. அது.. இட்ஸ் ஓ.கே. அங்க நான் பார்த்துக் கறேன். இங்க நீங்க பார்த்துக்கோங்க. நான் வீட்டுக்கு

போய்ட்டு வரேன். மாதங்கி வேற என்ன பண்ணிண்டிருக் காளோ?''

அவன் பாய்ச்சலெடுத்தான். போன வேகத்தில் திரும்பி வந்து, "தைரியமா இருங்கோ.. நான் பாத்துக்கறேன். பணம் கைல இருக்குல்லியா?'' என்று கேட்டான்.

"உம்.."

அவன் கிளம்பிவிட்டான்!

★

விடிந்தும் விடியாத காலைப் பொழுது!

ஸ்ரீதரனும், கணியனும் சொல்லி வைத்த மாதிரி ஒன்றாகவே வீட்டுக்குள் காலெடுத்து வைத்தனர். வாச லில் ரங்கராஜன் வந்த கார். ஹாலில் குழப்பமும், கவலையு மாக அவர். நிலைகால் படியிலேயே உட்கார்ந்து கொண் டிருந்தாள் மாதங்கி.

கணியன் வரவும் சாஷ்டாங்கமாக அவன் காலில் விழுந்தாள். ஸ்ரீதரனை ஆச்சரியம் பிடுங்கிற்று.

"குரு அந்த சூன்யத்தை உள்ளேயிருந்து எடுத்துட் டேன். இதோ...'' என்று ஒரு சாண் உயர பொம்மை ஒன்றைக் காட்டினாள்!

★ ★ ★

# 15

*'என் குடும்பத்திற்கு சூன்யம் வைக்கப் போகிறார்கள் என்று தெரிந்த உடனேயே எனக்குள் சதாசர்வ காலமும் அதே சிந்தனைதான். அதைப் பற்றி தெரிந்து கொண்டு தற்காத்துக் கொள்ள விரும்பி கணியனைச் சந்தித்தேன். இவர் ஓர் அபூர்வமான மாந்திரீகர். எம்.பி.பி.எஸ். படித்திருக்கிறார். அதில் சம்பாதிக்காமல் மாந்திரீகத்திற்கு வந்திருக்கிறார் என்றார். இது நிச்சயம் பிரமாதமான ஒரு விஷயமாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால், பேசப் பேச இந்த நபருக்கு பணம் மட்டுமே பிரதானம் என்பது தெரிந்துவிட்டது. இப்படிப்பட்டவர்களை இந்த வித்தையே அழித்துக் கொன்று விடும் என்றார், என்னை கணியனிடம் அழைத்துச் சென்ற நண்பர் மகாதேவன் பிள்ளை!'*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து..*

மாதங்கி தன்னை க்ருதகி என்று சொல்லிக் கொண்டு எதிரில் நிற்பதில் ஏராள அதிர்ச்சி வைத்தியர் கணியனிடம்..

அப்படியே கிணற்றில் உள்ள அந்த சூன்ய பொம்மையை எடுத்துவிட்டேன் என்று கூறுவதில் நம்ப முடியாத ஆச்சரியம்.

கணியனின் பார்வை அந்தப் பொம்மை மேல் சென்றது. கண்களில் இடுங்கின தன்மை. பக்கமாக ஸ்ரீதரன் பேந்தப் பேந்த விழித்தான்.

''என்னடா பாக்கறே.. நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லையா? உன்னை..'' சடாரென்று மாதங்கி பாய்ந்து கணியனை நெருங்கிப் பிடித்தாள்.

கணியனுக்கு தூக்கி வாரிப்போட்டது. கணியனின் கைவசம் ஒரு மான் தோல் பை ஒன்று இருந்தது. அதில் என்னென்னவோ பொருள்கள். சரேலென்று அதைப் பிடித்து பிடுங்கியவள் தூக்கிக் கொண்டு வாசலுக்கு ஓடி னாள்.

''ஏய்.. ஏய்.. அது அந்தப் பை! அவளைப் பிடிங்க.. பிடிங்க..'' கணியன் கத்தவும் ஸ்ரீதரன் பாய்ச்சல் எடுத்து பின்னால் ஓடினான்.

''ஏய் மாதங்கி.. மாதங்கி நில்லு.. நில்லு..'' வேட்டி காலை இடற கிரிக்கெட் மாட்ச்சில் கைவிரல் விளிம்பில் காட்ச்சைத் தவற விட்டு விழுபவனாட்டம் விழுந்தான்.

வீட்டின் மையம்.

எல்லோரும் உட்கார்ந்திருக்க கடுங்கோபத்தில் கணியன்.

''போச்சு.. எல்லாம் போச்சு..'' என்று உதட்டில் புலம்பல்.

''வைத்தியரே எப்படி இப்படி ஆச்சு?'' நடுங்கும் குரலில் கேட்டார் நட்டு மாமா.

''தெரியல.. அது தெரியணும்னா எனக்கு அந்தப் பை வேணும். அதுல இருக்கிற மைகள். காப்புப் பொருள்கள் என்னோட மாந்திரீக தண்டம் எல்லாம் வேணும். எங்கே அந்த ஸ்ரீதரன்?''

அவர் கேட்ட நொடி முட்டியில் இரத்தம் ஒழுக உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

''ஏய்ய்.. எங்க அந்தப் பை?'' தொண்டை கிழியக் கத்தினான் கணியன்.

''அதை எடுத்துண்டு ஓடிப் போயிட்டா. எங்க போனாள்னே தெரியலே. பின் தொடர முடியல வைத்தியரே. கீழ விழுந்ததுல கால்ல அடி.''

''அய்யோ.. இப்படி அவளை விட்டுட்டியே.. எப்படி யாவது அவளைப் பிடியுங்க. இல்லேன்னா எல்லாமே கெட்டுடும்.''

மாமா மிடறு விழுங்கி விட்டு தான் தேட வெளியே கிளம்பினார்.

ரங்காஜன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஸ்ரீதர னுக்கு முதலுதவி செய்வதில் ஈடுபாடு காட்ட ஆரம்பித் தார்.

அப்படியே திரும்பித் திரும்பி கணியனைப் பார்த்த படி சொன்னார்.

''மாதங்கியை க்ரூதகிங்கற உங்க ஏவல் தேவதை தான் பிடிச்சிருக்கு. நான் இதை எல்லாம் நம்பாதவன். ஆனா, மாதங்கியைப் பார்த்தப்ப என்னாலே நம்பாம இருக்க முடியல...''

பதிலுக்கு கணியனிடம் என்ன சொல்வதென்றே தெரியாத தடுமாற்றம்.

அந்தக் காலைப் பொழுதில் சேலத்து வீதிகள் பெண் களால் கோலம் போடப்பட்ட நிலையில் நீண்டு கிடந்தன.

கழுகுக் கூர்மையோடு நட்டு மாமா மாதங்கியைத் தேடிக் கொண்டிருந்தார்.

''எங்க போய்ட்டா இந்தப் பொண்ணு. இந்த வயசான

காலத்துல இப்படி ஓடவிடறாளே? இவ மாதங்கியா இல்லை எமகாதகியா?''

புலம்பிக் கொண்டே போனவர் ஓர் இடத்தில் நான்கு பக்கமும் சந்துகள் பிரிந்ததைப் பார்த்தார்.

''எதில் புகுந்து எந்தப் பக்கம் போனாளோ?''

சுற்றுமுற்றும் பார்த்தவர் கண் எதிரே ஒருவன் எஸ்.டி.டி. டெலிபோன் பூத் கதவை அன்றைய போணிக் காக திறந்த வண்ணமிருந்தான்.

அதைப் பார்த்தவருக்குள் புதிதாய் ஓர் எண்ணம். அதை நோக்கி நடந்தார்.

''ஒரு கால் பண்ணிக்கறேம்பா'' என்றார்.

அடுத்த நொடி பட்டன்களை தட்டியவர் ஞாபகமாக கதவைச் சாத்திக் கொண்டார்.

ரிசீவர் மறுமுனையில் சிணுங்கி ஹலோ என்று ஒருவரைப் பேச வைத்தது.

''யாரு வீரநரசிம்மனா?''

''ஆமா!''

''அம்பி.. நான் நட்டு பேசறேன்.''

''என்ன மாமா இப்படி காலம்பற.. எதானும் முக்கிய விஷயமா?''

''ஆமாம்ப்பா... போட்ட திட்டம் எல்லாமே பாழாப் போயிடும் போல இருக்கு.''

''என்ன சொல்றேள்.''

''என்னத்த சொல்வேன். அந்த வைத்தியர் சூன்யம் எடுக்கறேன்னு வீட்டுக்குள்ள நுழைஞ்சது சூன்யம் வைக்கறது மாதங்கிக்கு தெரிஞ்சு போச்சு.''

"எப்படி மாமா... எப்படி?"

"எல்லாம் உன் தம்பி பரமேஸ்வரன் ஆவி பண்ணின வேலை."

"காலங்கார்த்தால இப்படி குழப்பினா எப்படி? பரமேஸ்வரனோட ஆவி எங்க வந்தது இங்க?"

"எங்க வந்ததா.. அவ மேலேயே வந்து எழுதியே காட்டிடுத்து. அது மட்டுமில்ல. நான் இயற்கையா சாகலை என்னை கொன்னுட்டான்னும் சொல்லிடுத்து. இன்னும் கேள். நட்டுவை நம்பாதேன்னு என்னைப் பத்தியும் கச்சிதமா சொல்லிடுத்து.."

"நம்பவே முடியலையே?"

"பக்கத்துல இருந்து பார்த்த ஐ விட்னஸ் நான் ஆட்டக் கடிச்சு, மாட்டக் கடிச்சு, மனுஷனைக் கடிச்ச கதையா கடைசில கணியன் வெச்ச க்ரூதகியையே அவ பிடிச்சுட்டா!"

"க்ரூதகியா.. அது யார்?"

"இதோ பார்... இது டெலிபோன். இதுல சுருக்கமாத் தான் சொல்ல முடியும். க்ரூதகிங்கறது கணியனோட ஏவல் தேவதை. அது மாதங்கியைப் பிடிச்சிடுத்து. அது பிடிச்சுதா.. இல்ல இவ அப்பன் துணையோட அவ அதைப் பிடிச்சாளாங்கறது தெரியல.

பிடிச்சதோட கணியனோட மாந்திரீக சரக்கு உள்ள அந்த மான் தோல் பையையும் தூக்கிண்டு தெருவுல ஓடினவதான்... எங்க போனாள்னே தெரியல.."

"கணியன் இப்ப எங்க?"

"ஆத்துல கரே பூரேன்னு கத்திண்டு கிடக்கறார். பை இல்லாம இந்த ஆளாலதான் துரும்பைக் கூட கிள்ளிப் போட முடியாதே. பை த பை இன்னொரு விஷயம்."

''என்ன?''

''பரமேஸ்வரன் பொண்டாட்டிக்கு திடீர்னு சிவியர் ஹார்ட் அட்டாக். ஹாஸ்பிட்டல்ல இருக்கா. நாம போட்ட திட்டம் பூரா இப்ப அவளுக்கும் தெரியும். அதான் தாங்க மாட்டாம ஹார்ட் அட்டாக் வந்துடுத்து. பொழைச்சு எழுந்தா அவளைப் பணிய வெக்கறது அவ்வளவு கஷ்டம். ஒரு மாதிரி பங்காளிகள் கொடுக்கறத வாங்கிக்கறதுங்கற மாதிரியான ஒரு மனோநிலைக்கு வந்திருந்தா. இப்ப எல்லாம் போச்சு.''

''சரி சரி நான் பார்த்துக்கறேன். நீங்க என்ன பண்ணப் போறீங்க?''

''என்னத்தப் பண்றது? நீயே சொல்.''

''உண்மை எல்லாம் தெரிஞ்சு போச்சுன்னீங்களே..?''

''தெரிஞ்சாலும் நம்பணுமே. நானும் விடாம நடிச்சிண்டு இருக்கேன். இருந்தாலும் எனக்கு பயமாத்தான் இருக்கு, நரசிம்மா.''

''பயப்படாதேள். கணியன் என்ன சொல்றார்னு கேளும். அவரே மாதங்கி எங்க இருக்காள்ங்கறதையும் கண்டு பிடிச்சு சொல்லிடுவார்.''

வீர நரசிம்மன் மேற்கொண்டு பேசாமல் போனை மறுமுனையில் முடக்குவது நட்டு மாமா காது வரை கடூர சப்தமாகக் கேட்டு அடங்கியது.

ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது பூத்துக்கு உரியவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையில் ஆயிரமாயிரம் கேள்விகள்!

நட்டு மாமா தடுமாற்றமுடன் ஒரு பத்து ரூபாயை

எடுத்துத் தந்துவிட்டு சில்லறைக்கு கூட நிற்காமல் விறு விறுவென்று நடக்க ஆரம்பித்தார்.

பூத்திற்குப் பின்னால் ஓர் ஆள் நுழையலாம் எனும் படியாய் துளி இடம். அதனுள்ளிருந்து அந்த மான் தோல் பையை மார்புப் பக்கமாய் கட்டியணைத்தபடி இப்பொழுது மாதங்கி வெளிப்படத் தொடங்கியிருந்தாள்.

★ ★ ★

# 16

*கணியனைப் பற்றி கேள்விப்பட்டபோது பிரமிப்பு அடங்கவில்லை எனக்கு. மெடிக்கல் காலேஜில் கோல்டு மெடலிஸ்டாக பாஸ் செய்த நபர் மண்டை ஓடு, மாந்திரீகம் என்று திரிந்தால் யாருக்கு தான் பிரமிப்பும் ஆச்சரிய மும் தோன்றாது?*

*சந்திப்பில் கணியன் அதை நிரூபித்தார்.*

*தனியே ஓர் அறைக்குள் என்னை உட்கார வைத்து ஒரு தாளைக் கொடுத்து எழுதச் சொன்னார். ரகசியமாகத்தான். அங்கே கேமரா கண்களோ துவாரமோ எதுவுமே இல்லை. நான் வெளியே வந்து எழுதியதைக் காட்டிய போது அவரும் தான் எழுதியதைக் காட்டினார். நான் என்ன எழுதியிருந்தேனோ அதுவே அவரிடம் இருந்தது. அரண்டு போனேன். அந்த மாதிரி நிறைய வித்தை எனக்கு தெரியும். ஆனால் அதற்கான உபகரணங்கள் இல்லாமல் என்னால் ஒன்றும் பண்ண முடியாது என்று மான் தோல் பையைக் கட்டினார்.*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...*

இமைக்காத அந்த விழிகள் நடந்தபடி இருக்கும் நட்டு மாமாவை பார்ப்பதை எஸ்.டி.டி. பூத் ஆசாமியும் கவனிக்கிறான். யார் இந்தப் பெண். இப்படிக்கூட பார்க்க முடியுமா.. பிசாசு மாதிரி? அவனுக்குள் கேள்விகள்.

அவளது கையில் உள்ள மான் தோல் பை அவனை மேலும் ஆச்சரியப்படுத்தியது.

''மேடம்..'' அழைத்தான். திரும்பினாள். அய்யோ பார்வையா அது? ஜ்வாலை பறந்தது.

''அந்த அவர்...?'' சற்று தயக்கத்தோடு இழுத்தான்.

''அவனுக்கென்ன?''

''இல்ல.. அவன் தேடி வந்த பொண்ணு... நீங்க தானான்னு..''

''தெரிஞ்சி என்ன பண்ணப் போறே?''

''இல்ல.. அந்த ஆள் பேசினதைப் பார்த்தா நல்லவன் மாதிரி தெரியல. உங்களைப் பார்த்தா... வித்தியாசமா இருக்கு. கைல பை கூட வித்தியாசமா..''

''இது சாதாரண பை இல்ல.. மந்திரப்பை.'' அவள் ஒரு மாதிரியாகச் சொன்னாள். அவள் கண்ணில் மிரட்சி ஊடுருவியது. விருட்டென்று பூத்தில் நுழைந்தாள்.

''அவன் யாருக்கு போன் பண்ணான்னு தெரியுமா?''

திரும்பியபடி கேட்டாள்.

''தெரியுமே, ரசீதுல நம்பர் டைப் ஆகியிருக்கும் அந்த ஆள் ரசீதை வாங்கிக்கல..''

அவன் ரசீதை கிழித்துத் தந்தான். அதில் எண்கள். மாதங்கியின் கைகள் அதைப் பார்த்து ஃபோனில் தட்டின. மறுமுனையில் வீரநரசிம்மன் அகப்பட்டான்.

''யெஸ் வீரநரசிம்மன் ஸ்பீக்கிங்...''

''நான் க்ருதகி பேசறேன்.''

''க்ருதகி?''

"ஆமாம்.. கணியரோட பவித்ர தேவதை!"

"வாட் யூ மீன்.. யார் நீ.. என்ன ஔர்றே?"

"ஔறலை வீரநரசிம்மா. நான் க்ருதகி தான் பேச றேன். சாதாரண க்ருதகி இல்ல. பல ஜென்மம் பார்த்த ஒரு துர்ஆத்மா நான். அதர்வண வேதத்துல பிரேதாட்சரம்னு ஓர் அப்பியாசம் இருக்கு. அதை ஜெபிக்கிறவங்களுக்கு வசப்படற ஒரு தேவதை நான். கணியன் என்னை வசப் படுத்தி வெச்சிருந்தான். என்னைக் கொண்டே பரமேஸ் வரன் குடும்பத்தைக் கட்டிப் போட்டு சூன்யம் வைக்கப் பார்த்தான். அந்தச் சமயத்துல அதிசயமா என் வசப்பட்டவ தான் மாதங்கி. நான் இப்ப அவ உடம்புல இருக்கேன். அவ குரலாதான் உன்கிட்டேயும் பேசறேன்.

என்னை ரொம்ப தான் ஆட்டி வெச்சுட்டான். அந்தக் கணியன். அவனுக்கு ஊக்கம் நீயும், உன் உடன் பிறப்பு களும், உங்க யாரையும் சும்மா விடமாட்டேன். எனக்கான இந்த விடுதலையையும் நான் விட்டுட தயாரில்லை." டொடக்.

தொலைபேசியை முடக்கிவிட்டுத் திரும்பினாள். எஸ்.டி.டி. பூத் ஆசாமி வாசல் கூட்டும் வரை சிவப்பாகத் தான் இருந்தான். இப்பொழுது வெளிறலாக..

மாதங்கி அவன் எதிரில் மான் தோல் பையைத் திறந் தாள். உள்ளே ஒரு முதுகெலும்புத் துண்டு இருந்தது. எடுத்து அவன் எதிரில் டேபிள் மேல் வைத்தாள்.

"இது... கணியனுக்கு முன் என்னை வெச்சிருந்தவ னோட முதுகெலும்பு." சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

அய்யோ.. அவன் வயிற்றில் அமிலப் பிரவேசம்.

அடுத்ததாக ஒன்றை எடுத்தாள். கண்களோடு கூடிய தலைச்சன் குழந்தையின் மண்டை ஓடு.

அவனுக்கு மயக்கமே வரப் பார்த்தது. ஏராள வியர் வைக்குள் மூழ்கலானான்.

அவள் சிரித்தாள். பின் அனைத்தையும் எடுத்து பைக்குள் போட்டுக் கொண்டாள்.

கிளம்பினாள்!

வீட்டுக்குள் நுழைந்த நட்டு மாமாவை சொந்தங்கள் ஒரு மாதிரிப் பார்த்தார்கள்.

ஸ்ரீதரன் பெரிய கட்டோடு நிமிர்ந்தான்.

''போய்ட்டார்.''

''போய்ட்டாரா?''

''ஆமா.. மாதங்கியை நான் தேடிப் பிடிச்சுக்கறேன். நாசமாகப் போங்கோ ன்னு மெட்ராஸ்லேர்ந்த வந்த அந்த எடிட்டரோட கிளம்பிப் போயிட்டார்.''

''எடிட்டர் எதுக்கு அவர்கூட?''

''என்கிட்ட கேட்டா.. இரண்டு பேரும் ஒண்ணா கூடி ஏதேதோ பேசினாங்க. அப்புறம் பார்த்தா கார்ல சர்ருன்னு கிளம்பிட்டார்.''

ஸ்ரீதரன் பேசும்போதே எரிச்சல் குரூரிட்டது.

நட்டுமாமா போய் ஓர் ஓரமாக துண்டை உதறியபடி உட்கார்ந்தார்.

''சரி எப்படி இருக்கா ஜானகி..?''

''இருக்கா..?''

''மயிரிழைல பொழைச்சா... இன்னும் ஆபத்து நீங்கல..''

ஸ்ரீதரன் பதிலளிக்கும்போதே நடுவில் கூப்பிட்டது. தொலைபேசி.

நட்டுமாமாவே போய் எடுத்தார். ஸ்ரீதரனால் காலை அசைக்கக் கூட முடியவில்லை.

"மிஸஸ் பரமேஸ்வரன் இருக்காங்களா?"

"என்ன விஷயம், யார் நீங்க?"

"நான் வக்கீல் பேசறேன். நாளைக்கு ஜட்ஜ்மென்ட் ரிசர்வ் ஆகலாம்."

"நாளைக்கா?"

"ஆமா.. 99.9 சதவிகிதம் நமக்குதான் சாதகமா இருக்கும்னு நம்பறேன்."

"அப்.. அப்படியா?"

"நீங்க யார்.."

"நான்.. நான்.. ஜானகியோட உறவுக்காரன் அதாவது பரமேஸ்வரனுக்கு மாமாவாகணும்."

"மிஸஸ் ஜானகி இல்ல."

"மாதங்கிய கூப்பிடுங்க."

"அவங்களுக்கு.. அவங்க யாரும் இல்ல. ஜானகிக்கு ஹார்ட் அட்டாக்.."

"மை குட்நெஸ்.. எப்போ?"

"நேத்து ராத்திரி.."

"அப்ப அவங்களால நாளைக்கு கோர்ட்டுக்கு வர முடியாதா?"

"நிச்சயமா முடியாது."

"ஐ.சீ.."

''ஏன்.. அவங்க வரதுக்கும் ஜட்ஜ்மெண்ட்டுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கா?''

''டெஃபனட்டா இது என்ன கேள்வி. ஃபைனல் கிராஸ் எக்ஸாமினேஷன் ஒண்ணு இருக்கு. அதுல அவங்க சம்மதங்கள் ரொம்ப முக்கியம்.''

''சிக்குன்னு சொல்லி வாய்தா கீய்தா..''

''இந்த சிக் எதிரிக்குதான் சாதகமா இருக்கும். ஆமா மாதங்கி இல்ல..''

''இல்ல.. அவளை.. அவளை..''

''அவளுக்கு என்ன?''

''அவளை பேய் பிடிச்சிருக்கு.''

''மை குட்நெஸ். ஹார்ட் அட்டாக். பேய்னு என்னென் னமோ சொல்றீங்களே. நான் நேர்ல வரேன்.''

வக்கீல் மறுமுனையில் முடித்துக் கொண்டார். நட்டு மாமா திரும்பினார்.

''வக்கீலா?'' கச்சிதமா கேட்டான் ஸ்ரீதரன். அவர் தலை அசைந்தது. சேர்ந்து ஆடியது கிராப்போடு கூடி முடிச்சிடப்பட்ட சிண்டு.

வீரநரசிம்மனுக்கு தகவல் தர விரும்பும் துடிப்போடு நட்டு மாமா பரபரப்பாக வெளியேற ஆரம்பித்தார்.

வாசல் பக்கம் அறை ஒன்றைத் தாண்டும்போது பளிச்சென்று கண்ணில் ஒரு பிம்பம்.

பிரம்பு நாற்காலியில் பரமேஸ்வரனே அமர்ந்திருக்கிற மாதிரி! முன் போய்விட்ட கால்களை பின்னுக்கு இழுத்து நடந்து வந்து அறை உள்ளே நாற்காலியைப் பார்த்தார். காலியாக இப்போது தென்பட்டது.

"ப்ளூச்ச்..!" ஜன்னல் வழியாக வெற்றிலைக் குதப்பல் தரைமேல் சிதறியது. யாரது இப்படி துப்புவது? உள்ளே நன்றாக எட்டிப் பார்த்தபோது ஒருவரும் இல்லை.

திரும்பவும் 'ப்ளூச்ச்ச்' சப்தம். பரமேஸ்வரன் துப்புவது போலவே..

"அய்யோ யாரது..?" நடுங்கிப் போனது மனது. கெந்தியபடி நடந்து வந்து கேட்டான் ஸ்ரீதரன்.

"எங்கியோ போகணும்னேளே.. போகலை?"

"போகணும்.. போகணும்.. போகணும் தான். ஸ்ரீதரா இங்க பார் வெத்தலக்காவி.. வெத்தலக்காவி."

"என்ன மாம ா அதுக்கு?"

"ப.. பரமேஸ்வரன் வந்து துப்பின மாதிரி ஒரு பிரமை.. அதான் கத்திட்டேன்."

"போச்சு.. உங்களையும் பிடிச்சுடுத்தா மாதங்கியோட வியாதி."

அவர் பதிலேதும் பேசாமல் அவனை மிரள மிரளப் பார்த்தார். நடுவில் சூட்கேசும் கையுமாக வந்திருந்த சொந்தங் கள் வாசலுக்கு வந்தார்கள்.

"நாங்க கிளம்பறோம்.."

"ஏன் காரியம்லாம் நிறைய இருக்கச்சே?"

"இருக்கலாம். ஆனா இங்க இருக்க நெருடலா இருக்கு. சூன்யம் அது இதுன்னா.. எப்ப விடியும்னு உக்காந்திருந்தோம். பத்தாம் நாள் வந்துடறோம். சொல் லிண்டு போகப்படாதுன்னுவா. போகும்போது ஜானகியை பார்த்துக்கறோம்" என்றும் சொல்லிக் கொண்டே கிளம்பி னார்கள்.

ஸ்ரீதரன் உயிரிருந்தும் செத்துப் போனான்.

பெரிய வீட்டில் தனியாக மாட்டிக் கொண்டது போல உணர்ந்து நட்டு மாமாவை பார்க்க அவரும் மெல்ல கூட்டத்தோடு சேர்ந்து காலை வைத்தார்.

''அப்புறம் போகலாம் மாமா உள்ள வாங்க. யாரும் இல்லாம இங்க இருக்க எனக்கு பயமா இருக்கு..''

''எனக்கும்தான்.'' அவர் சொல்லும்போதே அறையின் மூங்கில் நாற்காலி சுண்டெலிக் கத்தலோடு ஆடும் சப்தம்.

''இன்னும் யார் இருக்கா உள்ள..?''

''யாரும் இல்லியே?'' சொன்னபடியே எட்டிப் பார்த்து விட்டு ''மாமாாாா..'' என்றான் தொண்டை கிழியுமளவு.

★ ★ ★

# 17

*நடந்து கொண்டிருக்கும் வழக்கு தோற்றாலும் சரி ஜெயித்தாலும் சரி என் பங்காளிகள் ஜெயித்து விடக்கூடாது. என் அப்பாவே நான் அரக்கக் கூட்டத்தைப் பெற்று விட்டேன் என்று சொல்லி பல சமயம் அழுவாராம்.*

*என் பெரியம்மா குடும்பமே கூட ஒரு மாதிரியான குடும்பமாம். அவர்கள் பரம்பரையில் பலர் மாந்திரீக விஷயங்களில் ஈடுபாடு காட்டியவர்கள். பெரியம்மாவிற்கும் சில கண்கட்டு வித்தை தெரியும் என்று கேள்விப்பட்டேன்.*

*இதனால் தான் அப்பாவிற்கு என் அம்மா மேல் தனி அன்பும் பாசமும் ஏற்பட்டு அது கல்யாணத்திலும் முடிந்ததாம். ஆனால் அந்தக் கல்யாணத்தை அப்பா முறைப்படி பதியவில்லை. ஊர் அறிய காட்டிக் கொள்ளவும் இல்லை. இதனால் வப்பாட்டி பையன் என்று நான் விமர்சிக்கப்பட்ட விதம் மிகக் கொடுமை யானது"*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...*

ஸ்ரீதரனின் அலறல் நட்டு மாமாவை தூக்கி திராவகத்தில் போட்டது போல ஆக்கி விட்டது.

"என்ன ஸ்ரீ.. எதுக்கு கத்தினே?"

"உள்ள மாமா இருக்கார்!" ஸ்ரீதரன் அவரை நெருங்கி தோளை இறுக்கப் பிடித்துக் கொண்டு சொன்னான்.

"யாரு பரமேஸ்வரனா?" - காற்றுக் குரலில் நட்டு.

"அவரே தான்.." மாமா நடுங்கினார்.

"இந்த எழவுக்குதான் நான் முதல்ல பயந்தேன்."

அவரை மீறி ஒரு கருத்து வெளியே தெறித்து விழுந்தது.

"எதுக்கு?" ஸ்ரீதரன் அறையை பார்த்தபடியே அவரிடம் கேட்டான் காற்றுக் குரலில்தான்.

பதில் சொல்ல முடியாதபடி திணறுபவரை மேலும் திணற அடிப்பது போல உள்ளிருந்து பரமேஸ்வரன் குரலே கேட்கத் தொடங்கியது.

"நட்டு மாமா.."

"ஐயோ.. பரமேஸ்வரன் குரல்..குரல்.."

நட்டு மாமா ஸ்ரீதரனை பெண்டாட்டியை கட்டிக் கொள்கிற மாதிரி கட்டிக் கொண்டு கத்தினார்.

"ஆமாம்.. இது மாமா குரல்தான்.."

"அதிகம் பேசாம அறைக்குள்ளே வாங்கோ மாமா.."

குரலிடம் அழைப்பு. தோதாக நாற்காலி ஆடும் கிரீச் கிரீச் சப்தம்.

"ஸ்ரீ ஸ்ரீ.. வா. புழக்கடை வழியா ஓடிப்போயிடலாம். வா.. வா... வந்துடு ஸ்ரீ..." மாமா திரும்பி ஓடத் தொடங்கினார். ஸ்ரீதரன் நின்று கொண்டேயிருந்தான்.

வீதிக்குள் கத்தியபடி இறங்கி ஓட ஆரம்பித்தார். எதிரில் கண்டபடி வாகனங்கள். இளம்பிராயத்தில் கூட இப்படி ஓடியிருக்க மாட்டார். அப்படி ஓர் ஓட்டம்! ஆனால் ஒரு வாகனம் மோதியபோது அந்தக் கிழட்டு தேகத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

மேட்டூர்.

அணையை மீறிய காவிரியிடம் அட்டகாசப் பாய்ச்சல். நொப்பும் நுரையுமான சுழிப்பு.

காவிரிக்கரையோரமாக 'தாமிரப் பாடி' என்று கை காட்டும் அறிவிப்புப் பலகை. மண்சாலை ஒன்று அனகோண்டா பாம்பு போல வளைவுகளோடு..

செருமியபடி அதன் மேல் ஒரு டாடா சுமோ.

சில கிலோ மீட்டர் வரை சீறிய அது ஒரு கரடு போன்ற பாகத்தை ஒட்டி நின்றது.

காரில் இருந்து இறங்கினான் வீரநரசிம்மன். இதற்குள் அவனைப் பார்த்துவிட்டு அந்த காட்டுப் பகுதியில் குடிசை போட்டிருக்கும் ஒருவன் ஓடி வந்தான்.

''வாங்க முதலாளி...'' என்றான் வளைந்த முதுகோடு.

''யாராவது வந்து பாத்துட்டு போனாங்களா வீரண்ணா?'' என்று வீரநரசிம்மன் கேட்டதில் அவன் வீரண்ணன் என்பது தெரிய, அவனும் ''ஆமாம் முதலாளி. ஒரு சேட்டும், கோட்டு சூட்டு போட்ட ஆளும் வந்து பாத்துட்டுப் போனாங்க.

போர் போட்ற மாதிரி பல அடி ஆழம் தோண்டுனாங்க. வெளிய கொழ கொழன்னு மண்ணு வந்துச்சுங்க. பாருங்க.'' - அவன் காட்டிய திசையில் காக்காய் பொன் கரைசல் போல மஞ்சள் வெள்ளை நிறத்தில் மண் திட்டு. அதைப் பார்த்த வீர நரசிம்மன் விழிகளில் கவலை, கலக்கம், ஆயாசம் எல்லாம்.

''எல்லாம் கைவிட்டுப் போயிடும் போல இருக்குடா.''

''தீர்ப்பாயுடுச்சுங்களா..?''

''ஆயிடும்.. இன்னும் இரண்டொரு நாள்ல.'' பெருமூச்சு உதட்டு மீசையை பொசுக்கியது.

''சரி பாத்துக்கோ. நான் கிளம்பறேன்.'' என்று கூறிய படியே வேட்டியை ஒருபாதி மடித்துப் பிடித்தபடி கிளம் பினான்.

நாச்சி முத்துக்கவுண்டர் தோட்டத்துக்கு செல்லும் காவிரி வாய்க்கால் இடையில் காலை நனைத்தது.

சலசல சத்தத்தில் சங்கீதம் ஒளிந்திருந்தது. காற்றும் முகத்தில் ஒரு சின்ன வீச்சைக் காட்டியது.

''ஃபென்டாஸ்டிக் ஏரியா.. வாட் எ க்ளைமேட்'' - என்று இதில் மயங்கித்தானே அன்று ஜிதேந்தர் பூரி ஸ்லாகித்தான்?

''மூணு கோடி அவுட் ரேட்டா தரேன். நான் முப்பது கோடி சம்பாதிப்பேன். பின்னால சேட் ஏமாத்திபுட்டேன்னு நீ சொல்லக் கூடாது.

பத்ரம் பக்காவா இருக்கணும். அதுமட்டும் ஞாபகத்துல வை. நீயே தனியா இந்த காக்கா பொன்னை காசு பண் றேன்னு இறங்காதே. கவர்மென்ட்ல பிடிச்சு உன்னை உரிச்சிடுவாங்கோ.''

ஜிதேந்தர் பூரி பேசியதெல்லாம் காதில் ஒடுகிறது அப்படியே மனது கணியனுக்குத் தாவுகிறது. இந்த மனிதர் என்ன ஆனார்? இவரைப் பற்றி தகவலேயில்லையே.. ஒருக்கால் கேஸில் தோற்றாலும் இந்த இடத்தில் பரமேஸ் வரன் குடும்பம் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போட முடியாது.

கணியனோடு வந்து மூலைக்கு மூலை பார்த்துப் பார்த்துப் புதைத்த யந்திரங்கள் தங்கள் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டன.

"காட்டு உச்சியில் இடுப்பு மூடியபடி புதைக்கப்பட்டிருக்கும் பொம்மையும் நாளாக நாளாக அடைபட்டிருக்கும் சீற்றத்தைக் காட்டத் தொடங்கும்.

அதன்பின் கணியன் சொன்னது போல சுற்றிலும் பல மைல்களுக்கு மாடு கன்றுகள் செத்து விழும். அதன் இரத்தம் உறிஞ்சப்படும். நினைத்த இடமெல்லாம் பற்றி எரியும்.

வந்தால் மூன்றுகோடி இல்லாவிட்டால் பூத ராஜ்யம் ஆகட்டும். நன்றாக மாறட்டும் நாசமாக போகட்டும். தன் அப்பாவை மயக்கிய சண்டாளிக்கு, பிறந்தவர்களுக்கு கோடி பெறும் சொத்தா..? கூடாது வேய். கூடவே கூடாது. விட மாட்டேன். விடவே மாட்டேன்..!"

கறுவிக் கொண்டே போய் சுமோவில் ஏறினான் வீர நரசிம்மன். நடுவில் செல்ஃபோன் சிணுங்கியது.

கணியனாகத்தான் இருக்கும். ஊர்ஜிதத்தோடு காதைக் கொடுத்த போது தம்பி சிவசுப்ரமணி காதில் பாய்ந்தான்.

"என்ன சிவசு...?"

"நரசிம்மா எல்லாம் போச்சு. நட்டு மாமா அப்ரூவ ராயிட்டாரு..?"

"எப்படிடா..? - சுமோ கேள்வியின் போது பிரேக் பிடிக்கப்பட்டு நடுச்சாலை என்றும் பாராமல் தேங்கியது.

"என்னன்னு சொல்ல.. தலை தெரிக்கற வேகத்துல பரமேஸ்வரண்ணா வீட்டை விட்டு ஓடி வந்துருக்கான் அந்த ஆளு. அப்ப ஆக்சிடென்ட் ஆயிடுத்து போல. ஸ்ரீதரன் தான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துண்டு போயிருக்கான். அப்ப அங்க தான் ஒரு வாக்கு மூலம் தரணும் அப்பதான்

என் நெஞ்சு வேகும்னு சொல்லி நம்ம பிளானை எல்லாம் போட்டு உடைச்சிடுத்து.

நீ விஷம் வைக்கச் சொன்னது. தான் வெத்தலையில விஷம் வெச்சதுன்னு ஒரு விஷயம் பாக்கியில்ல. அந்த ஆள் உசுர் பிழைக்கறதும் சாத்யமில்லங்கறா.''

''விஷக்கிழடுடா அந்த ஆள்.. இடியட். ஆமா கணியன் போன் பண்ணினாரா?''

''எங்கேன்னே தெரியல அந்த ஆள். ஆமா நீ இப்ப எங்க இருக்கே..?''

''மேட்டூர்ல நம்ம காட்டு நிலத்துகிட்ட இருந்து.''

''அது இனி நம்ம நிலமில்ல.. எல்லாத்தையும் தான் கிழடு கெடுத்து குட்டிச் சுவராக்கிருக்கே. பை தபை நீ சேலம் வராதே. உன்னை போலீஸ் கைது பண்ணலாம்னு சொன்னார் நம்ம வக்கீல். அப்படியே ஒரு பாட்டம் திட்டித் தீர்த்தார். ஏய்யா எனக்கு தெரியாம இப்படி எல்லாம் சைட்ல பண்ணீங்க. உங்களால எனக்கும் கெட்ட பேர்னு ஒரே புலம்பல்..''

- மறுமுனையில் சிவசுப்ரமணியன் முடித்துக் கொண்டான். வீரநரசிம்மனுக்கு மிகக் களைப்பாக இருந்தது. எல்லாமே கைநழுவிப் போகிறதே..

சோர்ந்து ஸ்டியரிங் மேல் பொத்தென்று விழுந்ததில் ஹாரனிடம் அசாத்ய சப்தம்.

''பாம்ம்ம்ம்ம்..''

கார் நிற்கும் இடத்திற்கு பக்கத்தில் சோள வயல்.

சப்தத்தின் எதிரொலியாக சோளவயல் தட்டுகள் கலகலத்தன.

வீரநரசிம்மன் நிமிர்ந்து எழுந்தான். சப்தம் அடங்க திரும்பியபோது இதயம் எகிறி நாவண்ணங்களுக்கு இடையே சிக்கிக் கொண்ட மாதிரி மேலும் ஓர் அதிர்ச்சி.

எதிரில் சோள வயலுக்குள் இருந்து வந்திருந்தது ஒரு வேங்கைப்புலி!

★ ★ ★

# 18

*மொத்தமாக ஆறு பேர். இவர்கள் மட்டும் இல்லையென்றால் என் குடும்பம் பல்கலைக் கழகமாகவே விளங்கியிருந்தும். என் அப்பா வின் முதல் மனைவி அவருக்குப் பிறந்த வீர நரசிம்மன். சிவசுப்ரமணியன், கணேசன் இவர் களுக்கு ஒத்து ஊதிக் கெடுக்கும் திரிபு அத்தை என்னும் மொட்டைக்கிழவி மற்றும் வீர நரசிம் மனுக்கும் முந்திப் பிறந்துவிட்ட ராஜமக்கா. இதில் ராஜ மக்கா ஓர் அறுபதாம் கோழி. இவளுக்கும் வீரநரசிம்மனுக்கும் கல்யாணப் பிராப்தமே இல்லை. இருந்தும் சொத்து ஆசைக் காக என்னையும் என் குடும்பத்தையும் ஒழித்துக் கட்ட துணிந்து விட்டார்கள்'*

*- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...*

அய்யோ!

வேங்கைப்புலி வீரநரசிம்மனை அனல் பறக்கப் பார்த்து விட்டு உடம்பை அப்படியே தணித்துப் படுத்தது. பாயத் தயாராகும் மும்முரமோ?

வீரநரசிம்மன் பல விநாடி ஸ்தம்பிப்பில் இருந்து விடுபடவேயில்லை. சட்டென்று வேறு ஏதோ ஓர் அரவம். சோளவயல் வரப்பில் ஒருத்தி தலையில் வரப்புப் புற்களை மாட்டுக்கென அறுத்துக் கட்டியவளாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

வேங்கைப் புலியின் கவனம் சட்டென்று அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பியது.

அவ்வளவுதான் அம்பு போல சீறிக்கொண்டு அவளை நோக்கி ஓடத் தொடங்கியது.

''அய்ய ஆத்தி...'' - அந்தப் பெண். புல்லுக்கட்டைப் போட்டுவிட்டு கத்துவதும் புலி அவளைப் பிடுங்கிக் குதறுவதும் சில நிமிடங்கள் வரை வீரநரசிம்மனை சிலையாகவே ஆக்கிவிட்டது.

அய்யோ என்ன ஒரு கொடூரம்...?

அந்தப் பெண் இப்பொழுது மாமிசமாகியிருந்தாள். எதற்கும் அசராத மனது வீரநரசிம்மனுக்கு.. இரும்பை விழுங்கி சுக்கால் ஜீரணிக்கப் பார்ப்பவன். இருந்தும் இந்தக் கொடுமை அவன் உயிர்க்குலையில் பட்டாசுச் சரத்தை கொளுத்தியது போல படபடத்தான்.

அப்படியே மயங்கவும் செய்தான். பிராந்தி விஸ்கி அருந்திய சந்தர்ப்பத்தில் கூட வராத மயக்கம் இது. மயங்கிய உடல் மீண்டும் ஸ்டியரிங் மேல் விழுகிறது.

''பாம்ம்ம்ம்ம்..'' - சுமோவின் ஹாரன் சப்தம் புலியை, சாப்பிட்டது போதும் ஓடு என்பது போல துரத்தியது. பின்னர் பலரை இழுத்தும் வந்தது.

எல்லோரும் புல்லுக்கட்டுக்காரியின் நிலையைப் பார்த்து அங்கங்கே நிலைமரமானார்கள்.

**மார்ச்சுவரி!**

நட்டுமாமா அரை அங்குல இடைவெளிக்கு வாய் பிளந்திருக்க வலது கையும் பிசையப்பட்டிருக்க சவமாக படுத்தபடி கிடந்தார்.

வெளியே நட்டுமாமா தங்கையான நாமகிரி மட்டும் மிக அழுதபடி இருந்தாள்.

அவளை ஒட்டி கைகட்டியபடி நின்று கொண்டிருந் தான் ஸ்ரீதரன்.

''வினைடா ஸ்ரீதரா.. வினை.. தங்கமான மனுஷன் பரமேஸ்வரன். அவனுக்குச் செஞ்ச கொடுமையால வநத வினை இது.'' - என்று நடுநடுவே நாமகிரி பிதற்றினாள்.

''அதான் பண்ண தப்புக்கு பரிகாரம் பண்ணிட்டாரே மாமா. வீரநரசிம்மன் வகையறா இனி தப்ப முடியாது. அது போதும் எனக்கு..''

''அவா சாகறா இல்ல எக்கேடோ கெட்டுப் போறா.. ஆனா, ஜானகி ஒருபக்கம் ஆஸ்பத்திரியிலையும் இந்த மாதங்கி ஒரு பக்கம் வேறு விதமாவும்னா திரிஞ்சிண் டிருக்கா? அதை நினைச்சாதான்..''

''மாமிபத்தி கவலையில்லை. லக்ஷ்மி, ரேவதி இருக்கா பார்த்துக்க, மாதங்கி நிலைதான் தெரியல..''

''ஆமா, அத்தே... அதுல எனக்கு சந்தேகமில்லை.''

''அந்த மாந்திரீகக் கடங்காரன் என்னவானான்?''

''அவனைப் பத்தியும் தெரியலத்தே. அந்த பத்திரிகை ஆசிரியரோட போனான்.'' - ஸ்ரீதரன் பட்டும் படாமலும் சொன்னான்.

அப்போது, ஒரு ஸ்வீப்பர் வந்தான். எதிரில் மெடிக் கல் ஷாப்பிற்கு போய் பேண்டேஜ். டெட்டால் லொட்டு லொசுக்கு என்று ஒரு பையை வாங்கி வரச் சொன்னான்.

''ஸ்ரீ இதமட்டும் வாங்கித் தந்துட்டு நீ கிளம்பு. நான் பாத்துக்கறேன். என் குழந்தைகளுக்காகத் தான் அண்ணா அந்த வீரநரசிம்மனோட சேர்ந்து தப்பு பண்ணினான்.

அவாளை வெச்சே நான் காரியம் பண்ணிக்கிறேன். உனக்கு பெரிய மனசு. இந்த மட்டும் உபகாரம் பண்ணி கூடவே இருக்கியே..''

அத்தை நாமகிரி கசடின்றி கசிந்தாள். தயங்கித் தயங்கி பம்மிவிட்டு அவள் விருப்பப்படியே செயல்பட எழுந்தான். இருந்தும் அத்தையை நட்டு மாமா பிணத்தோடு அல்லாட விட்டு விட்டுச் செல்ல மனதே வரவில்லை.

மாமா மட்டும் 'போட்டு' விடாமல் செத்திருந்தால் இந்த நிமிஷம் கதையே வேறு..

இந்த ஆஸ்பத்திரி கொள்ளாத கூட்டம் கூடியிருக்கும்.

வீரநரசிம்மன் அவன் தம்பிகள் அம்மா அக்கா தங்கை என்று அந்த ஒரு கூட்டமே போதும்.

இப்பொழுது யாரும் எட்டிப் பார்க்கக் கூட தயாராக இல்லை. ஆளாளுக்கு அஸ்தியில் பயம்.

அத்தைக்கோ நான்கு பெண்கள். நான்கு பேருமே நாராசரகம். 'முருங்கை உடம்பு, தெற்றுப்பல், எலிவால் சடை, அம்மை முகம்' என்று தினுசுக்கு ஒரு கோளாறு. எல்லோருக்குமே துணிக்கடை, பிரைவேட் டாக்டர் டிஸ்பென்சரி என்று ஆயிரம் ரூபாய் சம்பள உத்தியோகம்.

இவர்களைக் கடைத்தேற்றத்தான் நட்டு மாமாவிற்கு காசும் பணமும் தேவைப்பட்டது.

தான்தான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. இதுகளுக்காவது செய்து வைப்போமே என்று வீர நரசிம்மனின் இழுப்புக்கு இடம் கொடுத்தார். அதன் எதிரொலி..

இப்பொழுது மார்ச்சுவரியில் மண்டை உடைக்கப்படும் சப்தம் வெளியே கேட்கிறது. அன்றைய அர்த்தராத்திரியில் குடுகுடுப்பைக்காரன் சொன்னது பலித்து விட்டது.

எல்லாம் பாழாய்ப் போன சொத்து பண்ணிய வேலை.

அத்தை ஆரம்ப முதலே இதற்கு எதிர்ப்புக் காட்டி வந்தது இப்பொழுது தான் தெரிகிறது ஸ்ரீதரனுக்கு.

விட்டுப் போக எப்படி மனது வரும்?

பரமேஸ்வர மாமாவிற்கு கொள்ளியிட்டது போல இவருக்கும் போடுவோம். பாதகமில்லை. தீர்மானித்தான். அதுக்கு ஐம்பது, இதற்கு நூறு என்று சுற்றி வரும் மனிதர்களுக்கு நடுவில் ஒரு நல்ல முடிவெடுத்தான்.

அதே சமயம்..

லாட்ஜ் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் எஸ்.பி. சம்பந்தம். எழுந்து வந்து கைகுலுக்கி வரவேற்கிறார் எடிட்டர் ரங்கராஜன். நடுவில் திருதிரு விழியோடு கணியன்.

''என்ன ரங்கராஜ்.. எதுக்கு அவ்வளவு ஃபோர்ஸா என்னை நேர்ல பார்க்கணும்னீங்க..?''

''சொல்றேன். உக்காருங்க'' என்ற ரங்கராஜன் கணியனைப் பார்க்கவும் அவன் முகத்தில் அநியாயத்துக்கு ஒரு பதட்டம் பரவிக் கொண்டிருந்தது.

''ஆமா.. யாரோ ஒரு தொழிலதிபரை கூப்பிட்றதால்ல சொன்னீங்க. ஆனா இவர் வந்துருக்காரே..?''

''அது உங்களை கண்ட்ரோலா வெச்சுருக்கச் சொன்ன பொய். மிஸ்டர் கணியன் எம்.பி.பி.எஸ். பை த பை எஸ்.பி. சார் உங்களுக்கு பிளாக் மாஜிக்ல நம்பிக்கை இருக்கா..?''

ரங்கராஜன் கணியனுக்கு பதில் சொன்னபடியே எஸ்.பி. பக்கம் திரும்பினார்.

''பிளாக் மேஜிக்?''

''ஆமாம்.. இந்த பில்லி சூன்யம் வகையறா..''

''இவர் அதுல பெரிய நிபுணராம். இவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தத்தான் கூப்பிட்டேன்.''

''எனக்கு எதுக்கு இந்த அறிமுகம்?''

''தெரியும் எஸ்.பி.சார். காரணமில்லாமலா நான் செய்வேன்?''

''அஃப்கோர்ஸ். மெட்ராஸ்ல இருந்து சேலம் வந்துருக்கும்போதே நினைச்சேன். ஏதோ ஓர் அசைன்மென்ட்லாக் ஆகியிருக்கணும்னு.. என்ன ரங்கராஜன் அது. எனி பிராப்ளம்?''

''இவர்தான் பிராப்ளம். கேளுங்க சொல்வாரு. சொல்லுங்க மிஸ்டர் கணியன் எம்.பி.பி.எஸ்.'' - ரங்கராஜன் தந்திரமாகப் பேசி தன்னை வெளியே அழைத்து வந்தது. இப்படி எசகு பிசகாக மாட்டிவிட என்பது தெரியாத கணியனுக்குள் இப்பொழுது எரிமலையின் கசிவு.

''வேண்டாம் ரங்கராஜன். டோன்ட் ப்ளே வித் மீ. நான் ரொம்ப டேஞ்சரஸ் பர்சன்.'' கத்தினான்.

''அதைத்தான் எஸ்.பி. சாரும் தெரிஞ்சிக்கணும்னு நான் விரும்பறேன். உங்கள் ஸ்டேட்மென்டுக்கு ரொம்ப நன்றி. பரமேஸ்வரன் குடும்ப விஷயத்துல நீங்க செய்ய நினைச்ச தில்லு முல்லுகளைச் சொல்லுங்க இப்ப..''

''எது தில்லுமுல்லு.. வைச்ச சூன்யத்தை எடுக்க வந்ததா?''

''அப்படியா.. அப்ப எது சூன்யம்?''

''அதை உனக்கு வெச்சாத்தான் புரியும்.''

''கமான் வையுங்க. எனக்கு அதுபத்தி தெரியணும். காலங்காலமா பகுத்தறிவோடு பேசற மனிதர்கள் எல்லாம்

பம்மாத்துன்னு சொல்ற அது. நிஜமாலுமே பம்மாத்தா இல்லை சத்தியமான ஒரு விஷயமான்னு எனக்குத் தெரியணும். சுமான் வை மேன் வை...''

''அந்த மான் தோல் பைல இருக்கு என் பலமெல்லாம், அதைக் கொண்டு வா. நான் யார்னு காட்றேன்.''

கணியன் கத்தினான்.

''அவ்வளோதானே.. கொண்டு வரேன். மாதங்கி பத்தி எனக்குத் தெரியும். அதை எல்லாம் மிகப்பெரிய விட்னஸா நினைச்சு அவ அதை பத்திரமாதான் வெச்சிருப்பா. எங்க இருந்தாலும் என்னை காண்டாக்ட் பண்ணப் பார்ப்பா. அப்ப அவகிட்ட இருந்து அந்தப் பையை வாங்கித் தரேன். நீ அதை வெச்சு டுபாகூர் வேலை காட்டாம உன் வித்தையைக் காட்டணும். காட்டலை..''

எடிட்டர் ரங்கராஜன் பற்களை நறநறத்தார். கணியன் அந்தப் பதட்டத்திற்கு நடுவிலும் சிரித்தார். சற்று அச்ச மூட்டும் சிரிப்பு.

''எதுக்கு சிரிக்கிறே?''

''சிரிக்காம என்ன பண்ண.. அந்தப் பொண்ணை மட்டும் நிஜமாலுமே க்ரூதகி பிடிச்சிருந்தா இந்த நிமிஷம் அவபச்சை இரத்தம் குடிச்சிக்கணும். யாரை எங்க எப்படி பிடிச்சு குடிச்சிருப்பாளோன்னு நினைச்சுப் பார்த்தேன்.''

கணியனின் கருத்து ரங்கராஜனை அவரது அசைக்க முடியாத நம்பிக்கையை மீறி அசைத்துப் பார்த்தது.

எஸ்.பி. இடையிட்டார்.

''ரங்கராஜன், புரியாமலே நீங்க. பேசிக்கிட்டா எப்படி.. என்ன நடந்தது?'' கேட்டார்.

ரங்கராஜன் சற்று பயத்தோடு நடந்ததையெல்லாம் சொன்னார்.

அனைத்தையும் கேட்ட எஸ்.பி.க்கே சற்று எலும்பில் ஜில்லிட்டது. கூடவே நட்டுமாமா தனது ஆபீசுக்கு போன் செய்து அழைத்து, கொடுத்த வாக்குமூலம் இப்பொழுது ஞாபகத்துக்கு வந்தது.

"பை த பை. இன்னிக்கு காலைல பத்துமணி சுமாருக்கு ஒரு வயசானவர் ஆக்சிடெண்ட் கேஸ்ல சாகக் கிடந்தவர் முக்கிய உண்மையச் சொல்லணும்னு எங்க ஆபீஸீக்கு தகவல் தந்திருக்கார். நான் ஏரியா போலீஸோட என் அசிஸ்டெண்ட்டையும் அனுப்பினேன். அதுல தான் பரமேஸ் வரன்கிறவர்க்கு விஷம் வெச்சு கொன்னுட்டதாகவும் அப்படி செய்யச் சொன்னது வீரநரசிம்மன்ங்கறவர் பேமிலிங் கறதும் என் கவனத்துக்கு வந்தது. நீங்க சொல்றதும் அந்த ஃபேமிலி யைத் தானோ?"

"என்னது நட்டு மாமாவுக்கு ஆக்சிடெண்டா?"

"ஆமா.. இப்ப அவர் இல்ல. போய் சேர்ந்துட்டார். நான் கூட யார் அந்த வீரநரசிம்மன் பிடியுங்கன்னு சொல்லி யிருக்கேன்."

எஸ்.பி.சொன்ன தகவலில் கணியன் உடல் மொத்த மாக நடுங்கிற்று. பிள்ளையார் பிடிக்க குரங்காகி விட்டதும் புரிந்து போயிற்று.

இனி அப்ரூவர் ஆகிவிடுவதுதான் நல்லது என்று மனதிற்குள் வெளிச்சம் விழுந்தது.

"சார் நான் பணத்துக்கு ஆசைப்பட்டுட்டேன். இப்ப தப்பை உணர்றேன். நான் இனி நீங்க சொல்றபடி எல்லாம் கேக்கறேன். எப்படியாவது அந்த மான் தோல் பையோட ஓடிட்ட மாதங்கியைப் பிடியுங்க சார். இல்லேன்னா வீர

நரசிம்மன் குடும்பத்த சேர்ந்த ஒருத்தரைக் கூட உயிரோட பார்க்க முடியாது.''

“என்னய்யா சொல்றே?''

“ஆமா சார்.. க்ரூதகி ஓர் அசாதாரண தேவதை. அவளை வசப்படுத்த வீரநாசிம்மன் எனக்கு நிறையப் பண உதவி செய்தான். பதிலுக்கு பரமேஸ்வரன் குடும்பத்தை சூன்யம் வெச்சு மிரட்டி வழிக்குக் கொண்டு வரணும்கறது என் வேலை. அதுக்குண்டானதை நானும் செய்யத் தொடங்கினேன். ஆனா எங்க எப்படி தப்பு நடந்ததுன்னு தெரியலை. மாதங்கியால எல்லாமே கெட்டுப் போச்சு. இப்ப அந்த மாதங்கியையை க்ரூதகி பிடிச்சுட்டா. மாதங்கிக்கு மட்டுமல்ல அந்தக் க்ரூதகிக்கும் வீரநரசிம்மன் குடும்பம் பெரிய எதிரி.''

கணியனின் விளக்கத்தில் புரிந்து கொள்ள முடியாத ரகசியங்கள்!

★ ★ ★

# 19

*திற்பரப்பு சாமியார் ஓர் அதிசய மனிதர் தான்.. விஞ்ஞானம் பற்றிப் பேசியபோது சிரித் தார். அண்ட பகிரண்டத்தில் அது ஒரு கர்வம் பிடித்த விஷயம் என்றார். அதேசமயம் அதை தனக்கு நிறையப் பிடிக்கும் என்று சொல்லி ஸ்ரீஹரிகோட்டாவில் ஒரு விஞ்ஞானி பெயரைச் சொல்லி அவர் பர்ஸில் தன் போட்டோ கூட இருப்பதாக கூறினார். இப்படி நிறைய பேர் இருக்கிறார்கள் என்றேன். சரி உண்மையைச் சொல்லுங்கள். இந்த தேவதைகள் சமாசாரமெல் லாம் எவ்வளவு தூரத்துக்கு உண்மை என்று கேட்டேன். சிரித்துக் கொண்டே நீயும், நானும் பேசிக் கொள்ளும் இந்த வாழ்க்கை இருக்கிறதே இதுவே, ஒரு தூக்கத்தின் கனவுப் பகுதிதான் என்றார். குழம்பியது.*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து..*

கணியன் சொன்னதைக் கேட்டு ஒரு பக்கம் சற்று சிரிக்கவும் செய்தார் ரங்கராஜன். அதை கணியனும் கவ னித்தார்.

''சிரிக்காதீங்க சார்.. நான் இப்ப சொல்றதெல்லாம் நிஜம். அந்தப் பை ரொம்ப அபாயகரமான பை. அதுல இருக்கற சில மைகள் ரொம்ப பயங்கரமானது. நான் திரும் பவும் சொல்றேன். மாந்த்ரீகம். மை எல்லாம் லேசுப்பட்டது கிடையாது.

அந்த உன்னதமான வித்தை பேரால சத்தியம் செய்து எல்லாத்தையும் சொல்றேன். நம்புங்க..

பரமேஸ்வரனுக்கு தன் அப்பா சொத்துல பங்கு தர நினைச்சது வீரநரசிம்மனுக்கு பிடிக்கல. ஏன்னா பரமேஸ்வரனோட அம்மாவை பரமேஸ்வரன் அப்பா முறைப்படி கல்யாணம் செய்துக்கல. வீரநரசிம்மன் அம்மாவோட குணமும் தன்மையும் பிடிக்காமதான் கல்யாணம் செய்துகிட்டார். இதனால் சொத்துத் தகராறு ஏற்பட்டது.

இதுக்கு இடைல உயில் எழுதி வைக்காமலே அவர் இறந்துட்டார். அவர் இறந்துட்டாலும் இந்திய சட்டப்படி ஒருவருக்கு எத்தனை மக்களோ அவர்களுக்கு சொத்து சமமா பிரிக்கப்படணும். இது தெரிஞ்ச வீரநரசிம்மன் முதல்ல பரமேஸ்வரன் தன் அப்பாவுக்குப் பிறந்தவரே இல்லேன்னு சாதிக்கப் பார்த்தான். முடியல. பரமேஸ்வரன் அதை ஒரு சவாலா எடுத்து கோர்ட்டுல தான் ஒரு வாரிசுங்கிறதை நிரூபித்தார்.

இந்த நிலைல வேறு வழியில்லாம வீரநரசிம்மன் சொத்தைப் பிரிச்சுத் தந்தான்.

அதுல பரமேஸ்வரனுக்கு வந்தது தான் ஒண்ணுக்குமே பயன்படாதுங்கற நிலைல அவன் நினைச்ச தாமிரப் பாடிங்கிற ஊர்ல காட்டு நிலம்.

பின்னால அதுல மாக்னசைட் இருக்கிறது. தெரிஞ்சப்போ அவன் மனசு மாறிப்போச்சு. அதை பக்குவமா பரமேஸ்வரன் கிட்ட திருப்பிக் கேட்டான். பரமேஸ்வரனும் மொந்து கொடுத்துட்டார்.

பின்னால் பரமேஸ்வரனுக்கும் தெரிஞ்சிருச்சு. அதுல மாக்னசைட் இருக்கற விவரம். அதோட அது பல கோடி

மதிப்புங்கறதும் புரிஞ்சது. தான் வீரநரசிம்மனால ஏமாத்தப் பட்டது தெரிஞ்சு அவரும் கோர்ட்டுக்குப் போனார்.

இந்த நிலைல பரமேஸ்வரனை மிரட்டி வழிக்குக் கொண்டு வர. அவன் பயன்படுத்த நினைச்ச ஆயுதம்தான் மாந்திரீகம். அதுக்காக என்கிட்ட வந்தான். நான் பிரஷ்ணம் போட்டு பரமேஸ்வரனுக்கு சூன்யம் வைக்க வழி இருக் கான்னு பார்த்தேன். இல்லைன்னு வந்தது.

பரமேஸ்வரனுக்கு சூன்யம் வைக்க முடியாதுங்கற துக்குக் காரணம், அவர் வீட்டு கிணத்துல இருந்த பைர விங்கற ஜலதேவதைதான். ரொம்ப சக்தி வாய்ந்த ஒரு காவல் தெய்வத்தை அவர் முன்வினைப் பயன் காரணமா ஒரு சாமியார் மூலமா அடைஞ்சிருந்தார்.

அதை அந்தக் கிணத்துல இருந்து அப்புறப்படுத் திட்டா ஒருக்கால் சூன்யம் வைக்கலாம்னு சொன்னேன்.

அதுக்கான வேலைகள்ல இறங்கினேன். செத்த நட்டு மாமா மூலமா குழந்தையோட பிஞ்சுவிரல்களை குழம்புல போட்டும். தேள் பூரானை மளிகைச் சாமான் டப்பால போட்டும் பீதியை உருவாக்கினோம்.

அவங்க பயப்படத் தொடங்கும்போது சூன்யம் இருக்கு எடுக்கப் போறேன்னு சொல்லி உள்ளே போனேன். போன இடத்துலதான் க்ஷுதகியை காவலா வெச்சு பைர விங்கிற கிணத்துக்குள்ள இருக்கிற அந்த பிரதமையோட சக்தியை அடக்க முடிவு பண்ணினேன்.

ஆனா, மறுபக்கம் மாதங்கி க்ஷுதகியை தூக்கி எறிஞ்சு ரகளை பண்ணினா. பைரவிங்கற பிரதமையையும் எடுத்துட்டதா சொல்லி காட்டினா. அது பைரவி இல்லைங் கிறது என் யூகம்."

கணியன் நிறுத்தவும்.. "யூ ஆர் கரெக்ட்!" என்றது ரங்கராஜன் குரல். கணியனுக்குள் அதிர்ச்சி. கண்ணா முழியில் அது 2 x 2 x 2 வாக பெருகிக் கொண்டே போக ஆரம்பித்தது.

"என்ன பாக்கறீங்க? மாதங்கி கிணத்துல இறங்கி அதை எடுக்கிற மாதிரி நடிச்சா. உங்களை ஏமாத்த ஏதோ ஒரு பொம்மையைத்தான் காமிச்சா. உங்க கூட்டத்தை மிரட்ட நானே க்ருதகின்னு சொல்லப் போறேன்னும் என்கிட்ட சொன்னா.. அந்த ராத்திரியில் நானும் சரின்னு சம்மதிச்சேன். அதோட எதிரொலிதான் அந்த பொம்மையை அவ எடுத்து எறியப் போய் அவளையே பிடிச்சுக்கிட்டதா சொன்ன பொய்.. எப்படியாவது காலைல உங்களை செயல்படவிடாம தடுக்கணும்கறது எங்க தீர்மானம் அதை நிறைவேற்றிட்டோம்."

ரங்கராஜன் அசகாய சூரத்தனம் மாதிரி பாவனைகளோடு பேசி முடிச்சதும், கணியன் முகத்தில் அநியாயத்துக்கு குழப்ப ரேகைகள், கூடவே கேள்வி.

"அதுசரி... நான் சூன்யம் எடுக்க வரலை. வைக்க வந்தேன்கறது அவளுக்கும், உங்களுக்கும் எப்படித் தெரியும்?"

"அங்கதான் மாதங்கிக்கும் அப்பாக்கும் உள்ள அழுத்தமான பாசத் தொடர்பு காரணமா இருக்கு, கூடவே அவர் டைரியும் ஒரு பெரிய காரணம். அதுல கிணத்துல அவர் பைரவிய போட்ட விஷயம் ரொம்ப பாசிடிவா குறிக்கப் பட்டிருக்கு. பாக்கறீங்களா?"

ரங்கராஜன் பக்கவாட்டில் உள்ள ஹேண்ட் பாக்கில் இருந்து டைரியை வெளியே எடுத்தார்.

கணியன் டைரியை பார்த்தபடியே கேட்டார்.

"இதுல நான் சூன்யம் வைக்கப்போறேன்னு பரமேஸ்வரன் எழுதியிருக்காரா?"

"அப்படி எழுதல.. வேற மாதிரி குறிப்புகள் இருக்கு."

"அப்போ எப்படி?"

"ஏன் அவர் ஆவி வந்து சொல்லிச்சுன்னு வெச்சுக்குங்களேன்."

"கிண்டல் பண்றீங்களா ரங்கராஜன்...?"

"ஏன்யா நீங்க சொல்ற மை மாந்திரீகத்தை நான் நம்பணும். நான் சொல்றத நீங்க நம்ப மாட்டீங்களோ?"

"நான் நம்பாம கேக்கல... ஆவிகள் வரும்... மீடியங்கள் மூலமா பேசும் காலங்காலமா நடந்துகிட்டிருக்கு. ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் இது உண்டு. ஆனா நமக்கு தான் அது ஆவிங்கறது தெரியாது.

நீங்கள் அதுலல்லாம் நம்பிக்கை இல்லாதவர். அப்படிப்பட்ட நீங்களே இப்படிச் சொல்றீங்களே, அதான் அப்படிக் கேட்டேன். ஓபனா பேசறதுன்னு முடிவு பண்ணி பேசிக்கிட்டிருக்கோம். அதனால கேக்கறேன். உண்மையைச் சொல்லுங்க. அது பரமேஸ்வரன் ஆவிதானா?"

"அது எனக்குத் தெரியாது. அதுல எனக்கு நிறைய குழப்பங்கள் இருக்கு. அதைப் பத்தி மாதங்கி கிட்டதான் அப்புறமா பேசணும். ஆனா ஒண்ணு. நீங்க ஃப்ராடு பண்ணப் போறது தெரிஞ்சு நாங்க போட்ட ட்ராமா முக்காலே மூணு வீசம் ஒர்க் அவுட்டாயிடிச்சு.

பரமேஸ்வரனைப் போல் சாதுர்யமா மாதங்கி பேசினதை டேப் பண்ணி அவர் ரூம்ல வெச்சு ஒலிபரப்பி நட்டுமாமாவை மிரட்டி வழிக்கு கொண்டு வரணும்னு அந்த ராத்திரியில நாங்க திட்டம் போட்டோம். வெத்தலை

போட்டு துப்பறது. நாற்காலிய ஆட்டி விடறதுல்லாம் ஸ்ரீதரன் வேலை. அதைத்தான் ஸ்ரீதரன் திறமையா செயல் படுத்தினான். ஆனா, அதுலமிரண்டு நட்டுமாமா ஓடிப் போய் ரோட்ல ஒரு வாகனம் மேல விழுந்து அடிபட்டுச் சாவார்னு நாங்க யாருமே எதிர்பார்க்கல.

நல்லவேளை மனுஷன் சாகறதுக்கு முன்ன உண்மை களைச் சொல்லி எங்க முயற்சிக்கு நம்பிக்கையும், வெற்றி யும் தந்துட்டார்.

உங்க கூட்டமும் இப்ப ஆடிப்போய்க் கிடக்கு..'' ரங்க ராஜனின் விளக்கத்தில் கூடவே இன்னொரு கருத்து.

''இந்த விஷயங்கள் வெச்சு நான் மாதங்கிய ஒரு தொடர் பண்ணச் சொல்லப்போறேன். அவ்வளவு சூது. அவ்வளவு ஆசை. அவ்வளவு த்ரில்...''

''உஷ்...!'' னு மிரட்டலா ஒரு தலைப்பு வெச்சுடுங்க எடிட்டர் சார்.'' எஸ்.பி.யும் தன் பங்குக்கு காலை மாற்றிப் போட்டு அமர்ந்தபடி ஊதிவிட, கணியன் தலையை கோதி விட்டுக் கொண்டார்.

''என்னதான் எல்லா சூதுகளும் உங்களுக்கு வெளிய தெரிய வந்துட்டாலும் வீரநரசிம்மனை உங்களால் பிடிக்க முடியும்னு நான் நம்பல.

அதோட க்ருதகின்னு மாதங்கி தன்னை சொல்லிக் கிட்டாள்னு சொன்னீங்களே. அதையும் நான் நம்பத் தயா ரில்லை. க்ருதகி நிஜம்! அவகிட்ட யாரும் இப்படி விளை யாட முடியாது. விளையாடினா தொலைஞ்சாங்க. அதே போல் அந்தப் பை, அதுல உள்ள மைகள், மற்ற விஷயங் கள் எல்லாமே என் வரையில் ரொம்ப அபாயமானவை.

எழுதிவேணா தரேன். க்ருதகி மாதங்கிய விடப் போறதில்ல. அவ மூலமா வீரநரசிம்மன் வட்டத்தையே கலங்க அடிக்கப் போறா. விட்டா என்னையும் அடிப்பா.

ஏன்னா எங்க வசம் உள்ள எந்த ஒரு தேவதையும் எங்க கிட்டேயே இருக்க விரும்பறதில்ல. நாங்க அசந்தா பறக்க முயற்சிப்பாங்க... நான் சொல்றதை. நீங்க மாதங்கி இனி நடந்துக்கப் போறதப் பார்த்து நம்புவீங்க..''

''இல்லையே.. மாதங்கி கொஞ்சம் முந்திகூட ஒரு லாட்ஜ்ல இருந்து என்கிட்ட தெளிவாகப் பேசி எல்லா விஷயத்தையும் கேட்டு தெரிஞ்சுகிட்டாளே... எப்படின்னு பாக்கறீங்களா? நீங்க குளிக்க பாத்ரூம் போனப்போ..''

''அப்படியா.. சரி. அதுதான் எல்லா விஷயமும் தெளிவாயிடிச்சே, வீரநரசிம்மன் குற்றமும் தெரிஞ்சு போச்சு, நானும் ஸ்டேட்மெண்ட் கொடுத்துட்டேன்ல். அவளை இங்க வரச் சொல்லுங்களேன். எதுக்கு இன்னும் ஒளிஞ்சுகிட்டு..?''

ரங்கராஜனுக்கு அது சரியாகப் பட்டது. உடனேயே தொலைபேசியை கழற்றி மறுமுனையில் மறைந்திருந்த மாதங்கியைப் பிடித்தார்.

''மாதங்கி... நான் எடிட்டர் பேசறேன். நீ இப்ப இங்க வரலாம்.''

''அங்க அந்த கணியன் இருக்காரா?''

''ஆமாம். அவரோட அந்தப் பையையும் கொண்டு கிட்டு வா. அதுல பயங்கர அபாயமான மையெல்லாம் இருக்காம். அவரோட மிரட்டலைத் தாங்க முடியல..''

''அது உண்மைதான்டா ரங்கராஜா! இந்த க்ருதகி இனி அவன் வசம் மாட்ட மாட்டாள்னு சொல்...''

ரங்கராஜனிடமிருந்து ரிசீவர் லொடக்கென்று நழுவியது.

★ ★ ★

# 20

*திற்பரப்புச் சாமியார் என்னை தனது தியான கூடத்திற்கு அழைத்துச் சென்றார். பார்க்க பிரமிடு ஷேப்பில் இருந்தது அந்தக் கட்டடம். எகிப்து நினைவு தானாக வந்தது.*

*'உயிர் இல்லாத சவங்களையே பஞ்ச பூதங்களிடமிருந்தும் பாதுகாக்க முடிந்தது இந்தக் கூரை. உயிருள்ளவர்களை எப்படி எல்லாம் பாதுகாக்கும் யோசித்துப் பார்' என்றார்.*

*எப்படி என்று கேட்டேன். அதில்தான் இருக்கிறது ரகசியம். ஒன்றும் பிரமாதமில்லை. பிரபஞ்சக் கதிர்களையும், தட்பவெப்ப நிலைப் பாட்டையும் இந்தக் கூரை ஓர் ஃபார்முலாப்படி பிரித்து ஒதுக்கி சில விஷயங்களைச் செய்கிறது. இதன் கீழ் அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்தப் பாருங்கள். நாய்க் குட்டிபோல அது ஓடிவந்து அடங்கும் என்றவர், இதில் அமர்ந்து தேவதை களையும் அழைத்துப் பேசலாம் என்றார். உலகில் தான் எத்தனை புதிர்கள்.'*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து*

ரிசீவரை நழுவவிட்ட ரங்கராஜனை கணியன் கச்சித மாக மடக்கத் தொடங்கினான்.

''என்ன எடிட்டர் சார்? என்னாச்சு.. மாதங்கின்னாளா? இல்லை தன்னை க்ருதகின்னாளா?''

''நீங்க சொன்னதுதான் சரி!''

ரங்கராஜன் குரலில் சுரத்து செத்துப் போனது. எஸ்.பி. சம்பந்தத்திற்கு எல்லாமே ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவரும் தன் பங்கிற்கு நோண்ட ஆரம்பித்தார்.

''என்னாச்சு ரங்கராஜன். ஏன் டல்லாயிட்டீங்க...?''

''கணியன் சொன்ன மாதிரி நமக்கு தெரியாத புரியாத விஷயமெல்லாமும் இந்த வேர்ல்டுல இருக்கு.''

ரங்கராஜன் குரலில் கவலை ஜீவ சுத்தமாக வெளிப் பட்டது.

''நான் சொல்றேன். வீரநரசிம்மன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தர் கூட உயிரோடு இருக்க முடியாது. க்ரூதகி இருக்க விடமாட்டா..''

''எப்படி?''

''எப்படின்னா.. இது என்ன கேள்வி. அவ சர்வ சக்தி படைச்சவ. அவமனசு வெச்சா அதுதான் நடக்கும். அதுக்கு வசதியா அவளை அடக்க முடிஞ்ச விஷயங்களையும் மான் தோல் பையோடு சேர்த்து அவ கொண்டு போயிட்டா. ஆகையால நீங்க என்னதான் தலையால தண்ணீ குடிச் சாலும் மாதங்கியால வரப்போற.. மன்னிக்கணும் க்ரூதகி யால வரப்போற ஆபத்துல இருந்து யாரும் தப்பிக்கவே முடியாது. அதுல நானும் கூட இருக்கேன்.''

கணியன் தன் கருத்திற்கு அழுத்தம் கூட்டினான். ரங்கராஜன் தலையை தேய்த்துக் கொண்டார்.

''நான் இம்மிடியட்டா விஜிலன்ஸ் பாரா போடறேன். அவ ஒருக்கால் தவறா நடக்க முயற்சி செய்தா அவங்க தடுத்துடுவாங்க. அப்படியே அந்த வீரநரசிம்மன் குடும்பத் திற்கும் காவல் போட்டுடறேன்'' என்றார் எஸ்.பி.

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான் ஸ்ரீதரன். எதிர்ப்பட்டாள் லக்ஷ்மி.

"மாமிக்கு இப்ப எப்படி இருக்கு..?"

"தேவலை. ஆனா நட்டு மாமா போய்ச் சேர்ந்த விஷயத்தைச் சொல்லலை. டாக்டரும் தெரிய வேண்டாம் னுட்டார்."

"அதுவே தெரிய வேண்டாம்னா மாதங்கி பத்தி கேள்விப்பட்டா அவ்ளோதான்."

"என்னாச்சு மாதங்கிக்கு.. ஆத்துலதான் இருக்கா?"

ஸ்ரீதரன் சொல்லச் சொல்ல லக்ஷ்மிக்குள் அனல் அடித்தது. பக்கமாக மரபெஞ்சில் போய் உட்கார்ந்து கொண்டு தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"கடவுளே.. என் குடும்பத்தை என் இப்படி பாடாப் படுத்தறே?" என்று வருத்தம் பிளிறியது. உதடு. அப்போது ரேவதி வந்தாள். கையில் டிபன் பொட்டலம்.

"என்ன ஸ்ரீதரா.. நட்டு மாமாவை எரிச்சாச்சா...?"

"முடிஞ்சது ரேவதி! சரி எப்ப டிஸ்சார்ஜ் பண்ணுவாளாம் கேட்டியா?"

"இன்னும் நாலு நாள் ஆகும்றா. அப்பா காரியம்லாம் அப்படியே அந்தரத்லே நிக்கறது. இப்படி ஆயிடுத்தே ஸ்ரீதரா!"

"கவலைப்படாதே. வாத்தியார் ஆத்தங்கரைல வெச்சு தானே பண்ணிடறேன்னுட்டார். நீங்க இங்க ஜாக்ரதையா பாத்துக்கோங்க."

"என்ன கண்றாவி இது. ச்சே!" ரேவதி சலித்துக் கொள்ளும்போது வக்கீலின் வருகையும் நிகழ்ந்தது.

முன்பே வருவதாகச் சொன்னவர் இப்பொழுதுதான் வந்திருக்கிறார்.

"கேஸைப் பத்தி இனி கவலையேபடத் தேவையில்லை. அடுத்த ஹியரிங்ல ஜட்ஜ்மெண்ட் வந்துடும். வீரநரசிம்மன் ஃப்ராடு வேலை நட்டு மாமா வாக்குமூலத்தால ஜட்ஜ் வரை வந்துருத்து. விசித்திரமான சொத்து தகராறா இருக்கேன்னு என்னண்ட கூட ஸ்லாகிச்சுண்டார். ஆமா எங்க மாதங்கி?"

வீட்டுத் திண்ணையில் போலீஸ் உட்கார்ந்திருந்தது. காபி, டிபன் என்று தர்பாரான உபசரிப்பு அந்த நாளைய நாட்டு ஓடு வேய்ந்த வீடு. நடுவில் முற்றமுண்டு. சுற்றிலுமாக வராண்டா.

அதில் அங்கும் இங்குமாக வீரநரசிம்மன் குடும்பம் அமர்ந்திருக்கிறது. ஒருவர் முகத்தில் கூட சுரத்தில்லை. என்னவோ நினைத்தார்கள். என்னவோ ஆகிவிட்டது. வீரநரசிம்மனின் தாயான பாகீரதி ஏதோ முடிவுக்கு வந்தது போல் எல்லோரையும் பார்த்தாள்.

'இப்படியே கப்பல் கவிழ்ந்த மாதிரி ஒக்காந்துண்டுருந்தா ஆச்சா? இந்த பிரச்சினையை இப்படியே விட்டுட முடியாது. சிவசு நீ போய் செத்த காட்டுப்புத்தூராரைப் பார்த்துட்டு வா. அவர் க்ருதகி இல்ல. அதுக்கு மேல உள்ள எமகாதகியையே என்னன்னு கேக்கறவர். அவரோட மந்திராப்பியாசம் முன்னால இந்த குட்டியால என்ன பண்ண முடியும்?'

"நல்ல ஐடியாம்மா.. மாமாவை பாக்கறது தான் இப்போதைக்கு நமக்கு இருக்கிற ஒரே வழி. அவரை நான் இங்கேயே கூட்டிண்டு வந்துடறேன். அவர் வந்துட்டா ஒரு பிரச்சினையுமில்ல. இந்த க்ருதகி பத்தி சொன்னவரே அவர்தானே?"

சிவசு முகத்தில் உற்சாகம் தெரிந்தது. நாமக்கல் தாண்டி சென்று வர வேண்டும் காட்டுப்புத்தூருக்கு.

வெளியே வந்தவனை ஒரு போலீஸ்காரர் பார்த்தார்.

''எங்க சார் கிளம்பிட்டீங்க?''

'ஒரு பர்சனல் ஒர்க்.''

''வேணாம் சார்.. அப்பால நாங்க எஸ்.பி. ஐயாவுக்கு பதில் சொல்ல முடியாது. நீங்க எஸ்.பி. அய்யாக்கிட்ட பேசி பர்மிஷன் வாங்கிட்டுப் போங்க.''

சிவசு நொந்து போனான். சரி என்பது போல உள்ளே சென்று அவரோடு பேச ஆயத்தமானான்.

''குட்மார்னிங் சார், நான் சிவசுப்பிரமணியன் பேசறேன்.''

''சொல்லுங்க..''

''இப்ப இருக்கற நிலைல எங்களுக்கு உங்க காவலெல்லாம் பத்தாது. க்ரூதகி சச் எ க்ரூஷியல் ஜெய்ன்ட். அவளை அடக்க முடிஞ்ச ஒருத்தர் காட்டுப்புத்தூர்ல இருக்கார். அவராலதான் அந்த மாதங்கியைப் பிடிக்க முடியும்னு நான் நினைக்கிறேன்.''

''சரி என்ன பண்ணணும்?''

''அவரை பார்த்து அழைச்சுகிட்டு வரணும்.''

''அட்ரஸ் தாங்க. மத்தத நான் பார்த்துக்கறேன்.''

அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை. அட்ரஸ் தந்தான்!

கணியனும் ஆமோதித்தான்.

''ஆமாம், காட்டுப்புத்தூரார் வந்தா மாதங்கிய எங்க இருந்தாலும் வர வெச்சுடுவார்..''

அருகிலிருந்த ரங்கராஜனுக்கு சிரிப்பதா, அழுவதா என்றே தெரியவில்லை.

அதேசமயம் காட்டுப்புத்தூராரையும் சந்திக்க ஒருவர் கிளம்பியிருந்தார்.

காட்டுப்புத்தூர் ஸ்ரீனிவாச வரதாச்சாரி. அழுக்கு பஞ்ச கச்சமும் அறுபது எழுபது நாள் தாடியும் குடுமியாகவும் இருந்தார்.

காதில் ஒரு சிவப்புக் கல் கடுக்கன், நெற்றியில் திரு மண், சற்றே பெரிய தொந்தி. அதை மூடியபடி இருக்கும் அங்கவஸ்திரம்.

அவர் எதிரில் ஒரு குடும்பம் உட்கார்ந்திருந்தது.

அவர் வீட்டு பூஜையறையில் நரசிம்மமூர்த்தி படத் தின் முன்னாலும் ஆஞ்சநேய மூர்த்தி படத்தின் முன்னா லும் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

கையில் ஒரு உரிக்கப்படாத காய்ந்த முழுத் தேங்காய் அதை வைத்துக் கொண்டு கண்களை மூடியபடி எதையோ ஜெபித்துக் கொண்டிருந்தார். ஜெபித்து முடியவும் அந்தத் தேங்காயை அந்தக் குடும்பத்துப் பெரியவர் கையில் தந்தார்.

''இதைப் போய் வீட்டு முன்னால கட்டுங்கோ. ஒரு விரோதியும் வீட்டுக்குள்ள நுழைய மாட்டான். வாசலிலேயே இது அவங்களை துரத்திடும்.''

அவர் உள்ளே சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்தாள் மாதங்கி.

* * *

# 21

*உபாசனை பற்றி திற்பரப்பு சாமியார் சொன்னது எனக்கோர் ஆச்சரியம். ஸ்ரீ யந்திரத்தை வைத்து உபாசிக்கும் உபாசகர்கள் லட்சம், கோடி என்று நாமாவளிகளில் விரிவடையும் போது அவர்களுக்குள் அபார சக்திகள் கிளர்ந்தெழுமாம். அது தெருவில் தன்னைப் பார்க்க வருகிறவர்களைக் கூட மனக் கண்ணில் காட்டுமாம்.*

*இந்த பூஜைகளுக்கு அம்பாள் மகிழும் பட்சத்தில் ஒரு கன்னிப் பெண் ரூபத்தில் அந்த உபாசகரை வந்து பார்த்து ஆசீர்வதித்து விட்டுச் செல்வாளாம். எனவே உபாசனையில் உள்ள தாந்திரீகர்கள் எந்தக் கன்னிக்குள் அவள் இருப்பாளோ என்று எல்லாக் கன்னியரையும் வணங்குவார்களாம். வணங்கவும் வேண்டுமாம். அம்பிகை என்றல்லாமல், நாம் உபாசிக்கும் தேவதைகள் அனைவருமே இப்படி வந்து செல்வார்களாம். தேவதைகளும் சக்தி ஸ்வரூபங்களைச் சேர்ந்தவர்கள் தானே?*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...*

மாதங்கியைப் பார்த்த காட்டுப்புத்தூரார் குழப்பத்துடன் "யாரும்மா நீ.. உனக்கு என்ன வேணும்?" என்றார்.

மாதங்கி பதில் சொல்லாமல் சிரித்தாள்.

"சொல்லிவிட்டுச் சிரிம்மா.. யார் நீ.. உனக்கு என்ன வேணும்?"

"அடப்பாவி.. என்னையே உனக்குத் தெரியலையா..?" அவள் கேட்ட தொனி அவரை என்னவோ செய்தது. நின்ற இடத்திலேயே ஒரு மாதிரிப் பார்த்தவர், சட்டென்று நிலையின் மேல் இருந்த ஒரு பிரம்பை எடுத்துக் கைகளில் பிடித்துக் கொண்டார். பிரம்பின் நுனியில் ஒரு வெள்ளிப் பூண் பொருத்தப்பட்டு பார்க்க வெகு அழகாக இருந்தது. மாந்திரீக தாந்திரீகர்கள் இப்படிப் பிரம்புகளை வைத்துக் கொள்வது சகஜம்தான். அதிலும் அந்தப் பூணுக்குள் நிறைய விஷயங்கள் இருக்கும். அகோரமை, மாரணமை, ரூபகந்திமை என்று பல வசிய வாய வியவங்களை பூசி வைத்து இருப்பார்கள். அவற்றுக்கு மனம், வாக்கு, காயங்களை பிரட்டிப் போடும் சக்தி இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

அவர் தடியைக் கையில் எடுக்கவும் மாதங்கி மேலும் சிரித்தாள். சிரித்துவிட்டு, 'நான் பைரவிடா.. பைரவி. ஸ்வர்ண பைரவி..'' என்றாள். சிரித்தபடியே அந்தத் தடியை க்ஷணத்தில் பிடுங்கி ஒடித்தாள்.

அடுத்த க்ஷணம் பரவசத்தில் அவர் முகம் விரிந்தது.

கோடி ஜபத்தை நேற்றுதான் முடித்திருந்தார் இன்று அதன் பலன்!

அந்த வீட்டின் ஹால், சுமாரான சைஸில் ஊஞ்சல் தொங்கிக் கொண்டு இருந்தது. சுவர்களில் பலவிதப் படங்கள். ஒரு படம் ஒரு பெண்ணின் புன்னகை மிளிரத் தெரிந்தது.

மாதங்கி அங்கே போய் தேங்கி நின்றாள்.

"இது உன் மனைவிதானே?"

"அ.. ஆமாம்! ஆமாம்."

"உன் தங்க ஆசையைத் தீர்க்க முடியாம கிணத்துல குதிச்சு தற்கொலை பண்ணிண்டது இவதானே?"

மாதங்கியின் மடக்கலில் காட்டுப்புத்தூராரின் நெற்றியே பிளந்தது. மாதங்கி கேட்பது ஒரு ரகசியமான விஷயம். இப்படிக் கேட்டுப் போட்டு உடைக்கிறாளே..!"

"என்ன பாக்கறே.. நான் முக்கால பலகணி. ஜெகஜ் ஜால தேவதை. தெரியாதா நோக்கு..?"

"தெ.. தெரியும். தெரியும் வாம்மா! வா வந்து மணைல உட்கார்.."

"அதுக்குத் தானே வந்திருக்கேன்.."

அவரைப் பார்த்துச் சிரிச்சபடியே உள்ளே சென்று அவரின் பூஜை அறையில் கோலமெல்லாம் போடப்பட்டுக் கிடக்கும் பலகையைப் பார்த்தாள். பலகை மேல் ஒரு தலை மட்டும் உள்ள விக்ரகம்.

பார்க்க வழக்கம்ாய் சிருஷ்டி கொண்ட தெய்வம் போலவே இல்லை. காட்டுப்புத்தூரார் அந்த விக்ரகத்தை நகர்த்தியபடியே மாதங்கிக்கு கை காட்டினார்.

"உட்காரும்மா.. உக்கார்.. நீ வருவே வருவேன்னு பாத்திண்டிருந்தேன். என் பூஜைல குறை இல்லியே..?"

"இருந்தா வந்திருப்பேனா. நீ பரம பக்தன்டா! உன் சொர்ணாவஸ்தையை தீர்க்கப் போறேன்." அந்தப் பலகை மேல் உட்கார்ந்தபடியே சொன்னாள் மாதங்கி.

"அம்மா.. அனுக்ரஹி தாயே! அனுக்கிரஹி. சொர்ணம்

மட்டும் கிடைச்சுட்டா முதல் பிரதமையே நீதான். உன்னையே சொர்ணத்துல வார்த்து ஆறுகாலம் பூஜிக்கிறேன்."

"செய்வே நீ.. கட்டாயம் செய்வே! ஆனா அதுக்கு முந்தி எனக்கு நீ என் ஆசைகள் பலதை நிறைவேற்றணும்."

"சொல்லம்மா.. சிரசையே வெட்டி திருவடில வெக்கக் காத்திருக்கேன்."

"உன் சிரசு வேண்டாம். நான் சொல்லப் போறவா பலரோட சிரசுகள் எனக்கு வேணும்!"

மாதங்கியின் பதில் காட்டுப்புத்தூராரை மிரட்டியது. மௌனம் அவர் மென்னியில் கூத்தாடத் தொடங்கியது.

"என்னடா... பேச மாட்டேங்கறே! பலி வாங்கப் பயமா இருக்கா. உனக்கொண்ணும் அது புதுசு இல்லயே."

"அம்மா நீ என்னென்னவோ?"

"நீ இந்த வித்தை கத்துக்க ஆரம்பிச்ச நாள்ல செஞ்ச முதல் பலில இருந்து கடைசியா ஆல காலம் கொடுத்து கொன்னேளே பரமேஸ்வரன். அவன் வரை எனக்குத் தெரியும்டா."

காட்டுப்புத்தூரார் உறைந்து போகிறார்.

"என்ன பாக்கறே.. நான் ஜெகஜ்ஜால தேவதைடா.. முக்காலப் பலகணியாக்கும்."

"சரி தாயே.. யார் அவர்?"

"அப்படிக் கேள். அவா உனக்கு ஸ்நேகம்தன். சொத்துக்காக உன்னைக் கூட்டு சேர்த்துண்டவா. இப்ப உனக்கு எதிரா திரும்பி போலீஸ் வரைக்கும் போயிட்டா."

காட்டுப்புத்தூரார் முகத்தில் அதிர்ச்சி.

''உடனடியா கிளம்பு, அந்த வீரநரசிம்மன் அகத் துக்கு.'' மாதங்கி போட்ட போடு காட்டுப்புத்தூராரை ஓங்கி மண்டையில் குட்டியது போல் மிரள வைத்தது.

''என்ன பாக்கறே. உனக்கெதிராயும், எனக்கெதிராயும் போயிட்ட குடும்பம் அது. இப்ப போலீஸ் காவலோட உக்காந்திருக்கு. இதுக்கு நடுவுல உன்னை அழைச்சு நீ அடையாளம் காட்டினியே க்ருதகி.''

''ஆமாம்மா ஆமாம்... முப்பத்தாறு வருஷ அப்யா ஸத்துல எனக்கு தரிசனமாகி வசமானவ, மகா முண்டை அவ.''

''அவளை அடக்கிப் பிடிக்கத்தான் உன்னை எதிர் பார்த்துண்டுருக்கா.''

''ஐயோ அவ எகிறிட்டாளாக்கும்?''

''ஆமா.. என்னைப்போல ஒரு பெண்ணை பிடிச் சுட்டா அவ. அவளும் இப்ப எனக்குள்ள அடக்கம். நீ போய் அந்தக் குடும்பத்துல ஒருத்தர் விடாம கொல்றே. மொத்தமா வீரநரசிம்மனோட சேர்ந்து அந்தக் குடும்பத்துல எட்டுப் பேர்.

எட்டுப் பேரும் எட்டுவிதமான தப்புப் பண்ணினவா? மந்திர சாஸ்திரத்தை தங்களுக்கு சாதகமாப் பயன்படுத்தி அதன் பேரைக் கெடுத்தவா.

அவா எட்டுப் பேரும் மரிச்ச எட்டாம் நாள் நான் திரும்ப உனக்கு தரிசனம் தருவேன். அப்ப உனக்கு தங்கப் புதையல் இருக்கிற இடத்தையும் சொல்லி, வரம் தரு வேன்.''

''நிச்சயம் தருவியா..?''

''வாக்குத் தரேன்டா. பைரவி வாக்கு அந்தக் காம தேனுவோட வாக்காக்கும்.''

''என்னால நம்பவே முடியலம்மா.''

''என்னையேவா?''

''ஐயோ.. உன்னைச் சொல்வேனா?''

''சரி, வேதப் பத்திரத்தை எடுத்து கற்பூரத்தை ஏற்றி 'மந்திரத்தை வச்சு ஊரை ஏமாற்றமாட்டேன்'னு சத்தியம் பண்ணு. நான் மலை ஏறணும்.''

மாதங்கி உடம்பெல்லாம் பதற குரலில் ரௌத்திரம் காட்டினாள், காட்டுப்புத்தூரார். அந்தப் பூஜை அறையில் அவர் அமர்ந்திருக்கும் பலகை முன் கட்டிக் கற்பூரத்தை வைத்து தீயிட்டுச் சுடர்பிடித்தார்.

தளதளர்ந்தது தீ நாக்கு.

''உம்.. சொல்லு! பாதகம் பண்ணின அவாளை ஹதம் பண்ணி பிராணனைப் போக்குவேன்னு..''

''போக்கறேன்.. போக்கறேன்..''

''இந்த நிமிஷம் உனக்கு இனி மந்திரப் பிரயோகம் கூடாது. தந்திரத்தால் தான் இது நடக்கணும். அப்பத்தான் அவா ஆவியை நீ வசீகரிச்சுப் பிடிச்சு, ஏவலுக்கும் வெச்சுக்க முடியும்.''

''சித்தம் தாயே சித்தம்.''

''அவா உள் எண்ணமே க்ருதகியைப் பிடிச்சு அப்புறமா உன்னையும் கொல்றதுதான். எச்சரிக்கிறேன். க்ருதகியை விட்டுடு. அவளுக்கு நான் பரபதவி தரப் போறேன்.

உன் காரியத்துல நீ கண்ணா இருக்கணும்.

அப்பதான் தங்கப் புதையல். அப்புறமா நீ வேற. அந்த வடதிசைக் குபேரன் வேற இல்லை. தெரிஞ்சுக்கோ.''

அதைக் கேட்டு புளகாங்கிதப்பட்டு காட்டுப்புத்தூரார் தரையில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்யவும், பொத்தென்று மயங்கி அவர் மேலேயே விழுந்தாள் மாதங்கி. எழுந்து பார்த்தவளுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பின் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவிக்கவும், மலங்க மலங்கப் பார்த்தபடி கண் திறந்தாள் மாதங்கி.

''நான்.. நான் இப்ப எங்க இருக்கேன்?''

''அது இருக்கட்டும். நீ யாரும்மா உன் பேரென்ன?''

''என் பேரு.. என் பேரு மாதங்கி.'' நெற்றியைத் தேய்த்துக் கொண்டே சொன்னாள் மாதங்கி.

''எந்த ஊர் உனக்கு?''

''சே.. சேலம்!''

''அப்படியா.. இங்க எப்படி வந்தே?''

''எனக்கு எதுவுமே தெரியலை. நான் வழக்கமா கோவிலுக்குப் போவேன். அப்படிப் போனப்போ சிவன் கோயில்ல சப்த மாதாக்கள் சந்நிதி வழியா வந்தப்ப அந்தச் சந்நிதியில இருந்து ஒரு வெளிச்சம் வந்து என்னை ஆக்கிரமிச்ச மாதிரி இருந்தது. அவ்வளவுதான் தெரியும்.''

அடுத்த நொடி காட்டுப்புத்தூரார் படபடவெனக் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

''தாயே.. பைரவி, என்னை ரட்சிக்க இந்தப் பொண்ணு ரூபமா வந்தியாக்கும் அம்மா.. அம்மா!''

அவர் உதடுகள் சிலிப்பெடுத்து முணுமுணுத்தன.

"நீங்க என்ன சொல்றேள்." மாதங்கி சிணுங்கியபடியே கேட்க, "உனக்கு ஒண்ணும் தெரிய வேண்டாம்மா. நீ கிளம்பு. வா நானே உன்னை பஸ் ஏத்தி விடறேன். உன் வீட்ல தேடித் தவிச்சிண்டிருப்பா."

"இல்லை வேண்டாம். நான் போய்க்கிறேன். நானே போய்க்கிறேன்." எழுந்து கொண்டாள் மாதங்கி. மளமள வென்று கிளம்பிவிட்டாள்.

அடுத்த நிமிடமே கச்சிதமாக அங்கு வந்து சேர்ந்திருந் தார், சேலத்திலிருந்து புறப்பட்டிருந்த அந்தப் போலீஸ்காரர்!

★ ★ ★

# 22

*பொதுவில் மந்திர சாஸ்திரங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு நல்லவிதத்தில் மரணமில்லை என்றார் திறப்பரப்பு சாமியார். அவர்களாலும் தங்களது வித்தைகளைக் கொண்டு ஒழுங்காகக் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ள முடியாதாம். தப்பித் தவறி அவர்கள் சாயம் வெளுத்துவிட்டால், அவர்கள் உயிர் இருந்தும் இல்லாமல் வெண்குஷ்டமெல்லாம் வந்து சிரமப்படும் கொடுமைகள் நிகழுமாம். இதனால், பலர் தங்களது தசாபுத்தி தெரிந்து தங்களுக்குத் தாங்களே தண்டனை கொடுத்துக் கொள்ளும் முகமாக தற்கொலை செய்து கொள்வார்களாம்!*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...*

அந்தப் போலீஸ்காரர் உள்ளே நுழைந்தபோது தீவிர சிந்தனையில் இருந்தார் காட்டுப்புத்தூரார்.

போலீஸ்காரரைப் பார்த்துவிட்டு அவர் தடுமாறிப் போனார்.

''நீங்க யாரு?''

''நான் சேலம் க்ரைம் பிராஞ்ச் டிவிஷனைச் சேர்ந்த போலீஸ்..'' அந்தப் போலீஸ்காரர் சொன்ன கையோடு தனது அடையாள அட்டையை எடுத்துக் காட்டவும், காட்டுப்புத்தூரார் முகத்தில் கணிசமான அதிர்ச்சி.

''உங்களை மிஸ்டர் வீரநரசிம்மன் ஃபேமிலியில பார்க்கணும்னு பிரியப்படறாங்க. கூட்டிக்கிட்டுப் போக வந்தேன்.''

''ஏன்.. இதுக்கு அவாளே வரலாமே? போலீஸ்காரர் நீங்க எதுக்கு வரணும்?'' கேட்கும்போதே காட்டுப்புத்தூரா ருக்குக் கால்கள் நடுங்கியது.

''அது ஒரு பெரிய கதை சாமி, வாங்க போகும்போது சொல்றேன்.''

''இல்ல இங்கேயே சொல்லுங்கோ...''

''பயப்படாதீங்க. நேரமில்ல. உங்க விஷயத்துல எஸ்.பி. அய்யாவே ஆர்டர் போட்ருக்காரு. கிளம்புங்க..'' அந்தப் போலீஸ்காரரின் விளக்கம் காட்டுப்புத்தூராரைக் காபரா படுத்தியது. அதேசமயம், போலீஸ்காரர் பார்வை வீட்டை நோட்டம் போட்டது. வேர்கள், காய்ந்த செடிகள், சின்னக்கல் உரல், கொஞ்சம் மூலிகை மருந்து வாசம், சுவர் கொள்ளாதபடி எந்திரப் படங்கள், மணிக்கட்டிய உலக்கை, உரியில் தொங்கும் பானைகள் என்று மிக வித்தியாசமான காட்சிகள்..

''ஆமா வீட்ல நீங்க மட்டும்தானா?''

''அ.. ஆமா..'' காட்டுப்புத்தூரார் ஒரு கறுப்பு ஹேண்ட் பேக்கில வேஷ்டி துண்டைச் சுருட்டி அடக்கியபடியே திரும்பிப் பார்த்துச் சொன்னார்.

''நீங்க பெரிய மந்திரவாதியாமே..?'' போலீஸ்கார ரிடம் நிஜமான ஆர்வம்.

''அ.. ஆமா..'' அதற்கும் காட்டுப்புத்தூரார் தடுமாற் றத்தோடு பதில் சொல்லிக்கொண்டே புழக்கடைப் பக்கம் போனார். புழக்கடையில் ஓர் அகத்தி மரம். அதன் வேர்த் தண்டில் ஒரு நரி ஒன்று சங்கிலியால் பிணைக்கப்பட்டு கட்டப்பட்டிருந்தது.

அதை அவிழ்த்து வீட்டுக்குள் இழுத்து வந்து நடு

ஹாலின் மரத்தூணில் கட்டிப்போட அது அந்தத் தூணை அநியாயத்துக்குச் சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்தது.

''சாமி இது..''

''நரி.. சாதாரணமாக பதில் சொன்னார் காட்டுப்புத் தூரார். சொன்னபடியே ஒரு சின்ன மரப் பெட்டியை ஞாபக மாக எடுத்து ஹேண்ட் பேக்கில் வைத்துக் கொண்டார்.

''இது என்ன, நரியை இப்படி வீட்ல வெச்சு வளர்க் கறீங்க? தினம் இது முகத்துல முழிப்பீங்களோ?'' காட்டுப் புத்தூரார் கஷ்டப்பட்டு அதற்காகச் சிரித்தார். ''வாங்கோ போகலாம்..'' என்றார். பதில் சொல்லாதபடி போலீஸ்காரர் விழிகளில் நல்ல விரிவு!

''டொம்.. டொம்.. டொம்..'' கர்ணகடூரமாக கண்டது கண்டதோடு மோதும் சப்தம் கேட்டு அந்தக் குடிசைக்குள் கண்களைத் திறந்தான் வீரநரசிம்மன்.

நல்ல இரவுப்பொழுது.

சப்தம், மிரட்சியைத் தந்துவிட்டிருந்தது.

எழுந்து வெளியே வந்து பார்த்தபோது சப்தமும் தீப்பந்தமுமாக ஒரு கூட்டம் தொலைவில் வயல் வரப்பில் ஓடிக் கொண்டிருந்தது.

வெளியே வெறும் தரையில் துண்டை விரித்துப் படுத்திருந்தான் வீரண்ணன். அவனும் சப்தம் கேட்டு எழுந்து நின்றான்.

''என்னய்யா சப்தம்..?''

''எல்லாம் அந்த வேங்கைப் புலிக் குசும்பா இருக்கும். அதான் ஆடுமாடு மனுஷங்கன்னு விடாம அடிச்சுப் போட்டுக்கிட்டு திரியுதுங்களே..'' வீரண்ணன் விளக்கத்

தில் ஒரு க்ஷணம் அந்த வேங்கைப்புலி புல்லுக்கட்டுக் காரியை பிரட்டி எடுத்து பிரியாணியாகத் தின்றது ஞாபகத் தில் கிளர்ந்தெழுந்தது.

''நீங்க படுங்க முதலாளி.'' வீரண்ணன் ஆறுதலாகச் சொன்னான்.

''தூக்கம் வரலை வீரண்ணா.. இங்க வந்து நாலு நாள் ஆச்சு.. வெளியே போகலாம்னாலும்.. ச்சே!'' சலிப்பு பெருக்கெடுத்தது.

''நா வேணும்னா நம்ம ஊட்டுக்குப் போய் பார்த் துட்டு வந்துடட்டுங்களா?'' சரியாகத்தான் கேட்டான் வீரண்ணன். வீரநரசிம்மன் முகத்தில் தனியாக ஃபோகஸ் லைட் போட்டது போல் ஒரு வெளிச்சம்.

''அதுவும் சரிதான்.. போ, போய் பார்த்துட்டு வா. ஆமா இப்ப மணி என்ன?''

''ஒம்பதாச்சுன்னு நினைக்கிறேன்.''

''வண்டி இருக்கா இப்ப?''

''விடிய விடிய இருக்குங்க. நான் பாத்துக்கறேன். முடிஞ்சா தம்பியை கூட்டிக்கிட்டு வரட்டுங்களா?''

''எப்படியாவது எனக்கு போன் பண்ணாச் சொல்லு. என்னையும் பண்ண வேண்டாம்னுட்டான் ஸ்டுப்பிட்.'' வீரநரசிம்மன் சின்ன கோபம் கொள்ள வீரண்ணன் குடிசைக் குள் நுழைந்து கூரைச் சரிவில் தொங்கிய தன் அழுக்குச் சட்டையை எடுத்து அணிந்தபடி கிளம்பலானான்.

சோர்வோடு போய் கட்டிலில் சாய்ந்தபோது, வெளியே தொலைவில் யாரோ இரண்டு பேர் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து தரைமேல விழுந்து புரண்டு சண்டை யிடுவது போலெல்லாம் கேட்கத் தொடங்கியது.

கணியன், மூலைக்கு மூலை பதித்த யந்திரங்களின் வேலையாக இருக்குமோ!

நேஷனல் ஹோட்டல் கார்ட்டனை விலக்கி வெளியே தெரியும் சேலத்தைப் பார்த்தபடி இருந்தார் ரங்கராஜன். மினுக் மினுக் வெளிச்சங்கள். கணியன், காயத்ரி ஜெபிப்பது போல் எதையோ ஜெபித்துக் கொண்டிருந்தான். கைகளை ஒரு வெள்ளை வஸ்திரம் மூடியிருந்தது. எஸ்.பி. வெளியே காவலைப் போட்டு விட்டு போய்விட்டிருக்க வேண்டும். ஆளைக் காணவில்லை. அப்போது சிணுங்கிக் கூப்பிட்டது தொலைபேசி. கணியன் அதன் நிமித்தம் துளி கூட சலனப்படவில்லை. ரங்கராஜனே திரும்பி வந்து சோர்வாகக் கையில் எடுத்தார்.

"யெஸ்.. ரங்கராஜன் ஸ்பீக்கிங்!"

"வணக்கம் சார். நான் உங்க மாதங்கி பேசறேன்."

"மாதங்கீஈஈஈ" உச்சபட்சத்துக்கு எகிறியது ரங்கராஜன் குரல்.

"ஆமாம் மாதங்கியே தான். என்ன க்ரூதகின்னு நினைச்சுட்டீங்களா? பை த பை பக்கத்துல அந்தக் கணியன் இருக்கானா?"

"அ.. ஆமாம்.. நீ எங்க இருந்து பேசறே? ஆர் யூ நார்மல்?"

"ஐ ஆம் ஆல்வேஸ் நார்மல். எப்ப நான் நார்மலா இல்லாம போனேன். பை த பை உங்கக் கூட நான் தனியா பேசணும் சார்."

"துடிச்சுகிட்டு இருக்கேன். எங்க இருக்கே?"

"சத்தம் போடாம கல்பனா தியேட்டர் எதிரில இருக்கிற அண்ணா பார்க்குக்கு வாங்க."

"கல்பனா தியேட்டர் எங்கம்மா இருக்கு?"

"ஹோட்டல் ரூம்ல இருந்து அப்படியே கிழக்குப் பக்கமாப் பாருங்க தெரியும். ஜஸ்ட் நூறு மீட்டர் தூரத்துல.."

"இதோ வரேன்.. வந்துட்டேன்."

போனை உதறிவிட்டு வெளியே பாய்ச்சலெடுத்தார் ரங்கராஜன். கதவைத் திறக்கும்போது எச்சரிக்கையாக கணியனைப் பார்க்கவும். கணியனும் நிமிர்ந்து ரங்கராஜனைப் பார்த்தான்.

"ஒரு நிமிஷம் வெளியே போய்ட்டு வந்துடறேன்." வாசல் தாண்டும்போது சென்ட்ரி எழுந்து நின்றான்.

"உள்ள இருக்கிற ஆள் ஓடிடப் போறான். ஜாக்கிரதை.." சொல்லிவிட்டுப் பறக்க ஆரம்பித்தார்.

அண்ணா பார்க்.

"மாதங்கி எப்படி இருக்கே?" எதிரில் உட்கார்ந்திருந்த மாதங்கியிடம் பேச ஆரம்பித்தார்.

"நல்லாயிருக்கேன்.. உங்களை ரொம்பக் குழப்பிட்டேன்னு நினைக்கறேன் சார். சாரி என்னை மன்னிச்சுடுங்க."

"இதெல்லாம் பெரிய வார்த்தை. அது சரி நேத்து போன்ல பேசறச்சே க்ருதகி நான்னு சொன்னியே.. எதனால?"

"சாரி இனி க்ருதகி, பாதகி எதையும் பேசவேண்டாம். என் வரைல எல்லாம் இந்த நிமிஷம் பொய். புத்திசாலித்தனம் மட்டும்தான் ஒரு மனுஷனுக்கு எப்பவும் சாஸ்வதம். அதைக் கொண்டு ஒரு சதுரங்கம் விளையாடி செக்கும் வெச்சுட்டேன். இனி வேடிக்கைப் பார்க்கப் போறேன்."

"புரியும்படி சொல்.. அங்க அந்தக் கணியனோட புலம்பல் தாள முடியல."

''புலம்பிக்கிட்டே இருக்கட்டும். அவரை எஸ்.பி. சார் 'கஸ்டடில விட்டுட்டு கிளம்புங்க. ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாவைப் பார்ப்போம். வீட்டுக்குப் போகணும்.''

''மாதங்கி முதல்ல என் கேள்விக்கு பதில் சொல்லு. என்ன செய்தே..? ஏன் க்ரூதகின்னு சொன்னே? எங்க அந்த மான் தோல் பை..?''

''எல்லாக் கேள்விக்கும் பதில் சொல்றேன். ஆஸ்பத்திரிக்குப் போவோமா, அம்மாவைப் பார்க்கலாமா?''

''நிச்சயமா நடந்ததைச் சொல். கணியன் வேற நான் உன்னைப் பார்க்கக் கிளம்பவும் முறைச்சான்.''

''முறைக்கட்டும்.. எவ்வளவு நாள்.. சில நாள்தானே.. அவன்லாம் இந்த மண்ணுல இருக்கவே கூடாது. அவனால எத்தனை பெண்கள் இறந்திருப்பாங்க. எத்தனை பலிகள் நடந்திருக்கும்?''

''என்ன புதுசு புதுசா சொல்றே.. பலிகளா?''

''ஆமாம் சார்.. மூட நம்பிக்கைகளை முதலாப் போட்டு சில சித்து வேலைகளைச் செய்து அவங்க செய்த பல கொடுமைகளை நான் தெரிஞ்சுக்கற வாய்ப்பு வந்தது?''

''எப்படி?''

''மான் தோல் பைல இருந்த கணியனோட டைரியால..''

''டைரியா..?''

''ஆமாம்..'' மாதங்கி தான் அமர்ந்திருந்த இடத்திற்குப் பக்கத்தில் இருந்து ஒரு நோட் போன்ற ஒன்றை எடுத்து திறந்து காட்டினாள். அதில் பலரது முகவரிகள்.. புஜித்த விவரங்கள்.. செலவு கணக்குகள்.. பல கடிதங்கள்..

''வாங்க மிச்சத்தைச் சொல்றேன். நடந்துகிட்டே பேசுவோம்.''

நடந்துகொண்டே அவர்கள் பேசத் தொடங்கினர். அதே துல்லியமான வேளையில், ஹோட்டல் மாடியில் ஜன்னல் வழியாக இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த கணியனுக்கு என்ன தோன்றியதோ? நெடுநேரம் தாடையைத் தேய்த்தபடி யோசித்து விட்டு கைகளைக் கூப்பித் தியானித்தான். பின் அப்படியே அந்த ஜன்னல் இடைவெளியில் தலையை நுழைத்து உடம்பை வெளிக் கொண்டு வந்து, மேலிருந்து கீழே குதிக்கத் தொடங்கினான். தரையில் விழுந்த உடலும் சூரைத் தேங்காய் கணக்காய் சிதறியதில் மூளை மட்டும் காலிஃப்ளவர் போல தனியாக ஒரு மூலையில் போய் மோதி விழுந்தது.

★ ★ ★

*என் அப்பாவின் சாவின் மேலேயே எனக்கு சந்தேகமுண்டு. திரிபு அத்தை சொல்லக் கேட்டு பாகீரதியாகிய என் பெரியம்மா என் அப்பாவிற்கு தினமும் சாதத்தில் அல்பபாஷாணம் கலந்ததாக கேள்விப்பட்ட போது உயிரில் வலித்தது. காரணம், அப்பா என் அம்மா மேல் கொண்டிருந்த அன்பு. அதோடு அப்பாவை தன் வசப்படுத்தி ஆட்டுவிக்க வசிய மருந்தையும் பெரியம்மா தந்திருக்க வேண்டும். அதை சாப்பிட்டவர்கள் இளைத்து துரும்பாகிப் போவார்கள். வயிற்றில் அது ஜீரணமாகாமல் நிதமும் துளித்துளியாக முடி முளைக்க உருண்டு கொண்டேயிருக்கும். மனமும், எண்ணமும், வசியம் வைத்தவர்கள் சொல்வதைத்தான் கேட்குமாம். அப்படி ஒரு நாள் பெரியம்மா சொல்லித்தான் அப்பா என் அம்மாவுக்கு உயிரோடு நெருப்பு வைக்கப் பார்த்தாரே?''*

- பரமேஸ்வரன் டைரிக் குறிப்பிலிருந்து...

கணியனின் உடல் தரைதட்டி சூரைத் தேங்காய் போல சிதறிக் கிடந்தது.

சப்தம் கூட்டத்தையும் இழுத்து சேர்த்திருந்தது. எல்லோருக்கும் மரணம் வரும். ஆனால், இப்படி அது வரக்கூடாது என்கிற மாதிரிக் கிடந்தான் கணியன். மருத்துவம், மந்திர சாஸ்திரம் இரண்டிலும் கரை காண முயன்றவன்!

இந்த விபரீதம் எதைப் பற்றியும் தெரியாதபடி ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தனர் எடிட்டர் ரங்கராஜனும் மாதங்கியும்.

ஆட்டோ.. ஜானகி அட்மிட்டாகியிருக்கும் ஆஸ்பத் திரியை குறி வைத்துப் பறந்தது. ஹாஸ்பிடல் காம்பவுண் டுக்குள் நுழைந்து நின்றது. அதுவரை அடங்கிக் கிடந் தவள் பாய்ச்சலெடுத்தாள் ஓடினாள். வார்டில் படுக்கையில் கிடக்கும் அம்மா முன் தான் ஓட்டம் நின்றது.

நல்லவேளை.. ஜானகியிடம் நல்ல முன்னேற்றம். கூடவே தெம்பான பிரக்ஞையும் இருந்தது.

மூச்சிரைக்க வந்து நிற்கும் இளைய மகளைப் பார்த்து பரவசப்பட்டாள் ஜானகி.

''மாதங்கி..''

''எப்படிம்மா இருக்கே?''

''எனக்கென்னம்மா.. ஆமா இப்படியாம்மா, எங்கள பயமுறுத்துவே?''

''மாதங்கி.. கண்டத பேசாதே. அம்மாவுக்கு எதுவும் தெரியாது.'' குறுக்கில் ஒரு பதில் விழுந்து தடுத்தது. மாதங்கியிடம் சொன்னது ரேவதி. மாதங்கி பார்வை உடனே ரேவதியை ஊடுருவுகிறது. ரேவதியும் கண்ணா லேயே பல சேதி சொன்னாள்.

''என்னடி எதுவும் தெரியாது.. எதைடி எனக்குத் தெரி யாம மறைக்கிறீங்க?'' ஜானகி உடனே பிடித்துக்கொண்டு கேள்வி கேட்டாள்.

''ஒண்ணுமில்லம்மா நான் சொல்றேன். உங்க சொத்து விஷயமா எல்லா பிரச்சினையும் தீர்ந்து போச்சும்மா. கேஸ்

கிட்டத்தட்ட ஜெயிச்ச மாதிரிதான். அதான்..'' ரங்கராஜன் சட்டென்று சமாளித்தார்.

''இன்னுமா தீர்ப்பாகலை. நேத்தோ முந்தானேத்தோ ஜட்ஜ்மென்டுன்னாங்களே..''

''வாஸ்தவம்தான்.. நம் கோர்ட் பத்தி தான் தெரியுமே உங்களுக்கு.. நீங்க ரெஸ்ட் எடுங்கம்மா..?''

''நீங்க இன்னுமா ஊருக்குப் போகல?''

''போகணும். இப்ப என்ன போய்ட்டா போச்சு.''

''மாதங்கிக்கு இனி நீங்கதான் எல்லாம்.''

''பாத்துக்கறேம்மா.. நீங்க கவலைப்படாதீங்க. மாதங்கிக்கு மட்டுமில்ல.. ரேவதி, லக்ஷ்மிக்கும் கூட நான் இருக்கேன்.''

''ரொம்ப சந்தோஷம்..'' ஜானகி கைகூப்பி நமஸ்காரம் செய்தாள். கண்கள் பனித்தன. பக்கமாக நிற்கும் ரேவதிக்கும், லக்ஷ்மிக்கும் கூட அது நெகிழ்ச்சியைத் தந்தது. ரங்கராஜனை மிகவும் மதிப்பாகப் பார்த்தனர்.

நடுநடுவே மாதங்கியை அழுத்தமாகவும், ஆராய்வது போலவும் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பெட்டை விட்டு விலகி வெளியே வந்து மாதங்கியிடமே அதைக் கேட்டும் விடுகின்றனர்.

''மாதங்கி.. என்னடி அதெல்லாம்?'' மாதங்கி பதிலுக்கு சிரித்தாள்.

''சொல்லிவிட்டு சிரி.. இங்க உன்னை நினைச்சு நாங்க பட்ட பாடு எங்களுக்குத் தெரியும்.''

''போகப் போக தெரிஞ்சுப்பீங்க!''

"சரி.. நாம இப்ப வீட்டுக்குப் போகலாமா?"

"தாராளமா.."

"அப்பா காரியம் முடியுமுன்ன எல்லாக் கஷ்டங்களும் தீர்ந்து, அவர் மட்டும் இல்லேங்கற ஒரு குறை மட்டும் தான் இருக்கணும் சார்.."

"இப்பவும் கிட்டத்தட்ட அதுதானே மாதங்கி நிலை."

"ஆமாம் சார்.. அப்பாவைக் கொன்ன நட்டு மாமா தண்டனை வாங்கிட்டார். ஆனா.. அப்பாவைப் போல பல பேரைக் கொன்ன ஒரு கூட்டம் பாக்கியிருக்கே..?"

பற்கள் நறநறக்கின்றன மாதங்கிக்கு.

"விடு.. அவங்களை போலீஸ் பாத்துக்கும்.. நீ கிளம்பு வீட்டுக்கு. லக்ஷ்மி, ரேவதி.. உங்கம்மாவை பத்திரமா பாத்துக்கோங்க. நாங்க வீட்டுக்குப் போறோம். இனி மாதங்கி எங்கேயும் போகமாட்டா. தைரியமா இருங்க.."

அந்தப் பெண்கள் இருவரும் தலையை ஆட்டி வழி யனுப்பி வைத்தனர். குலுங்கிக் கொண்டு ஓடத் தொடங் கியது ஆட்டோ.

ஆட்டோவினுள் ரங்கராஜன் நறுக்கினது போலக் கேட்டான்.

"மாதங்கி.. கணியனோட மான் தோல் பையை எங்கே வெச்சிருக்கே?"

"எதுக்கு சார் கேக்கறீங்க..?"

"இல்ல.. அதுலதான் தன் ஜீவனே இருக்குன்னு துடிச்சிண்டு இருக்கான் அந்த ஆள். நான் அதைப் பார்க் கணும்."

"உண்மைதான் சார். அதுல அவன் ஜீவன் மட்டு மில்ல.. ஒரு பெரிய வட்டத்தோட ஜீவனே இருக்கு சார். இதோ இந்தக் கடிதம் போல பல விட்னஸ்கள்.."

"புரியும்படி சொல்.."

"பல நரபலிகள்.. பலவிதமான பூஜைகள்.. அதைப் பத்தின குறிப்புகள் அதுல இருக்கு. நித்ய இளமை அடைய ஒரு பூஜை.. புதையல் எங்க இருக்குன்னு தெரிஞ்சுக்க ஒரு பூஜை.. குறிப்பிட்ட நபரை வசியப்படுத்த ஒரு பூஜைன்னு விதம் விதமா பூஜைகள். ஒரு கொடுமை என்னன்னா.. பல அரசியல்வாதிகள் தங்கள் காரிய சித்திக் காக கணியனை பயன்படுத்திக்கிட்டு இருக்காங்க."

"இதை எல்லாம் ஆதாரத்தோட தானே சொல்றே?"

"கணியன் நீட்டா நோட் போட்டு எழுதி வெச்சிருக் கான்.. தேதி வாரியா குறிப்பு, எவ்வளவு பணம் வந்திருக்கு.. எவ்வளவு பாக்கின்னு டீடெய்ல்ஸ்."

"அதுல இன்னும் யாருக்கெல்லாம் தொடர்பு..?"

"என் உறவுக்காரர்கள் அவ்வளவு பேருமே ஒவ் வொரு விதத்துல தொடர்பு கொண்டிருக்காங்க சார். அடே யப்பா.. எத்தனை விதமான பூஜைகள்லாம் இருக்கு இந்த பூமியில.

க்ருதகி, வேம்பினி, ஷ்யாமனி, த்ருஷ்டினின்னு தான் எத்தனை தேவதைகள்.. பெயர்கள்!"

"இன்னொரு முக்கியமான கேள்வி, நீ உன் அப்பா ஆவியோட பேசினது எந்த அளவுக்கம்மா உண்மை?" முக்கியமான கேள்விக்கு ரங்கராஜன் வந்தபோது ஆட்டோ வீட்டு வாசலை எட்டியிருந்தது.

சில்லறையை வெட்டிவிட்டு வாசலிலேயே நின்று கொண்டு அதற்கு பதில் சொன்னாள் மாதங்கி.

''சார் அது மட்டும் ஒரு சத்தியமான நிஜ அனுபவம் சார். அப்பா வந்தார். பேசினார். வழிகாட்டினார். இந்த நிமிஷமும் காட்டிக்கிட்டு இருக்கார்.''

அதைக் கேட்டு தாடையைத் தேய்த்துக் கொண்டார் ரங்கராஜன்.

''உண்மை சார். நான் கதறினப்ப அப்பா வந்தார். பேசினார். இந்த க்ரூதகி பாதகி எல்லாம் கூட உண்மையா இருந்து இதுகள்கிட்ட இருந்து அவரே கூட என்னைக் காப்பாத்தியிருக்கலாம்..''

பேசியபடியே படி ஏறி உள்ளே நுழையும்போது ஸ்ரீதரன் பரமேஸ்வரன் படத்திற்கு ஒரு புதிய மாலையைப் போட்டுக் கொண்டிருந்தான்.

திரும்பிப் பார்த்துவிட்டு பரவசப்பட்டபடி முன் வந்தான். அவ்வேளையில் கச்சிதமாக தொலைபேசியும் கூப்பிட்டது.

அவனை முந்தவிடாதபடி மாதங்கியே போய் ரிசீவரை எடுத்தாள்.

காதில் பாய்ந்த சேதி நிமித்தம் முகத்தில் ஏராள அதிர்ச்சியைக் காட்டினாள். அப்படியே ''சபாஷ்..'' என்று தனக்குத் தானேயும் சொல்லிக் கொண்டாள்.

''என்ன மாதங்கி.. என்ன செய்தி?''

''கணியன் தற்கொலை செய்துகிட்டான். உங்கள எஸ்.பி. சார் தேடிக்கிட்டு இருக்கார்.

"நீங்க ஏன் சார் இடிஞ்சு போறீங்க. இது ஆரம்பம்தான். இனி அடுத்தடுத்து மரண ஓட்டம்தான்!"

மாதங்கி சொன்னதும் ரங்கராஜனும், ஸ்ரீதரனும் அவளை வெறிக்க, அவள் உதட்டின் வெற்றிச் சுழிப்பு.

"சட்டம் இனி கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தால் போதும் சார்.. அவரவர் வினைகள் அவரவர்களை இனி அழிக்கப் போகுது. யாரும் தப்பிக்க முடியாது. அப்படி ஒரு வலையை விரிச்சிருக்கேன்." முகத்தை கொடூரமாக வைத்துக் கொண்டு அவள் சொல்வதைப் பார்த்தால்..?

**போ**லீஸ் காவலுள்ள அந்த வீட்டுக்குள் வீரண்ணன் நுழைந்தபோது வீடே நிசப்தமாக இருந்தது. ஹாலின் நடுவில் ஊஞ்சல் மேல தியானத்தில் இருந்தார், காட்டுப் புத்தூரார்.

சுற்றிலும் வீரநரசிம்மன், அம்மா பாகீரதி, திரிபு, அத்தை என்கிற கூட்டம்.

கணியன் தற்கொலை செய்து கொண்டுவிட்ட சேதியறிந்து ஸ்தம்பித்துப் போயிருந்தனர்.

பாகீரதி கண்மூடி ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் காட்டுப்புத்தூராரையே பார்த்தபடி இருந்தாள்.

வீரண்ணன் வரவும் பார்வை திரும்பியது.

"வாடா.." குரலில் அழைப்பு.

"என்னம்மாது.. இப்படியா கிணத்துல போட்ட கல்லாட்டம் இருப்பீங்க. ஐயா அங்க தவிச்சுக்கிட்டிருக்காரும்மா.."

அவன் பேசுவதைக் கேட்டு விட்டு உதட்டில் விரலை வைத்து அமைதியாக இருக்கச் சொன்னாள் பாகீரதி.

அவனும் புரியாதபடிக்கு அமைதியானான்.

வெளியே இருந்து ஒரு போலீஸ்காரர் வேறு எட்டிப் பார்த்தபடியே இருந்தார்.

அப்பொழுது அழைக்கப்பட்ட ஒரு விருந்தாளி போல, கொல்லைப்புறமாக நுழைந்தபடி இருந்தது ஒரு கருநாகம்!

★ ★ ★

# 24

*'மாதங்கி.. என் அருமை மகளே! உன்னை நான் ஓர் ஆணைப் போல நினைத்து வளர்த்தது வீண்போகக் கூடாது. உன் சகோதரிகளுக்கெல்லாம் நீதான் சகோதரன். அவர்களை நீதான் கரை சேர்க்க வேண்டும். உறவுகளை நம்பிப் பயனே இல்லை. அதிலும் என் உறவுகள் மந்திர தந்திர வழிகளில் பயணப்பட்டு விட்டவர்கள். பணத்தாசைப் பிடித்தவர்கள். இவர்களை தெய்வம் தண்டிக்குமோ, தண்டிக்காதோ நீ தண்டித்தே தீர வேண்டும்.*

*அப்படி நீ செய்யத் தவறும் பட்சத்தில், நம் குடும்பம் போல பல குடும்பங்களை அவர்கள் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடக்கூடும். எச்சரிக்கை!'*

*- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...*

ஒரு கூரிய முனை கொண்ட கடப்பாரை ஒன்று வளைந்து நெளிந்து ஊர்ந்து வந்தால் எப்படி இருக்கும்?

அப்படி இருந்தது அந்த பாம்பின் பிரவேசம்.

கொல்லையில் இருக்கிறது கரிபாய்லர் கொண்ட பாத்ரூம். ஓர் ஓரமாக கரிமூட்டை, செராத்தூள், கூடை என்று கண்ட கச்சடாக்கள்.

அதனுள் நுழைந்து அது மறைந்தும் போனது.

உள்ளே ஊஞ்சல் மேல் ஏதோ மந்திர உச்சாடனத்தில் இருந்தார், காட்டுப்புத்தூரார். கைகளை மேல் துண்டால் மூடியிருந்தார். ஏதோ ஒரு முத்திரையுடன் கூடிய தியான உபாசனை.

வீட்டுக்குள் வந்தவர் எல்லாவற்றையும் கேட்டு விட்டு எதற்காக இப்படி எதுவும் பேசாமல் தியானம் செய்ய ஆரம்பித்துவிட்டார் என்பது ஒருவருக்கும் புரியவில்லை.

வீரண்ணன் பொறுமையிழந்து போனான்.

''சாமி என்ன சாமி இது.. இப்படி ஆளாளுக்கு பேசாம உட்கார்ந்திருந்தா என்ன அர்த்தம்?'' என்று எழுந்தும் நின்றான். அவனுக்கு வீரநரசிம்மன் காத்துக் கொண்டிருப்பானே என்கிற கவலை.

சிவகுக்கு அவனது நமைச்சல் புரிந்தது. 'உஷ்' என்று உதட்டின் மேல் கை வைத்து அடக்கினான்.

''சும்மாயிருங்க சாமி.. இங்க என்ன நடக்குது? எனக்கு ஜோலி இருக்குல்ல..''

''எல்லாம் தெரியும்.. பேசாம உக்கார். மாமா உபாசனைல இருக்கார்.''

''அவருக்கும் எனக்கும் என்னா சம்பந்தம். நான் கிளம்பறேன் சாமி..'' என்று கிளம்பிவிட்டவனை எல்லோருமே ஒரு தினுசாகத்தான் பார்க்கிறார்கள்.

''வீரனை தைரியமா இருக்கச் சொல். மாமா ஜெபிக்க ஆரம்பிச்சுட்டார். எதுக்க நிக்கறவா எல்லாரும் இனிமே என்ன கதி ஆறான்னு பார்..''

பாகீரதி காற்றுக் குரலில் நம்பிக்கை மூட்டினாள்.

அவன் அதைக் கேட்டபடி வெளியே வந்தான்.

சபாரி டிரெஸ்ஸில் மிலிட்டரிமேன் போல் இருந்த ஒரு போலீஸ்காரர் அவனைத் தடுத்தார்.

"உள்ற போய்யா.."

"ஐயா நான் வெளியூருங்க, வேலை இருக்குதுங்க."

"யாரா இருந்தாலும் இந்த வீட்டுக்குள்ள வரலாம். ஆனா வெளிய போக முடியாது, போ உள்ற.."

"இப்படி சொன்னா எப்படிங்க. நான் இவங்க தோட்டக்காரங்க. தோட்டத்துல எல்லாம் போட்டது போட்ட படி இருக்குதுங்க.."

போலீஸ்காரர் குரல் உள் வரை கேட்டது. பாகீரதியும், திரிபுவும் கலக்கத்தை பகிர்ந்து கொண்டனர். காட்டுப் புத்தூராரும் கண் திறந்து கொண்டார். சிவசுவும், கணேசனும் வெளியில் வந்தனர்.

"சார் என்ன இது.. இவனை போகவிடுங்க."

"முடியாது இது எஸ்.பி. அய்யா உத்தரவு."

"அவர் யார் எங்களை தடுக்க.. நாங்க என்ன தப்பு செஞ்சோம்?"

"என்ன பண்ணலை?" அவர் கேட்ட விதம் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது.

"அந்த நடராஜய்யர் சாகும்போது ஏதோ சொல்லி விட்டு செத்தார்ங்கறதுக்காக எங்க அவ்வளவு பேரையும் நீங்க குற்றவாளியா நினைக்கறீங்களா?"

"அவர் சொன்னது உங்க அண்ணனை மட்டும்தான். ஆனா கணியனோட டைரி உங்க அவ்வளவு பேரையும்ல குற்றவாளின்னு சொல்லுது.."

"என்னது கணியன் டைரியா?"

"ஆமாம் தம்பி.. போ.. செய்யறதை செஞ்சிபிட்டு கேள்வி வேற கேக்கறியா? அந்த பலி, இந்த பலி, அந்த ஹோமம், இந்த பூஜைன்னு எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரிங்கன்னு ஒரு கூட்டத்தையேல்ல வளைச்சு பிடிச்சிருக்கீங்க?"

போலீஸ்காரர் சொல்லச் சொல்ல அவர்கள் முகத்தில் அசாத்திய மாற்றங்கள்.

முதலில் நட்டு மாமாவின் வாய்மொழி வாக்குமூலம்.

அடுத்து இறந்துபோன கணியனின் எழுத்து மூலமான அத்தாட்சியா..?

என்ன இது.. எப்படி நடக்கலாம் இப்படி எல்லாம்?

"மாமா நீங்கதான் காப்பாத்தணும் இப்போ. தொட்டுத் தொட்டு எல்லாம் தப்பாயிண்டு போறதே..?" பாகீரதி பரபரத்தாள். "ஆமாம்.. தியானம் உபாசனைன்னு உக்காந்துண்டது போதும். முதல்ல வெளிய காவலுக்கு வந்துட்டு இப்ப கழுத்தையே பிடிக்கப் பாக்கற போலீஸை கொஞ்சம் முடக்கிப் போடுங்கோ..."

திரிபு அத்தையும் சேர்த்து பரபரத்தாள். காட்டுப்புத் தூரார் அவர்களை இமைக்காது, வெறிப்போடு நொக்கினார். அவர் காதில் மாதங்கி எனும் பைரவி சொல்லிச் சென்றது தான் ஓடியது.

"என்ன மாமா பாக்கறேள்.. இப்படி பார்த்தா எப்படி? சட்டுன்னு எதான பண்ணுங்கோ. அப்பதான் நாமெல்லாம் தப்பிக்க முடியும். இல்லேன்னா எல்லாரும் தான் மாட்டிக்க வேண்டிவரும். அப்புறமா நான் கொஞ்சம் கூட யோசிக்க மாட்டேன். ஏன்னா எங்களுக்கு மந்திர சாஸ்திரத்தை சொல்லித் தந்ததே நீங்கதான். நான் அப்ரூவராயிடுவேன்...!" சிவகு சீறினான்.

''எனக்கென்ன தலையெழுத்து.. எங்க குடும்பத்தையே பந்தனம் பண்ணி கட்டி வெச்சிருந்தார்னு சொல்லிடுவேன் நான்.'' பாகீரதி தன் துரோக முகத்தின் ஒரு துண்டுப் பகுதியைத்தான் காண்பித்தாள்.

கரீரென்றது காட்டுப்புத்தூராருக்கு..

தங்களுக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண் போக வேண்டும் என்று நினைக்கின்றார்களே... உங்களையா விடுவது?

காட்டுப்புத்தூரார் தீர்மானித்த போது உள்ளே பாத்ரூமில் கரி மூட்டை மேல் அந்த கருநாகம் படம் விரித்த படி நிமிர்ந்து கொண்டிருந்தது!

ஏற்காடு அடிவாரம்.

மலைநீர் அருவியெனப் பெருகி வரும் வழுக்குப் பாறை பகுதி. முட்டை முழியோடும் நான்கைந்து மண் குதிரைகளோடும் அங்கே முனுசாமி.

எதிரில் கடலை வயல். வரப்பில் மேல் எஸ்.பி. சம்பந்தமும், சில போலீஸ்காரர்களும் நடந்து கொண்டிருந்தனர். பின்னாலேயே ரங்கராஜனும், மாதங்கியும். முனுசாமி வருபவர்களை வரவேற்பது போல அமர்ந்து கொண்டிருக்கிறார்.

எல்லோரும் முனுசாமியின் முகப்பிலுள்ள நொணா மரத்து நிழலை எட்டியபோது மரக்கிளையில் தலையைத் தொலைத்த சேவல்கள் ஒற்றைக் காலில் மரக்கிளையோடு பிளந்து இரத்தம் சொட்டத் தொங்கிக் கொண்டிருந்தன.

பார்க்க சற்று வயிற்றைப் பிரட்டியது. அப்பொழுது கடலை வயலில் களை எடுத்தபடி இருந்த ஒருவன் ஓடி வந்தான். ''கும்புடறேன் சாமி... எங்கிங்க இவ்ளோ தூரம் சாமி கும்புடவா?''

"இல்ல... இங்க முனி ஒளியற குகைன்னு எதாவது இருக்குதா...?"

"எதுக்கு சாமி கேக்கறீங்க?"

"என் கேள்விக்கு நீ பதில் சொல்லுய்யா."

"இருக்குங்க... அங்க சாதாரணமா நாங்க யாரும் போக மாட்டோம். மந்திர மாயம் பண்றவங்க அங்க போய் தான் பூசை பண்ணுவாங்க. நம்மளை மாதிரி ஆளுங்க போனா பைத்தியம் பிடிச்சுடும்னுவாங்க."

"ஓஹோ... உங்களை எல்லாம் இப்படி பயமுறுத்தி வெச்சிருக்காங்களாக்கும்?" சம்பந்தம் கேட்டபடியே ரங்க ராஜனை பார்த்தார். அவர் மாதங்கியை பார்த்தார். மாதங் கியோ அந்த இடம் எங்கே என்று தேடுவதில் இருந்தாள்.

"அதோ அந்தப் பக்கத்துலங்க... பாத்து போங்க. ரவையில் வேட்டைக்கு போற முனி தன் குதிரை, நாயோட அங்கதான் படுத்து உறங்கும்னு சொல்லுவாங்க.."

"எல்லாம் சொல்ற கதை தானா... பாத்த அனுபவம் எதுவும் கிடையாதாக்கும்...?"

"அய்யோ.. நானே பல தடவை சாமியை பாத்திருக் கேங்க. சுருட்டு வாடை குப்புன்னு தூக்கியடிக்க குதிரை மேல என்னமா வரும் தெரியுங்களா?"

அவன் பேசுவதில் பொய் இருப்பது போலவே தெரிய வில்லை. இப்பொழுது அவனோடு சேர்த்து கடலை வயல் வரப்பில் அவர்கள் நடை தொடர்கிறது.

பாறை மேல் நல்ல மஞ்சள் குனித்த ஓணான் ஒன்று ஓட்டப் பந்தயக்காரனைப் போல் முன்னிரண்டு காலை மட்டும் தூக்கிப் பார்க்கிறது. காற்றின் அன்பான தழுவல்.

ஒருவழியாக அந்த குகைப் பகுதியை நெருங்கிய போது தரைப் பரப்பெங்கும் இரத்தம் உறைந்த தடயங்கள். அதில் பார்வையை ஓடவிரட்டி விட்டு எஸ்.பி. சம்பந்தம் தன்னோடு வந்த இன்ஸ்பெக்டரை பார்க்கவும் அவர் கையில் கணியனின் டைரி மின்னியது. அதை வாங்கி ஒரு புரட்டு புரட்டி விட்டு திரும்பக் கொடுத்து விட்டு மொத்த இடத்தையும் தோண்டச் சொன்னார்.

தோண்டத் தொடங்கினார்கள். எல்லோர் பார்வையும் உருவாகும் குழிமேலேயே இருக்கும்போது செல்போன் சிணுங்கியது சம்பந்தத்திடம்.. காதைக் கொடுத்தவரின் முகத்தில் அதிர்ச்சிகரமான மாறுதல்கள்.

ரங்கராஜன் கவனித்து விட்டுக் கேட்டார்.

"என்ன சார் எதாவது தப்பா...?"

"ஆமாம் ரங்கராஜன், வீநரசிம்மன் வீட்டுல பாத்ரூம் போன அவங்கம்மா பாகீரதியை பாம்பு கடிச்சிச்சாம். பாம்பு எங்க போச்சுன்னு தெரியலியாம். நௌ ஷி ஈஸ் இன் த டேஞ்சர் பொசிஷன்.."

"ஐ.ஸீ..." ரங்கராஜன் பதில் அதிர்ச்சியோடு எதிர் கொள்ள மாதங்கி முகத்தில் சட்டென்று தொற்றியது ஒரு குழப்பம்!

அதேசமயம் தோண்டும் குழிப்பரப்பிலும் ஒரு பெண்ணின் தலைப்பாகம் தெரியத் தொடங்கியிருந்தது.

* * *

# 25

*விதியைப் பற்றியும், மதியைப் பற்றியும் பலவிதமான தர்க்கங்கள்.. ஜெயிக்க முடியும், முடியாது என்றெல்லாம் விளக்கங்கள்... வியாக்யானங்கள்! ஆவியோடு பேசும் தாமசிடம் இதுபற்றி பேச நேரிட்டது. அவர் தந்த விளக்கம் எனக்கு சரி என்று பட்டது. விதியையும், மதியையும் அவர், நம்மையும் நம்முடைய வினைப்பாடுகளோடும் பொருத்தி இரண்டும் விளையாடும் விளையாட்டு அது என்றார். விளையாட்டு என்று வந்துவிட்டால், ஒருவர் ஜெயிக்கணும், ஒருவர் தோற்றுத்தான் தீரணும். வெற்றி பெறுபவர் யார் என்பது தான் கேள்வி. மற்றபடி, காலம் இரு தரப்பினுக்கும் சமமான அளவு வாய்ப்புகளைத் தருவதாகச் சொன்னார்.*

*மாதங்கி காலம் எனக்குத் தந்த வாய்ப்பில் நான் அதனிடம் தோற்றுவிட்டாலும் நீ தோற்றுவிடக்கூடாது. அதுதான் என் ஆசையடா குழந்தை..'*

- பரமேஸ்வரனின் டைரிக் குறிப்பிலிருந்து...

செல்ஃபோனில் வந்த சேதி எஸ்.பி. சம்பந்தத்தை சற்று நிலை குலைய வைத்திருக்க வேண்டும். செல்ஃபோனை பாக்கெட்டில் செருகிக் கொண்டு பக்கவாட்டில் பிசாசுத் தலைபோல இருக்கும் ஒரு பாறை மேல் போய் சாய்ந்து நின்றார். மண்ணைக் கெல்லி எடுத்து

உள்ளிருந்து ஒரு பெண்ணின் சடலத்தை வெளிக்காட்டி விட்டிருந்த சென்ட்ரி போலீஸ். மூக்கைப் பிடித்துக் கொண்டு சற்று தூரம் செல்ல, ரங்கராஜனும் மாதங்கியும் எட்டி சடலத்தைப் பார்க்கின்றனர். மண் தின்ற முகத்தில் கோரம். மண்ணோடு சேர்ந்து கிளம்பும் ஒருவித துர் வாடை. யாரோ தள்ளி விடப்பட்டது போல, இருவரும் பின் னால் வந்து பாறை மேல் சரிந்துவிட்ட எஸ்.பி.யை பார்த் தனர்.

''கொடுமை சார்.'' என்றார் ரங்கராஜன்.

''இன்னும் ஒரு கொடுமை ரங்கராஜன்.'' இது எஸ்.பி.

''என்ன?''

''மாதங்கி.. உன் பாட்டி அதான் அந்த பாகீரதி அம்மாள் இல்ல..''

''ஆமாம்.''

''அவங்களை நல்ல பாம்பு கடிச்சிருச்சாம்.''

அடுத்த கணம் மாதங்கி முகத்தில் மத்தாப்பு கொளுத் தினதுபோல உற்சாகம் பரவிற்று.

''எப்ப சார்?''

''கொஞ்ச நேரத்துக்கு முந்திதான்... போற போக்கைப் பார்த்தா இந்த விட்னஸை எல்லாம் வெச்சு, அவங்களை கோர்ட்ல நிறுத்தி தண்டனை வாங்கித் தரவேண்டிய அவசி யமே இருக்காது போல இருக்கு...''

சலித்துக் கொண்டார் அந்த நல்ல போலீஸ் அதிகாரி.

''வேண்டாம் சார்.. அவங்கவங்க வினை அவங்கவங் களை துரத்திக் கொல்லப் போகுது பாத்துட்டு பாடமா எடுத்துப்போம். பாவம் சார் கோர்ட்... அது ஏற்கனவே கேஸ் களால விழி பிதுங்கிப் போய்க்கிடக்கு..''

மாதங்கி பேசும் விதம், அந்த பாவனை ரங்கராஜனை பலவிதமாக யோசிக்கச் செய்தது.

''சரி சரி... பாடியை அப்படியே கோர்ஃபுல்லா வெளிய எடுங்க. போஸ்ட் மார்ட்டம் நடந்து. ரிப்போர்ட் ரொம்ப சீக்ரெட்டா என் டேபிளுக்கு வரணும். இவளைக் கொண்ணு புதைச்ச நபர் ஏற்கனவே தற்கொலை செய்துக்கிட்டாலும், யாருக்காக அவன் இந்தப் பொண்ணை பலி கொடுத்தான். இந்தப் பொண்ணு யாருன்னு பல கேள்விகளுக்கு விடை தெரியணும். மிஸ்டர் செல்வராஜ். இனி ஃபாலோ பண்ண வேண்டியது உங்க ட்யூட்டி...''

எஸ்.பி. முடுக்கி விட்டு விட்டு, மீண்டும் அங்கு இருந்து ஒதுங்கத் தெடங்கினார். கூடவே ரங்கராஜனும் மாதங்கியும்..

''மாதங்கி... நிஜமா சொல்றேன் நீ பண்ணியிருக்கிறது பெரிய அட்வெஞ்சர்...'' வரப்பின் மேல் நடையிடும்போது சம்பந்தம் சொன்னார். பார்வை நாலாபக்கமும் சுழல்வதில் அங்கங்கே பலர் இமைக்க மறந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

''மிஸ்டர் சம்பந்தம் இந்த அட்வெஞ்சரோட நோக்கமே அக்கிரமங்களுக்கு தண்டனை கிடைக்கணும்ங்கறதுதான். பாலிடீசியன்ஸ் சம்பந்தம் இருக்கறது தெரிய வந்தா அப்படியே கேஸை இழுத்து மூடிட மாட்டீங்களே..'' ரங்கராஜன் பிடிக்க வேண்டிய இடத்தில் தான் பிடித்தார்.

சம்பந்தம் ஊன்றிப் பார்த்தார்.

''நாம பலவருஷம் பழகறோம். நான் எப்படின்னுதான் உங்களுக்குத் தெரியுமே?'' என்று மட்டும் சொன்னார்.

“ஆமா.. அந்த வீரநரசிம்மனைப் பிடிக்கறது என்ன ஆச்சு?”

“மேட்டூர் செக்‌ஷனுக்கு மேட்டர் போய் இந்த நொடி அவனைத் தேடி அலைஞ்சிக்கிட்டிருப்பாங்க. பை த பை அவனோட ஆள் ஒருத்தன் என்ன ஏதுன்னு பார்க்க இங்க வந்து இப்ப அந்த வீட்லதான் இருக்கான்.”

“அப்ப அவனை அவுத்துவிட்டா அவன் நேரா நரசிம் மன்கிட்ட போவான். அவனை ஃபாலோ பண்ணிப் போனா அந்த சண்டாளனை பிடிச்சிடலாமே.”

தீப்பொறி போல ஐடியா தெறித்து வந்தது மாதங்கி யிடம் இருந்து.. சம்பந்தம் சந்தோஷப் புன்னகையோடு மாதங்கியை ஏறிட்டு விட்டுச் சொன்னார்.

“ரங்கராஜன் மாதங்கியை பேசாம என் டிபார்ட்மென் டுக்கு கொடுத்துருங்கய்யா!”

இயல்பில் பாகீரதி நல்ல மைதா வெளுப்பு. ஆனால், கருநாகக் கடி அவளை வெளிர் நிறத்தில் புரட்டி எடுத் திருந்தது. காட்டுப்புத்தூரார் மந்திரித்து விஷத்தை எடுக்கப் பார்த்த முயற்சி எடுபடவில்லை மனப்பூர்வமாகச் செய்தால் தானே? மொத்தத்தில் காப்பாற்றும் முயற்சி பலனேதும் தரவில்லை. கடித்த பாம்பையும் கண்ணால் பார்க்கவே முடியவில்லை. இருந்தும் அதைத் தேடும் பாவனை காட்டுப் புத்தூராரிடம்..

உள்ளே ஒரு ஹாலில் பிணம் கிடக்க, சுற்றிலும் சோகச் சித்திரங்களாக சிவசு, கணேசன், ராஜமக்கா, திரிபு அத்தை... அத்தை கூரையையே பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தாள். சின்னதாக நிழலாடினாலும் பாம்பு பிரளு வது போலத் தோன்றியது.

யாரிடமும் பேச்சு மூச்சில்லை. வீரண்ணன் கூட விரட்டிப் பிடிக்கப்பட்ட ஜல்லிக்கட்டு காளையாட்டம் மிரண்டு போய் நின்று கொண்டிந்தான். வாசற்புரமாய் ஜீப் ஒன்று தேங்க, துள்ளிக் குதித்து இறங்கி வருகிறார் சம்பந்தம். கூடவே அடுத்தடுத்த அடுக்குகளில் உள்ளவர்கள். ஏரியா போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று ஒரு கூட்டம் உள்ளே வேக மாக நுழைந்தார்கள். பாகீரதியைப் பார்த்து கண்களை ஊசிக் கூர்மைக்கு மாற்றிக் கொண்டார்கள். பாத்ரூமை எட்டிப் பார்த்து விளக்கங்களை காவல் போலீஸிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். நடுவில் ஒருவர் வீரண்ணனிடம் வித்தை காட்ட ஆரம்பித்தார்.

“நீ யாருய்யா...?”

“நான்... நான் இவங்க தோட்டத்து வேலைக்காரங்க..”

“இங்க என்ன பண்றே.. போ தோட்டத்துக்கு...”

“அய்யோ... புறப்பட்டவனை இந்த ஆள்தாங்க தடுத்து நிறுத்திப்பிட்டான்.”

“அப்படியா.. என்ன சார் இது? இவன் ஒரு தேர்ட் பர்ஸன் இவனை எதுக்கு இங்க போட்டு முடக்கறீங்க போய்யா முதல்ல...”

அவன் தானே ஒரு ‘வலை’ என்பது புரியாமல் முதல் காரியமாக புறப்பட ஆரம்பித்தான். வாசல் வரை போனவன் திரும்ப உள்ளே வந்து சிவசுவின் காதைக் கடித்தான்.

“அடப்போடா முண்டம். உன்னை போலீஸ் இப்ப வெளிய அனுப்பறதே அண்ணனை உன் மூலமா பிடிக்கத் தான். நீ வேற எங்கேயாவது போ..”

“அப்ப யார் வந்து காரியம் பண்ணுவா?”

"ஏன் நாங்க கொள்ளி போட்டா எங்கம்மா எரிய மாட்டாளாக்கும். போ... ரொம்ப பேசாதே... சந்தேகப்படுவாங்க."

சிவசு கில்லாடிதான். வீரண்ணனின் பாதையை மாற்றி விட்டுவிட்டு திரும்பவும் பாகீரதியின் சடலத்தைப் பார்த்தான். அதேசமயம், கொல்லையில் பாம்பைத் தேடுவது போல படம் காட்டும் காட்டுப்புத்தூராரை எஸ்.பி. சம்பந்தம் நோண்டத் தொடங்கியிருந்தார்.

"நீங்கதானே பிளாக் மேஜிக்கலாம் பண்ற காட்டுப் புத்தூர் ஸ்ரீ நிவாச வரதாச்சாரி..."

"ஆமாம்.. ஒரு திருத்தம். நான் பிளாக் மேஜிக் பண்றவன் கிடையாது. நான் ஒரு உபாசகன். அதுலையும் பவித்ரமான ஆஞ்சநேய உபாசகன்."

"அப்படியா.. அது சரி, சித்ரலேகாங்கற பொண்ணை உங்களுக்கு தெரியுமா?"

"சித்ரலேகாவா.. யார் அது?"

"ஓ.கே. இப்படிக் கேக்கறேன். எம்.எல்.ஏ. பன்னீர வரதனோட பி.ஏ.வா ஒரு பொண்ணு இருந்தாங்களே..."

சம்பந்தத்தின் கேள்வி காட்டுப்புத்தூரார் வயிற்றில் ஒரு தீப்பந்தை தூக்கிப் போட்டது போலிருந்தது. இருந்தும் சமாளித்தார்.

"தெரியலியே... எனக்கு எம்.எல்.ஏ பன்னீர்வரதனே யாருன்னு தெரியாதே?"

"பொய் சொல்றதுன்னு முடிவு பண்ணிட்டீங்க. தப்பில்ல. ஏன்னா பொய் சொன்னாதானே நீங்க தப்பிக்க முடியும். ஆனா அதை நம்பும்படியா சொல்லணும். முழுப் பூசணிக்காயை சோத்துல மறைக்கக் கூடாது மிஸ்டர் காட்டுப்புத்தூர். பாக்கறீங்களா இந்த போட்டோவை.."

சம்பந்தம் ஒரு போட்டோவை எடுத்துக் காட்ட, அவர் முகம் வெளிறிப் போனது. அந்தப் புகைப்படத்தில் காட்டுப் புத்தூரார், கணியன், எம்.எல்.ஏ., வீரநரசிம்மன் மற்றும் சிலர். ஏதோ ஒரு பூஜை நடந்து, எம்.எல்.ஏ., மாலையும் கையில் பிரசாத தட்டுமாக நின்றபடி இருக்கிறார்.

''ஓ.கே. உங்களோட நிறையப் பேச வேண்டியிருக்கே..'' சம்பந்தம் அவரை தள்ளிக் கொண்டு கிளம்பத் தொடங்கினார்.

பாகீரதியை டிஸ்போஸ் செய்வதில் இன்ஸ்பெக்டர் ஒருவரோடு, குடும்பமே மும்முரமாக இருந்தது. உடம்பு வாடையடிக்கத் தொடங்கி விட்டிருந்தது. ஊதுபத்தி ஏற்றி வைக்க பரண் மேல் எம்பியபடி கைகளை விட்டு துழாவத் தொடங்கியிருந்தான் சிவசு. அவன் கை புரளும் இடத்தில் எல்லோர் கண்களிலிருந்தும் எப்படியோ தப்பிவிட்ட அந்தக் கருநாகம்!

★ ★ ★

*அருமை, மாதங்கி... நான் காற்றாகி அப்பொழுதும் நம் குடும்பம் என்னையே சுவாசிக்கும்படி சுற்றிச் சுற்றி வருவேன். இறந்தபின் உயிர்கள் என்னாகின்றன என்னும் கேள்விக்கு நான் நிதர்சனமாக விடை தர விரும்புகிறேன். உன் சிக்கல்களுக்கு நான் வந்து தீர்வு தருவேன். கலங்காதே. இப்படி நினைப்பதை எல்லாம் எழுதி வைக்க வழிவகுக்கும் இந்த டைரி எழுதும் பழக்கம் இருக்கிறதே... இது நிஜமாலுமே உன்னதமான ஒன்றுதான்.''*

- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து...

நல்லவேளை... அந்தப் பாம்பு உராய்வுச் சப்தம் கேட்டு எழுந்து கையைப் பார்த்து எழும்பி நிமிர்வதற்குள், ஊதுபத்தியை எடுத்து முடித்துவிட்டிருந்தன சிவசு கைகள்.

ஊதுபத்தியும் பாகீரதியின் தலைமாட்டில் புகைய ஆரம்பித்தது. நிமிரும் சிவசுவை சம்பந்தம் ஒரு தினுசாகப் பார்த்தார். உடன் வெளிறிப் போய் நின்று கொண்டிருந்தார் காட்டுப்புத்தூரார்.

''சார்... அம்மா தவறிட்ட விஷயத்தை உறவுகளுக்கு சொல்லணும். காரியம்லாம் வேற இருக்கு...'' சிவசு ஏதோ சொல்ல வந்தான்.

''தாராளமா.. ஆனா போலீஸ் காவலோடு தான் எல்லாம் நடக்கும். நீங்க யாரும் தப்பிப் போக முடியாது.''

"ஒட்டு மொத்தமா ஒரு குடும்பத்தையே நீங்க இப்படி கத்தி வளைச்சா எப்படி...?" மிடறு கட்டிக் கொண்டு தான் பேச முடிந்தது சிவசுவால்...

"உங்களுக்கு தெரியுமே உங்க தப்பு... தெரியாதா?" சம்பந்தம் கேட்கும் தொனியில் அசாத்திய அழுத்தம்.

"என்ன தப்பு சார்... எனக்கு எதுவும் தெரியாது. அண்ணா கூட தப்பு பண்ணினதா நான் நினைக்கல. அந்த நட்டு மாமா ஏதோ சொல்லிட்டு செத்தார்னு கேள்விப்பட்டேன். அப்புறமா அந்த கணியன் தன்னோட டைரியில் ஏதோ எழுதியிருந்ததாகவும் சொன்னார் உங்க அசிஸ்டென்ட்.

நாங்க உண்டு, எங்க வேலை உண்டுன்னு இருக்கோம். யாரோ எதையோ எழுதி வெச்சுட்டு செத்துப் போயிட்டா அது உண்மையாயிடுமா...?"

சிவசு பேசிப் பார்த்தான். கேள்விகளில் உயிர்த் துடிப்பு இல்லை. முகத்தில் நியாயமான கோபம் இல்லை. பெற்றவன் போய்விட்ட துக்கமும் இல்லை.

"சிவா.. இவரண்ட என்ன பேச்சு. நாம நம்ம வக்கீல் கிட்ட பேசுவோம்.. சார் இது கொஞ்சம்கூட நல்லாயில்லை. ஒரு நாலு நாளா நாங்க குப்பை கொட்டக்கூட வெளியே போக முடியலை. எங்கண்ணன் தப்பு பண்ணினதா நீங்க நினைச்சா, அவனைத் தேடிப் பிடிச்சு விசாரிச்சுக்கோங்க. எங்களை இப்படி டார்ச்சர் பண்ணப்படாது."

கணேசன் கொஞ்சம் குதித்துப் பார்த்தான். சம்பந்தம் அதற்காக சிரித்தார். பார்வை காட்டுப்புத்தூரார் பக்கம் திரும்பியது.

"அவருக்குதானே தெரியும் யார் யாருக்கெல்லாம் பங்கு என்று..."

"என்ன சாமி... இவன் இப்படி பேசறான். இவன் எந்த வகையில உங்களுக்கு உதவி செய்தான்னு சொல்வீங்கள்ல."

நைச்சியமாக மடக்கினார் எஸ்.பி.

"அது.. அது.." காட்டுப்புத்தூரார் மென்று துப்பி லிட்டு, பொணத்தை போட்டுண்டு சில விஷயங்களை பேசக்கூடாது காரியம் நடந்துடட்டுமே..." என்று அந்தப் பேச்சை ஒரு மாதிரி ரவுண்ட் ஆஃப் செய்தார்.

நடுநடுவே எப்படி இப்படி வந்து மாட்டிக் கொள்ள நேர்ந்தது என்கிற அந்தக் கேள்வி வேறு மனதைக் கொத்தியது.

சாதாரணமாக மந்திர உபாசகர்கள் தங்கள் வாழ் நாளில் பலா பலன்களை துல்லியமாகக் கணக்கிட்டு இந்த தேதியில் இது இது நிகழும் என்று முன்கூட்டியே யூகித்திருப்பார்கள். அதன்படி காட்டுப்புத்தூராரும் கணித்து வைத்திருந்தது எப்படி மாறியது? பொன்னும் பொருளும் அகப்படும்.. தான் ஒரு ராஜயோகியாகப் போவதாக அல்லவா கட்டங்கள் சொல்லியது. அப்படியிருக்க எந்தக் கிரகம் தன்னை இந்தப் பாடுபடுத்துகிறது...? அவர் மனதில் மேல்மாதிரி கேள்விகள்.. அப்படியே தப்பிக்கும் உபாயமும்..

"அந்த ஆள் தப்பிக்கவே முடியாது. அந்த அளவுக்கு வசமாக மாட்டியிருக்கான்.." என்று சொல்லி விட்டு மாதங்கி கைகளை குத்திக் கொண்டபோது, எதிரில் இருந்த ஸ்ரீதரனுக்கு சற்று சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஆனால், ரங்கராஜன் வேறு மாதிரி யோசித்துக் கொண்டிருந்தார்.

மாதங்கி சட்டத்தின் பிடியில் அவர்களை மாட்டி விட்டதோடு, கூடவே வேறு ஏதோ ஒன்றையும் சாதுர்ய மாக சாதித்திருக்கிறாள். இல்லாவிட்டால் இத்தனை இலே சாக அவளால் இருக்க முடியாது என்கிற மாதிரி எண் ணங்கள் அவருக்குள்.

அந்த எண்ணம் கலையாமல் அவளைப் பார்க்கிறார்.

"என்ன சார்... என்ன அப்படி பார்க்கறீங்க?"

"ஒண்ணுமில்லம்மா.. வந்து நாளாச்சு இல்லையா. ஊருக்கு கிளம்பலாமான்னு யோசிக்கிறேன்."

"ஆமாம் சார்... நானே சொல்லணும்னு இருந்தேன். எனக்காக நீங்க ரொம்ப சிரமப்பட்டுட்டீங்க, ஒரு பத்தி ரிகை ஆசிரியர் இப்படி தன் வேலைகளைப் போட்டுட்டு வந்து, என் குடும்பத்துக்காக ஒத்துழைச்சதை நினைச்சு ரொம்பப் பெருமைப்படறேன்."

அவளிடமும் கசிவு.

"நீயும் கிளம்பேன். அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே.."

"இல்ல சார்.. என்னைப் பொருத்தவரை முடியல. இன்னும் நிறைய பாக்கி இருக்கு..."

"நீ இருந்து என்ன பண்ணப்போறே.. எல்லாத்தையும் இனி எஸ்.பி. சம்மந்தம் பார்த்துப்பாரும்மா."

"எப்படி சார்... எப்படி.. எப்படி வரமுடியும் என்னால? அம்மா இன்னும் வீடு வரலை. அவங்க வரட்டும். கொஞ்சம். குடும்பம் செட்டாகட்டும். அப்புறமா வரேன்."

"அப்ப ஒரு மூணு மாசமாகும்னு சொல்..."

ரங்கராஜன் கேட்கும்விதமே. அவ்வளவு நாள் லீவு

அவளுக்குத் தர தனக்கு சம்மதம் என்பதுபோல தோன்றியது. சில நொடிகள் மௌனித்தவள் 'உம்' என்று தலையை அசைத்தாள்.

''ஒரே ஒரு கேள்வி கேட்கட்டுமா?'' அவசியமே இல்லாத பீடிகையோடு ரங்கராஜன் அவளைப் பார்க்கவும் அவள் சுவரருகே மிக நெருங்கி வந்து காதோரமாகச் சொன்னாள்.

''தெரியும் என்ன கேக்கப் போறீங்கன்னு..''

''என்ன?''

''அந்தக் குடும்பம் முழுசுமே அழிஞ்சுடுமாங்கறது தானே?''

ரங்கராஜனுக்கு அடுத்த க்ஷணம் நெஞ்சைப் பிடித்தது. மாதங்கியின் அந்த மன வாசிப்பு மலைப்பைத் தந்தது.

''ஆமாம்.'' என்கிறார்.

''நிச்சயமா அழிஞ்சுருவாங்க. இல்லேன்னாலும் அழிப்பேன். நேற்று பாகீரதி.. இன்னிக்கு நிச்சயமா இன்னொரு உயிர்.''

''எப்படி மாதங்கி... எப்படி?''

''வேண்டாம் எதையும் கேட்காதீங்க... அவங்க அழிஞ்சே தீரணும். அழிவாங்க..''

''அதான், எப்படி...?''

''பாகீரதி சாவான்னு யாராவது நினைச்சீங்களா?''

''இல்ல.. ஆனா அது ஒரு தற்செயல் சம்பவமா இருக்கலாம் இல்லியா?''

''அதே தற்செயல்கள் தொடரும்.. போலீஸ் எதிர்க் கையே...''

''புதிர் போடாமப் பேசு. நீ ஏதோ எசகுபிசகா பண்ணியிருக்கே.''

''நான் ஆமான்னும் சொல்லமாட்டேன். இல்லேன்னும் சொல்லமாட்டேன். என் விஷயத்துல மதிமுக்கால் மந்திரம் கால்..'' மாதங்கி பேசப்பேச ஸ்ரீதரனே சற்று நெருப்பாகிப் போனான். ஊடே சம்பந்தம் தொலைபேசியில் ரங்கராஜனைக் கூப்பிட்டு பேசினார்.

பாகீரதி சடலத்தை எரிக்கும் முயற்சியில் குடும்பம் ஈடுபட்டிருப்பதைச் சொல்லிவிட்டு பெருமூச்சுவிட்ட போது. ரங்கராஜன் கேட்டார். ''ஆமா.. அந்தப் பாம்பைக் கண்டு பிடிச்சு அடிச்சிட்டீங்களா?''

''எங்க ரங்கராஜன்... ஓடிப் போயிடுச்சு...''

''இருக்காது எஸ்.பி. சார்... நல்லா தேடிப் பாருங்க. அது தற்செயலா வந்த பாம்பாவும் இருக்க முடியாது. அப்படியே அந்த ஃபேமிலியை உங்க கஸ்டடிக்கு கொண்டு போயிடுங்க. அங்க வேண்டாம்.''

''என்ன ரங்கராஜன்... நீங்க சொல்றதப் பார்த்தா ஏதோ தப்பு நடந்துட்டதா தெரியுதே...''

''இல்ல, இது என் யூகம்தான்.''

சொல்லிவிட்டு போனை முடக்கினார். மாதங்கி எதிரில் நெருப்பாகப் பார்த்தாள்.

''சாரி மாதங்கி.. அவங்களை சட்டம் தண்டிக்கிறது தான் சரி. சட்டம் நிச்சயம் தண்டிக்கும். நீ ஏதோ பண்ணியிருக்கே. அனேகமா அந்த காட்டுப்புத்தூரார் உன்னால்

அனுப்பப்பட்ட கொலைகாரராவே கூட இருக்கலாம். ஆயிரம் கதைகள் எழுதின, படிச்ச எனக்கு அவ்வளவு கூட யூகிக்க முடியாதா என்ன...?''

ரங்கராஜன் சரியாகத்தான் வந்தார். மாதங்கியோ சிவந்து விட்டாள்.

* * *

# 27

*தொடர்ந்து நான்கு முறை தோற்ற எம்.எல்.ஏ., வேதமுத்து வகையறாவிற்கு எதிரிகளை முடக்கச் செய்யச் செய்த பிரத்யங்கரா பூஜை செலவு சமாராய் மூன்று லட்சம். இதில் அட்வான்ஸ் ஐம்பதாயிரம் போக இரண்டரை லட்சம் பாக்கி இருப்பு.. இதில் கன்னிப்பெண் வளைப்புச் செலவு மட்டும் முப்பதாயிரம். துர்ப்பணமை, சுபேதாக்னி தயாரிப்பு செலவு தனி.. வீரநரசிம் மனிடம் உள்ள இருப்பு தனி..*

- இது கணியன் டைரிக் குறிப்பிலிருந்து...

**மா**தங்கி அப்படி மாறுவாள் என்று யூகித்த ரங்க ராஜன் அவளையே ஊன்றிப் பார்த்தார். நிதானமாக சொல்லத் தொடங்கினார்.

''மாதங்கி... கோபப்படாதே! உன்னை நான் நல்லா புரிஞ்ச ஒருத்தன். எந்த விஷயத்துக்கு நீ எப்படி நடந்துப் பேன்னு எனக்கு நல்லா தெரியும். இப்பவும் சொல்றேன். சாமர்த்தியமா நடந்துகிட்டு நிறைய எவிடென்ஸையும் கலெக்ட் பண்ணி போலீஸ்கிட்ட ஒப்படைச்சுட்டே... இதை நீ எந்தப் பின்புலத்துல செய்திருந்தாலும் சரி... அதப் பத்தி எனக்குக் கவலையில்லை. ஆனா, சட்டம் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்கற மாதிரி சுமெண்ட் அடிச்சே பாரு. அங்கதான் உன் பழி உணர்ச்சி தெரிய வந்தது.

ஆசை, வயிற்றுப்பாடு இதெல்லாம்தான் மனுஷங்களை தவறு செய்யத் துண்டுது. அவங்க ஒவ்வொருத்தரும். ஒவ்வொரு விதத்துல தவறு செய்தவங்க. அதுக்கு கோர்ட் தண்டனை தரட்டும். அவங்க தவறுகளை விசாரணை செய்து நீயும் பத்திரிகைல எழுது. அதனால விழிப்புணர்ச்சி ஏற்படும். அதை விட்டுட்டு பழிக்குப்பழி இரத்தத்துக்கு இரத்தம்னு போகாதே..''

ரங்கராஜன் ஒரு நீண்ட விளக்கத்தைச் சொல்லி நிறுத்தின மறுநொடி, பக்கமாய் மேஜைமேல் உள்ள ஒரு கண்ணாடி ஜாடி சட்டென்று கீழே விழுந்து நொறுங்கி சில்லுகள் நாலாபக்கமும் சிதறியது. அந்த க்ஷணம் ரங்கராஜன் கவனமும், ஸ்ரீதரன் கவனமும் அந்த ஜாடி நோக்கிச் செல்ல, சுவரில் தேமேவென்று தொங்கிக் கொண்டிருந்த சுவர்க் கடிகாரம் பிடிப்பற்று சொத்தென்று விழுந்து அடுத்த அதிர்ச்சியளித்தது. இவை எல்லாம் என்ன... தற்செயல் சம்பவங்களா? கேள்வி முடியும் முன் ரங்கராஜனின் அசாத்திய மாற்றம்.

யாரோ அவரை ஆக்ரமிக்க முயல்வது போல் அவரிடம் ஒரு பதட்டம். தடுமாற்றம். கைகால்களை அசைத்து அசைத்து தடுமாறத் தொடங்கியவர் தரை மேலெல்லாம் விழுந்து புரளத் தொடங்கினார். கண்விழி தெறித்து விடும் போல பாவனை காட்டி ஏராள வியர்வையையும் பெருக்கி ஓடவிட்டார்.

''சார்... என்னாச்சு உங்களுக்கு?'' ஸ்ரீதரன் பதற, மாதங்கி குழம்ப, ரப்பர் பந்து போல எழுந்தவர் பார்வை சுற்றிச் சுழன்றது. பக்கத்து ஷெல்பில் பேனா பென்சில்கள் நோட் புக்குகள் புத்தகங்கள்... விரைப்பாகிப் போய் பேனாவையும் ஒரு பேப்பரையும் எடுத்து வந்தவர், நடுக்

கூடத்தில் ஒரு ரோபோ பொம்மை செயல்படுகிற மாதிரி அமர்ந்து தரைமேல் தாளை விரித்து வைத்து எழுதத் தொடங்கினார்.

'அருமை ரங்கராஜன். அவர்களை கோர்ட்டில் நிறுத்தி வைத்து விசாரணை செய்தால் உண்மை வராது. மீறி உண்மை வந்தாலும் அதனால் சமூக விழிப்புணர்வெல் லாம் தோன்றாது. ஒரு காரியத்தில் வெற்றி பெறவும், நிறைய பணம் சம்பாதிக்கவும் இப்படி எல்லாம்கூட வழி இருக்கிறதா என்கிற எண்ணம்தான் ஏற்படும். படிப்பவர் கள் நூறு பேரில் ஒருவர் திரும்ப இந்த முறைகளில் இறங்கினாலும் என்னைப் போல பலியான, அப்பாவி கன்னிப் பெண்கள் பலரைப் போல இன்னும் பலர் பலியாக வேண்டி வந்துவிடும்.

அவள் காட்டுப்புத்தூராரை திசை திருப்பிவிட்டது சரி. கணியனின் பையில் கிடைத்த காட்டுப்புத்தூரார் கணியனுக்கு எழுதிய கடிதம் மூலமாக காட்டிப்புத்தூரார் தங்கத்துக்காக பைரவி பூஜை செய்து கொண்டிருப்பது மாதங் கிக்கு தெரிந்தது. அதைப் பயன்படுத்தி பைரவி என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைத்தாள். பொன்னாசை காட்டி காட்டுப்புத்தூராரை அனுப்பியுள்ளாள். ஆனாலும் அவரோ மற்றவர்களோ மந்திர தந்திரங்களில் முறையாக தேர்ந்தவர்கள் அல்லர்.. சரியான அரை குறைகள் அதனால் தான் துர்பலிகள் கொடுக்கிறார்கள். அதிலும் காட்டுப் புத்தூரார் சரியான கண்கட்டு வித்தைக்காரர். அவர்கள் யாருமே உயிரோடு இருக்கக்கூடாது. இருக்கவும் விட மாட்டேன். என் மகள் மேல் பழி போடாதீர்கள். அவள் மூலமாக கொலை செய்ய நினைத்தது என் தவறு... வீர நரசிம்மன் வீட்டினுள் நுழைந்திருக்கும் பாம்பும் நான்தான்.

உத்தமமான திற்பரப்புச் சாமியார் எனக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்

- வருகிறேன்
பரமேஸ்வரன்.

- கடிதத்தில் பரமேஸ்வரன் எழுத்து முற்றுப்பெற்ற மறுநொடி முதுகில் ஒரு சவுக்கு நுனிபட்டது போல ஒரு சிலிர்த்து விட்டு உடம்பை உதறினார் ரங்கராஜன். முகத்தில் ஆக்கிரமிப்பு விலகிய ஆசுவாசம்.

அண்ணாந்த நிமிர்வில் மல்லைச் சிற்பம் போல அவரை நோக்கும் ஸ்ரீதரன். மாதங்கி... பார்வை தாழவும் கடிதம் கண்ணில்பட 'என்ன கடிதம் இது..?' என்ற கேள்வி. பார்வையும் விறுவிறுவென்று வாசித்து முடிக்கிறது. மீண்டும் நிமிர்வு.

"மாதங்கி.. வாட் ஈஸ் திஸ்? என் கையெழுத்து.. நான் நானா எழுதினேன்?" மாதங்கி தலையை மட்டும் அசைக்கிறாள்.

கண்களில் ஈரம் பாய, பாப்பா பக்கவாட்டில் அசைந்து பரமேஸ்வரனின் படத்தைப் பார்க்கத் தொடங்க, அடுத்த நொடி கால்கள் அவரை நோக்கி ஓடின. குரலில் 'அப்பாாா...' என்கிற வெடிப்பு.. ஸ்ரீதரன் ரங்கராஜனோடு கூடி விரைத்தே போய் விட்டிருந்தான்.

மயானம்.

திகுதிகுவென்று எரியத் தொடங்கியிருந்தாள் பாகீரதி. சிவசு தான் கொள்ளி போட்டிருந்தான். வீரநரசிம்மன் கடைசி வரை வரவில்லை.

சுடுகாட்டில் கூலி வேலைக்காரர்களைப் போல

நிறைய சிவில் போலீஸார் வீருவுக்காக நடமாடியபடி இருந்தனர். ஆனால், வீரு வருவதாக இல்லை.

பத்திரமாக சாவுக்கு வந்தவர்களை ஒரு போலீஸ் வேனில் ஏற்றிக்கொண்டு திரும்புகிறது போலீஸ்.

வழியிலேயே அணைக்கரையில் இறங்கி ஒரு முழுக்கு... அணையில் அவ்வளவாக நீரில்லை. பல இடங்களில் சேறு பிரண்டு சற்றே காய்ந்து பாளம் விட்டுக் கிடந்தது.

நீருள்ள பாகத்தில் ஊர்ப்பட்டவர்கள் குளித்த அழுக்கு... அதைப் பார்த்த சிவசுக்கு முகம் கோணியது.

''நான் வீட்டுக்கே போய் குளிச்சிக்கறேனே'' என்றான்.

''இன்னிக்கும் நாளைக்கும் வெளியேதான். குளிக்கணும், கொள்ளி போட்ட கையோட குளிக்காம போனா வீட்டுக்கு நல்லதில்ல.'' காட்டுப்புத்தூரரார் சாஸ்திரம் சொன்னார்.

''இப்ப என்ன வாழறது? ஆமா என்னாகும்?'' கேட்டான்.

''உங்கம்மாவை கடிச்சதே பாம்பு, அது திரும்ப வந்து கடிக்கும்.'' புத்தூரார் சொன்ன விதத்தில் சற்று கேலி.

''அதையும் பாக்கறேன்...'' வீம்போடு அவனைத் தொடர்ந்து ஏறினார். பக்கமாக அமர்ந்தார்கள். வண்டி கிளம்பியது. நடுவழியில் காட்டுப்புத்தூரரார் காதோரமாக சிவசுவின் கேள்வி.

''ஆமா.. இப்படி சாவு காரியம் பண்ணி வைக்கத்தான் வந்தீரா..?''

''நான் எங்க வந்தேன்.. போலீஸ்னா கூட்டிண்டு வந்தது...''

''சரி வந்துட்டீர்.. இப்படி மாட்டிண்டு இருக்கோமே எப்படி தப்பிக்கிறதுன்னு யோசிக்க வேண்டாமா?''

''நான் யோசிக்கலைன்னு உனக்குத் தெரியுமா?''

''என்னத்த யோசிச்சீர்... அதுக்காக என்ன பண்ணி னீர்? இல்ல என்ன பண்ணப் போறீர்?''

''பயப்படாதே.. ஜ்வாலாஷ்டக மந்திரத்தை சொன்னா நம்மை குற்றவாளின்னு சொன்னா எல்லாக் குறிப்புகளும் உள்ள காகிதமும் தானா எரிஞ்சுடும். நாம் அலட்டிக்கவே வேண்டாம். எந்தக் கோர்ட்டுக்கும் போக முடியாது.'' மெல்ல காட்டுப்புத்தூரார் விஷயத்திற்கு வந்தார். சிவசு முகத்தில் உற்சாகம்.

வண்டியின் ஓட்ட சப்தத்தில் அவர்கள் பேச்சு பாதி தான் சிவில் போலீஸ்காரரின் காதில் விழுந்தது. ஆனாலும் குறிப்பாக எரியும் என்று சொன்னதை அவர் காதுகள் கச்சிதமாக வாங்கிக் கொண்டன.

*

கொஞ்சம் அழுகை வரத்தான் செய்தது வீரநரசிம் மனுக்கு... அவனைத் தேடி காட்டுப்பக்கம் வந்த போலீஸ் அவனது சுமோவை பிடித்துக் கொண்டு விட்டது.

அவர்கள் வரப்போவது தெரிந்து அங்கு ஒளிந்து, பின் அங்கிருந்து ஓடி கவுண்டர் காட்டில் ஒளிந்து, அதுவும் தோதுப்படாமல் போய் இப்பொழுது சந்தன வீரப்பன் போல மேட்டூர் மாதேஸ்வரன் மலைக்காட்டுப் பக்கம் வந்தாயிற்று.

உல்லாசத்தில் நிறைய, திளைத்த உடம்பு. மலைக் காட்டில் சுற்றியடித்ததில் உடைந்து போய் விட்டது. பல

சமயங்களில் இப்படி ஓடுவது தப்பு. சரண் அடைந்து வக்கீலை வைத்து வெளியே வந்துவிடலாம் என்று தோன்றினாலும் அந்த நினைப்புக்கு வலுவே இல்லை.

காரணம், கணியனின் டைரி. அதுதான் ஊர்ப்பட்ட ரகசியங்களின் சுரங்கமாயிற்றே! நாசமாப் போனவன் இப்படியா ரகசியங்களை எழுதி வைப்பான்? திருடப் போகிறவன் துணையோடு போகக்கூடாது என்பார்கள். டைரியும் எழுதி வைக்கக்கூடாது என்று அடிஷனலாக சேர்த்துச் சொல்ல வேண்டும்.

இல்லாவிட்டால் அலைச்சல்தான்!

இப்படி பல மாதிரி எண்ணி முடித்த வீரநரசிம்மன் ஒரு முடிவுக்கு வந்தான். துணிந்து பக்கத்து ஊருக்குள் பிரவேசம் செய்து வக்கீலுக்கு போன் பண்ணி குடும்ப நிலைபற்றி முதலில் கேட்கலாம். அவர் ஆலோசனைப் படியே நடக்கலாம். இனியும் பசி, பட்டினியோடு சுற்ற முடியாது என்று எண்ணியபடியே நிமிர்ந்தபோது, எதிரில் பாறை ஒன்றின் மேல் மூச்சிரைக்க, செந்நாக்கு வெளித் தெரிய தன் பொன்னிறக் கண்களால் ஒரு பார்வை பார்த்து விட்டு முன்னிரண்டு காலுக்கு விசையைக் கொடுத்து ஓர் எகிறு எகிறியது அந்த சிறுத்தை.

''அய்யோாா...'' வீரநரசிம்மன் திரும்பி ஓடத் தொடங்கியிருந்தான்.

* * *

# 28

*பேசிக்கொண்டே இருக்கும்போதே ஒருவரை நிலை தடுமாற வைக்க முடியும். கண்கள் மூலமாக செய்ய வேண்டிய இதற்கு பேர் நயன வசியம். இதைக் கற்க விரும்புபவன் ஸ்கலிதக் கட்டு கொண்டவனாக! குண்டலினியை எழுப்ப வல்லவனாக இருக்க வேண்டும். இது நீங்கலாக கயிற்றைப் பாம்பாக்குவது பொடிக்கற்களை தேள் குஞ்சுகளாக்குவது, பிறர் ஆடையில் தீப்பிடிக்க வைப்பது என்பதிலெல்லாமும் உபாசகர்கள் ஈடுபடுவார்கள். அப்படி ஒரு மனிதரைக் கைக்குள் போட்டுக் கொண்டு செயல்பட துடித்தார். எம்.எல்.ஏ., பன்னீர் வரதன்.*

- கணியனின் டைரிக் குறிப்பிலிருந்து..

பின்னங்கால் பிடரியில்பட அவன் ஓடியும் பலனில்லை. அந்தச் சிறுத்தை பல நூறு மீட்டரிலேயே அவனுக்கு முன் ஓடி அப்படியே வளைந்து திரும்பி, திரும்பிய வேகத்தோடு முன்னங்கால்களை தரையை உந்தியபடி தன் ஒன்னரை மீட்டர் நீள உடம்போடு அப்படியே அவன் மேல் எகிறியது.

கதிகலங்கி நின்றுவிட்ட வீரநரசிம்மன் மேல் விழுந்து அந்த வேகத்திலும் துளியும் கவனம் சிதறாதபடி அவன் கழுத்துப் பாகத்தினை வாயால் கவ்வியது.

அப்படியே துடிதுடிக்கும் அவன் சரீரத்தை இழுத்துக் கொண்டு ஒரு புதருக்குள் நுழைந்து மறைந்தும் போனது!

வீரநரசிம்மன் வீடு.

வெளியே போலீஸ் கூட்டம் உள்ளே குளித்து முடித்து ஆளாளுக்கு ஈரத்துணியை உலர்த்தி காயப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

செய்திப் பேப்பரில் பாகீரதி இறந்த விஷயமும், மாதங்கி சாமர்த்தியமாக டைரியை போலீஸில் ஒப்படைத்த விஷயமும் வெளியாகியிருக்க சென்ட்ரி போலீஸ் ஒருவர் அதை சுவாரஸ்யமாக படித்தபடி இருந்தார். கூடவே இந்த வழக்கில் மந்திரி, எம்.எல்.ஏ., என்று பலரும் அகப்படு வார்கள் என்கிற ஹேஷ்யத்தையும் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்க அதுபற்றிய விவரமும் தூள் பறந்து கொண்டிருந்தது.

பூணூலை காதுக்கு மாட்டிக் கொண்டு அறை ஒன்றில் பஞ்சகச்சம் உடுத்தியபடி இருந்த காட்டுப்புத் தூரார் காதிலும் இந்த விஷயங்கள் விழ வேகவேகமாக வேட்டியை உடுத்திக் கொண்டு வெளியே வந்தார்.

''எங்க அந்தப் பேப்பரைக் கொஞ்சம் தாங்கோ...'' என்று கேட்க, சற்று முறைப்போடு போலீஸ்காரரும் தர, வாங்கிப் பார்த்தவர் முகத்தில் ஏகப்பட்ட மாற்றங்கள். தாளில் ஒரு வண்ணப்படமாக மாதங்கி பளிச்சென்று சிரித்தாள்.

தன்னைத் தேடி வந்து பைரவி என்று சொல்லிக் கொண்டு நின்ற அவளின் அந்த சாதுர்யம் ஒரு விநாடி அவர் மனதில் ஒரு மத்தாப்பை கொளுத்திப் போட்டது.

கூடவே அவளது மதியும், அதன் சாதுர்யமும் இப்படி ஒரு கூட்டுக்குள் சகலரையும் கட்டிப்போட்டு விட்டது குறித்த வியப்பும் பெருக்கெடுத்தது.

'இவளோட கட்டத்துல புதனும் செவ்வாயும் பரி வர்த்தனை ஆகியிருக்கணும். ஒன்பதாமிடத்துல குருவும் உக்காந்துண்டு பார்த்துண்டுருக்கணும். அப்படியே மகம் நட்சத்திரமாவும் இவ இருக்கணும். அதான் இவளால என்னை யெல்லாம் கண்ணை கட்ட முடிஞ்சிருக்கு...' தனக்குள் சொல்லிக் கொண்டார்.

''என்ன சாமி பாக்கறீங்க... பேப்பர்ல வந்துடுச் சேன்னா? ஜனாதிபதி தப்பு பண்ணாலே வரும்போது நீங்க என்ன... சுண்டக்காய்..'' அந்தப் போலீஸ்காரர் ஊதிக் காண்பித்தார்.

''வாஸ்தவம்தான்பா..''

''தயாராய்க்கோங்க. நாளைக்கு காலைல உங்களுக்கு என்கொயரி. இங்க இல்ல. எஸ்.பி. அய்யா ஆபீஸில வெச்சு.. அப்ப எல்லாத்தையும் ஒத்துக்கோங்க. இல்லாங்காட்டி டப்பா டான்ஸ் ஆடிடும்..'' சிரித்தார். அந்தப் போலீஸ்காரர் CBCID பிரிவில் விசேஷ அந்தஸ்தில் இருப்பவர். காட்டுப் புத்தூரார் திரும்பி உள்ளே வந்தார்.

சிவசு எதிர்ப்பட்டு கேட்டான்.

''என்ன மாமா பத்திரிகைல வந்துடுத்தா?''

''ஆமாம் அப்படியே நான் முட்டாளாயிட்டதையும் தெரிஞ்சுகண்டேன். தும்பை விட்டுட்டேன். வாலைப் பிடிக் கிறதால பலன் இருக்குமான்னு தெரியலை எனக்கு...'' என்று சலித்துக் கொண்டார்.

''என்ன சொல்றேள்?''

''உங்கம்மா சாவு கொஞ்சம் அவகாசம் கொடுத் திருக்கு. நாளைக்கு வீட்டுக்குப் போய் பால் விட்டுட்டு

திரும்பின நிமிஷம் நம்மளண்ட விசாரணை ஆரம்பமாம். ஆத்த சுத்தியும் கூட ஏகத்துக்கும் போலீஸ்.

நீயும் நானும் பேசிக்கறத கூட எப்படி கவனிக்கறா பாத்தியா?''

''நான் உங்களத்தான் நம்பியிருக்கேன் மாமா... அந்த ஆதாரங்களை முதல்ல எரிச்சு காலி பண்ணுங்கோ. அப்புறம் அந்த எஸ்.பி. என்ன பண்ணிடமுடியும்னு நான் பாக்கறேன்.''

''அதுக்கு எனக்கு கொஞ்சம் தனிமை வேணும் சிவசு.''

''தாராளமா.. ரூமுக்குள்ள போய் கதவை சாத்திக் கோங்கோ... ஜபிக்கணுமோ?''

''ஆமாம்... கடுகளவு சர்வா பீஷ்ட மையும் வேணும்.'' என்று காட்டுப்புத்தூரார் தன் துணிப் பையை தேடிப் பிடித்து அதில் கைவிட்டு துழாவினதில் ஒரு மை டப்பா அகப்பட்டது. அவர் பார்வை சற்று பளபளப்பானது.

அதைத் திறந்து சுண்டுவிரலால் மையை வழித் தவர் புருவத்தின் மேல் வயணமாக பூசிக்கொண்டார். பார்க் காதது போல பார்த்துக் கொண்டேயிருந்தார் அந்த CBCID பிரிவுக்காரர்.

அடுத்த நொடியே அதை வயர்லேஸில் செய்தியாக்கவும் தவறவில்லை. மறுபக்கத்தில் இருந்து வந்த பதிலைக் கேட்டு தலையை ஆட்டவும் தவறவில்லை.

காட்டுப்புத்தூரார் ஒரு பெரிய பத்தாறு வேட்டித் துண்டோடு அறையினுள் புகுந்தார். ஒரு மூலையாகப் பார்த்து மாம்பலகைமேல் அமர்ந்து கொண்டு கைகளை

கோத்துக் கொண்டு ஒருவித முத்திரையோடு ஜெபிக்கத் தொடங்கலானார்.

வெளியே இருந்த CBCID போலீஸ்காரரிடம் இருந்து செய்தி பறக்க ஆரம்பித்தது.

"சார்.. நாம எதிர்பார்த்த மாதிரியே தப்பு பண்ண ஆரம்பிச்சுட்டாங்க."

"இது எந்த அளவு வேலை செய்யுதுங்கறத வெச்சு தான் இவங்க இதுக்கு முந்தி செஞ்ச பூஜைங்க, பலிகளை பத்தி நாம் எடைபோட முடியும்."

"சார்! எசகு பிசகா எதாவது நடந்து, அந்த எவிடென்ஸ் ஒருவேளை எரிஞ்சு போயிட்டா."

"அதை நிறைய போட்டோ ஸ்டெப் காப்பி எடுத்தாச்சு. கூடவே அதுமேல கவனமாக இருக்கார் ஓர் ஆபீஸர். நீங்க கவலைப்படாதீங்க. அவங்க என்ன செய்யறாங்கன்னு பார்க்கணும். அதுக்காக தான் இந்த விட்டுப் பிடிக்கற போக்கே... ஆனா அவங்களுக்கு அது தெரிஞ்சுடக் கூடாது."

"நானும் சாவு காரியத்துக்காக விட்டு வெச்சிருக்கிறதா தான் சொல்லியிருக்கேன். ரொம்ப தடுமாற்றமா இருக்காங்க. அனேகமா கணேசன்கற நபர் அப்ரூவர் ஆயிடுவான்னு தோணுது."

"ஆனா நல்லது... இப்ப என்ன நடக்குதுன்னு கவனமா இருங்க. ஆனா ஒண்ணு யாரோட உயிருக்கும் எந்த ஆபத்தும் வந்துடக்கூடாது. வெளியே இருந்தும் சரி, உள்ள இருந்தும் சரி."

"கவனமாத்தான் சார் இருக்கோம்."

"அந்தப் பாம்பை நல்லா தேடிட்டீங்களா?"

''வீட்டையே பொட்டி போட்டுட்டோம். அது ஓடிப் போச்சு.''

''ஓ.கே.. பீ கேர் ஃபுல்.'' அவர்கள் பேச்சு முடிந்து போனது. வீட்டு புழக்கடையில் நெல்லி மரத்தடியில் நின்றபடி அந்த CBCID போலீஸ்காரர் பேசினதை கணேசன் பார்த்தபடி இருந்தான். அவன், அவரை நோக்கிச் சென்று ஏதோ கேட்க வாயெடுத்த அதேசமயம் வீட்டினுள் ஒரு ஹாலில் போலீஸ்காரர் அந்த CBCID போலீசைப் பார்த்த படியே சிவசுவை அணுகி.

''சார், நான் எம்.எல்.ஏ. பன்னீர்வரதன் ஆள். சார், உங்களை தைரியமா இருக்கச் சொன்னார். எதையும் சொல்லிட வேண்டாமாம். எவிடென்ஸை அழிக்க எல்லா ஏற்பாட்டையும் அவர் செஞ்சுருக்காராம்..''

சொன்ன வேகத்தோடு நகர்ந்து கொண்டார். சிவசு வுக்குள் ஒரு புதிய தெம்பு. சொடுக்கெடுத்தாற் போல நிமிர ஆரம்பித்தது. புது உற்சாகத்தோடு நிமிர்ந்தவனை நோக்கி வந்தாள் ராஜமக்கா.

''சிவா.. என்னடா பண்ணப்போறோம். திரிபு அத்தை அனத்தி எடுத்திண்டுருக்காடா...'' என்றாள்.

''பொறுக்கா... இனி பிரச்சினை இல்ல. ஒரு பக்கம் காட்டுப்புத்தூர் மாமா, மறுபக்கம் நம்ம எம்.எல்.ஏ.ன்னு இரண்டுபேர் நம்பளை எல்லாம் காப்பாத்தப் போறா.. நீ கவலையே படாதே.'' என்றான் புதுவித தெம்போடு. அப்படியே நிமிர்ந்து பார்த்தவன் அந்த CBCID போலீசிடம் வழிந்து கொண்டிருந்த கணேசனைப் பார்த்துவிட்டு ஓடி னான்.

''கணேசா.. என்ன பண்ணிண்டிருக்கே. நாம ஒரு தப்பும் பண்ணல. எதையாவது உளறி வைக்காதே...''

என்றபடியே கணேசனை நெருங்கி, அவன் வாய்க்குப் பூட்டுப்போட்டு விட்டு, அந்தப் போலீஸைப் பார்க்க, அவர் முகத்தில் மந்தமாய் ஒரு சிரிப்பு.

நடுவில் அவர் வயர்லெஸ் கடுகுதாளிக்க காதைக் கொடுத்தபோது முகம் மாறிப்போனது. சிவசுவும், கணேசனும் கூட அதை கவனித்தனர். காது கொடுத்தனர். அவர்கள் முகமும்கூட குத்துப்பட்ட மாதிரி மாறிபோனது.

'மேட்டூர் மாதேஸ்வரன் மலைக்காட்டுல வீரநரசிம்மனை புலி அடிச்சி கொன்னுட்டதா தகவல் வந்துருக்கு - ஓவர்.' என்று காதில் பாய்ந்த அந்தச் சேதி அவர்களை நிலைகுலையச் செய்த அதேசமயம் அறையில் காட்டுப் புத்தூரார் காதில், 'உஷ்.. உஷ்..' என்று மகா மெல்லிசான ஒரு சப்தம் கேட்டு, அவரது ஜெபத்திற்கு நடுவே கிலி மூட்டத் தொடங்கியிருந்தது.

இருண்ட அறையில் எழுந்திருந்து விளக்கை போட்டு விட்டு நாலாபுறமும் பார்த்தார். சற்றே மூடிய ஜன்னல் வழியாகப் பார்க்கும் போலீஸ்காரரும் ஒரு மாதிரி பார்த்தார். காட்டுப்புத்தூரார் எதையும் காணாதவராக சற்றே தெம்போடு அந்த மாம்பலகை மேல் வந்து திரும்ப அமர்ந்து கால்களைச் சப்பணமிட்டார். ஊடே பலகைக்கு கீழே இருந்து தலையை பக்கவாட்டில் காட்டியபடி வெளிப் படத் தொடங்கியது அந்தக் கருநாகம்!

★ ★ ★

*பரமேஸ்வரன் குடும்பத்திற்கு சூன்யம் வைப்பதும், எரிகின்ற வைக்கோல் போரில் கைவிடுவதும் ஒன்று. அவன் குடும்ப வம்சா வழியில் கர்ம கடன் பாக்கியே இல்லை. பித்ரு கர்மாக்களை குறைவாச் செய்பவர் குடும்பங் களில் வினைத் திட்பங்கள் வலுவில்லாமல் இருக்கும். எனவே, இதில் ஈடுபடும்போது எச்ச ரிக்கை மிக அவசியம். பரமேஸ்வரன் இறந்து விட்ட பிறகு அவனுக்கான காரியங்களில் குறை நேர்கிற மாதிரியும் பார்த்துக் கொள்ள வேண் டும். அப்பொழுதுதான் திட்டமிட்டபடி செயல் பட முடியும். இல்லாவிட்டால் நாம் கூண்டோடு அழிந்துவிட வேண்டி வரும். எச்சரிக்கை!*

- கணியனுக்கு எழுதிய கடிதத்தில்
காட்டுப்புத்தூரார்

காட்டுப்புத்தூரார் கண்களை மூடியபடி மந்திர உச்சா டனத்தில் இருந்தார். வெளியே ஊர்ந்து வந்த அந்த கறுப்பு சர்ப்பம் அவரைப் பார்த்தபடியே படம் எடுக்க நிமிர்ந்த போதே சரேலென்று உள்ளே நுழைந்தான் கணேசன்.

அடுத்த நொடியே அந்த இருள் பூசின அறையில் அந்த சர்ப்பமும் மின்னல் வேகத்தில் எங்கோ போய் ஒளிந்து கொண்டது. கணேசன் அதை உணராமல் காட்டுப் புத்தூரார் எதிரில் மண்டியிட்டான்.

''மாமா...'' என்றான் கேவலாக.. அவர் நிதானமாக கண்களைத் திறந்தார். புருவம் மட்டும் வளைந்து என்ன என்ற கேள்வியைக் கேட்டது.

''வீருவும் போயிட்டான். இப்பதான் தகவல் வந்தது. பயமா இருக்கு மாமா...''

அவன் விசும்பலைத் தொடர்ந்து கதவுப் பக்கமாக எட்டிப் பார்த்தார் அந்த CBCID அதிகாரி.

''எங்களை கொஞ்சம் தனியா பேச விடறேளா?'' கணேசனின் சப்தம் அவரை முறைக்கச் செய்தது. சிவசுவும் உள்ளே வந்தான்.

ராஜமக்காவும் திரிபு அத்தையும் வெளியே வாய் விட்டு அழுவதும் கூடகேட்டது.

அந்த CBCID போலீஸ்காரர் சற்று விலகிக் கொண்டாலும் ஜன்னல் துவாரம் வழியாக இன்னொரு போலீஸ்காரரின் பார்வை காட்டுப்புத்தூரார் மேலேயே இருந்தது.

''என்னடா சிவசு... நரசிம்மன் பூட்டானா...? நிஜமா?''

''அப்படித்தான் வயர்லெஸ்ல தகவல் வந்தது மாமா.. என்னால நம்ப முடியல..''

''எப்படிடா... எப்படி?''

''புலி அடிச்சுருக்காம் மாமா. இனியும் பொறுத்தா நாம மந்திர சாஸ்திரம் தெரிஞ்சவாங்கறதுக்கே அர்த்தம் இல்லாம போயிடும். ரொம்ப பயமா இருக்கு மாமா. எதானா பண்ணுங்கோ.. எம்.எல்.ஏ., எவிடென்ஸை எல்லாம் அழிக்க வழி பண்றதா சொல்லிவிட்டிருக்கார்... நாம தற்காலிகமா தப்பிச்சா கூட போதும்..'' அடுத்த நொடி டப்பா போல் ஒன்று அவர் வசப்பட்டது. அதிலிருந்து சந்தன வண்ணத்தில்

ஒரு பொடி அவரது உள்ளங்கையில் விழுந்து தேங்கியது. அதேசமயம் வெளியில்..

அந்த CBCID போலீசின் வயர்லெஸ் வழியாக எஸ்.பி. சம்பந்தம் பேசியபடி இருந்தார்.

"சார் இங்க அந்த காட்டுப்புத்தூர்கார ஆள் ஏதோ திட்டம் பண்றா மாதிரி தெரியுது. வீரநரசிம்மன் இறந்துட்ட சேதியை சொன்னேன். ரொம்ப மிரண்டுட்டாங்க..."

"எது எப்படி இருந்தாலும் ஒரு மணிக்கு அவங்களை அரெஸ்ட் பண்ணி அந்த வீட்டை சீல் வெச்சுடுங்க. லாக் அப்லையும் தனித் தனியா போட்டுடுங்க."

எஸ்.பி. பேசி முடிக்க அந்த CBCID திரும்ப எதிரில் இமைக்க மறந்த விழிகளோடு காட்டுப்புத்தூரார்.

"என்ன சாமி.. எங்க வந்தீங்க இங்க...?"

அடுத்த நொடி காட்டுத்தூரார் கையை உயர்த்திய நிலையில் வாயால் ஊத அந்த சந்தன பௌடர் காற்றில் பறந்து அவர் மூக்கில் ஏறத் தொடங்கியது.

சுதாரிக்க இடமின்றி சுருண்டு விழ ஆரம்பித்தார் அந்த போலீஸ்காரர். காட்டுப்புத்தூர் ஆவேசமாக..

"மத்த போலீஸ்காரல்லாம் எங்க?" என்று கேட்டபடி திரும்பவும், ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டிருந்தவன் ஓடி வந்தான். அடுத்த நொடி அவன் மூக்கிலும் அந்தப் பொடி பறந்து சென்று உள் ஏறியது.

உடம்பு சுருண்டு விழத் தொடங்கியது. இப்படியே மொச்சம் உள்ள மூவரையும் கூட வீழ்த்தி விட்டு வெளியே பார்த்தபோது வாடகை போலீஸ் வேன் தென்பட்டது.

காட்டுப்புத்தூரார் கத்தினார்.

"சிவசு... நீ வேன் ஓட்டுவே தானே?"

"தாராளமா..."

"அப்ப எல்லாரும் கிளம்புங்கோ... இவா எழுந்திருக்க எப்படியும் இனி மூணு மணி நேரமாயிடும். அதுக்குள்ற நாம கொல்லி மலைக்கு போயிடுவோம். இனி அங்கதான் நமக்கு ஜாகை. போய் எதை எதை எடுத்துக்கணுமோ அதை எல்லாம் எடுத்துக்குங்கோ."

அடுத்த நொடி அவர்கள் எந்திரம் போல வேகமாக செயல்படத் தொடங்க ராஜமாக்காவும், திரிபுவும் ஊருக்கு முன்பு போய் வேனில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

பரமேஸ்வரன் வீட்டு முன் அந்த ஆட்டோ நின்றது. இறங்குகிறாள் ஜானகி. கூடவே ரேவதி, லக்ஷ்மி. வாசலில் நின்று வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான் ஸ்ரீதரன். எதிரில் பேப்பரை படித்தபடி நிமிர்ந்தார் ரங்கராஜன்.

"சார்ர்ர்..." உற்சாகமாக குரலெடுத்தாள் லக்ஷ்மி.

"வாம்மா.." என்று நெருங்கி வந்து, அழைத்துச் சென்று படுக்கையில் உட்கார்த்தி வைத்தாள் மாதங்கி. பரபரப்பு ஆவேசம். ஒருவித அலைபாய்ச்சல் எதுவுமே அவளிடம் இல்லை. ஆச்சரியமாக இருந்தது.

"என்ன மாதங்கி... உன்னை பார்க்க ரொம்ப ஆச்சரியமாக் இருக்கே." என்றபடி, அவளை ஏறிட்ட அம்மாவை அவள் சற்று ஊன்றிப் பார்த்துவிட்டு கொஞ்சமாக சிரித்தாள்.

வீட்டுக்குள் ஊதுவத்தியின் கமகமப்பு. கூடவே ரோஜாப்பூக்களின் வாசச் சேர்ப்பு... பரமேஸ்வரனின் படத்திற்கு மாலையிடப்பட்டு நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்க முன்னால் அவரது டயரி மற்றும் அவருக்கு மிக ஆசையான

உணவுப் பொருள்களாய் திரட்டிப்பால், மலை வாழைப் பழம், வெற்றிலைச்சீவல்.. எல்லாம்! ஜானகியின் பார்வை அதைப் பார்த்துவிட்டு கலங்கிப் போனது.

"விளையாட்டு போல அவர் போய் பதிமூணு நாளும் ஓடிப் போச்சு. நானும் போயிருந்தா நன்னாயிருக்கும். உங்களுக்காக அவர் என்னை வரவேண்டாம்னுட்டார் போலருக்கு.." என்று ஜானகி கண்ணீரை சிதற விட்டுக் கொள்ள ரங்கராஜன் பதில் சொன்னார்.

"நான் இங்க புறப்பட்டு வரும்போது இருந்த நிலை வேற ஆனா இப்ப இருக்கற நிலை வேறம்மா. வாழ்க்கைல அனுபவ ஞானம்தாம்மா எப்பவும் ரொம்ப பெரிசு. நான் அதுக்குள்ளாகியிருக்கேன்.

சில விஷயங்கள் நினைச்சா கனவா நனவான்னு இந்த க்ஷணம் சந்தேகம் எழும்பறது. எது எப்படி இருந்தாலும் நீங்கள்லாம் ஒரு வகைல ரொம்ப கொடுத்து வெச்சவங்க. ஒரு குடும்ப பாசம் ஒரு மனுஷரை இறந்தும் இறவாதவரா வெச்சிருக்கு.. இறப்புக்குப்பிறகு மனித உயிருக்கு ஏற்படற பரிமாணங்கள் பற்றி கற்பனைகளும் கட்டுக்கதைகளும் தான் இருக்கறதா நினைச்சிருந்தேன். ஆனா மிஸ்டர் பரமேஸ்வரனே என் மேல வந்து செயல்பட்டப்போ என் விஞ்ஞான கண்ணோட்டமும் அபிப்ராயங்களும் தவிடு பொடியாயிடிச்சு.

நீங்க இனி துளிகூட கவலைப்பட வேண்டாம்.

மிஸ்டர் பரமேஸ்வரய்யர் உங்க வரைல கடவுளா உங்களுக்கு காவல் இருக்கார்." ரங்கராஜனின் உணர்ச்சி வசப்பாடு ஜானகியை பிழிந்தது. பார்வை கணவரின் புகைப்படம் பக்கம் திரும்பியது.

''இன்னொரு சந்தோஷமான விஷயம். கேஸ் உங்களுக்கு தீர்ப்பாயாச்சு. அந்த வீரநரசிம்மன் குடும்பத்தையே ஒட்டுமொத்தமா உள்ற தூக்கிப் போடப் போறாங்க. இருந்தாலும் அதைத் தாண்டி ஓர் அதிசயம் நடக்கும்னு நான் எதிர்பார்க்கிறேன். அதான் ஊருக்கு கிளம்பின நான் நின்னுட்டேன்.''

''அவங்கள உள்ற தூக்கிப் போடறதே ஓர் அதிசயம் தானே? அதுக்கும் மேல் ஓர் அதிசயமா என்ன அது?'' லக்ஷ்மி கேட்டாள்.

''தெரியல.. நீங்கள்லாம் பரமேஸ்வரய்யர்கிட்டையே கேளுங்கோ. அவர் சொன்னதை வெச்சுதான் நான் சொல்றேன்.'' என்றார் ரங்கராஜன். நடுவில் சிணுங்கிய தொலைபேசியில் எஸ்.பி. சம்பந்தம் பேசினார். பேச்சில் எல்லையில்லாத பதட்டம்.

''மிஸ்டர் ரங்கராஜன். நீங்க எச்சரிக்கை பண்ணியும் நான் மோசம் போயிட்டேன். அந்த ஃபேமலில இறந்துட்ட பாகீரதி, வீரநரசிம்மன் தவிர அவ்வளவு பேரும் தப்பிட்டாங்க. எந்த சென்ஸ்ல நீங்க சொன்னீங்கன்னு தெரியணும். கொஞ்சம் ஆபீஸ் வர்றீங்களா?''

திடுக்கிட்டுப் போனார் ரங்கராஜன்.

''வரேன் சார்.. ஓர் அரை மணில வரேன். ஆனா ஒரு விஷயம். அவங்க யார் கிட்டேருந்து வேணா தப்பலாம். பரமேஸ்வரய்யர்கிட்ட இருந்து தப்பிக்க முடியாது. நீங்க கவலைப்படாதீங்க...'' ரிசீவரை வைப்பவர் திரும்பினார். மாதங்கி அவரோடு கிளம்ப தயாராய் இருந்தாள்.

''நீயும் வரியா மாதங்கி...?''

''ஆமாம் சார்... என் வேலை இன்னும் முழுசா முடிஞ்சுடலை.''

''சரி கிளம்பு..'' அவர்கள் பாய்ச்சலெடுத்து காரை நெருங்கினர். அது எஸ்.பி. ஆபீஸ் நோக்கி ஓடத் தொடங்கியது.

★ ★ ★

# 30

*நான் மிக உண்மையானவன் சமண சன்யாசி போல் ஓர் ஈ, எறும்புக்கு கூட துன்பம் தராதபடி வாழ்ந்ததாக நம்புகிறேன். எனக்கு நேரிட்ட துன்பங்கள் என் முற்பிறப்பின் வினைகளாக இருக்கலாம்.*

*இந்தப் பிறப்புல எனக்கு என்ன ஆனாலும் சரி, என் குடும்பம் விளங்க வேண்டும். அதற்கான வல்லமையை நான் இறந்துவிட்டாலும் அந்த இறைவன் தரவேண்டும். தந்தால்தான் அவன் இறைவன். நான் ஆசைப்பட்டது போல நடந்தால்தான் அவனிடம் கருணை இருப்பது நிதர்சனமாகும்.*

- பரமேஸ்வரனின் டைரியிலிருந்து..

கொல்லிமலை அடிவாரச் சருக்கத்தில் முதல் வளைவில் திரும்பிக் கொண்டிருந்தது, சிவசு ஓட்டிக் கொண்டிருந்த அந்த ஸ்டாண்டர்டு மோட்டார் வேன்

''மாமா மலையில் எங்க போறோம்?'' கணேசன் காட்டுப்புத்தூராரைப் பார்த்து கேட்க. ''அவர் இந்த மலைல தான் எத்தனையோ மாய சன்யாசிகள் இருக்கா. அதுல கொண்டைய்யாங்கறவன் எனக்கு நல்ல பழக்கம் அருவிக்கரைக்கு தெற்க இருக்கான். அறப்பளீஸ்வரர் கோயில் வரைக்கும் நீ வண்டியை விடு. அப்புறமா நடைதான்'' என்றார்.

திகிடு தம்பான மலையின் ஒடுக்கமான வளை வில் பேரிரைச்சலுடன் மேலேறும் வேனுக்கு வெளியில் மலையின் அடர்ந்த விரிவு. பக்கவாட்டில் விழுந்தால் நம்மை பொட்டலம் கட்டிவிடலாம். அப்படி ஒரு சரிவு. சிவசு புஜபலத்தோடு ஸ்டியரிங்கை வளைத்தும் ஒடித்தும் திருப்பிக் கொண்டிருந்தான். அப்போதுதான் ஓர் அதிசயம் போல அவன் கால்மாட்டில் படம் எடுத்தபடி நிமிர்ந்து கொண்டிருந்தது அந்த கருநாகம்! 'உஷ்..ஷ்' என்று சீறி 'பொடேர்' என்று சிவசு காலில் போட்டது.

அந்த நொடிப்பொழுதுதான் அத்தனை பேருக்குமான மரணவாசல் கதவுகளைத் திறக்க ஆரம்பிக்கின்றன. அந்த வேன் 'சிவசு'வின் கட்டுப்பாட்டை விட்டு விலகி, மலைத் தலத்தின் பக்கவாட்டுச் சரிவில் உருண்டு பிரள ஆரம்பிக் கிறது.

★

செய்தியறிந்து போலீஸ் வந்து பார்த்தபோது ஆளா ளுக்கு மூலைக்கு மூலை கிடந்தார்கள். சின்னாபின்னா மாக நொறுங்கி நசிந்து போயிருந்தார்கள்.

ஒரு பாறை மேல் நின்று சகலத்தையும் பார்த்துக் கொண்டிருந்த சம்பந்தத்துக்கு எல்லாமே படுவியப்பாக இருந்தது. ரங்கராஜன் எச்சரித்து. பின் அவர்கள் தப்ப முடியாது என்றது வரை எண்ணங்கள் ஓடி நிற்கின்றன.

எண்ணமானது மாதங்கியையும், ரங்கராஜனையும் பற்றியே தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தபோது ரங்க ராஜனும், மாதங்கியும் அங்கே பிரவேசித்திருந்தனர்!

சம்பந்தம் இருவரையும் பார்த்துவிட்டு நெருங்கினார்.

"வாங்க ரங்கராஜன்..."

"என்னாச்சு எஸ்.பி. சார்... எதாவது தகவல் தெரியுமா?"

"எதுவும் தெரியாது. வந்து பார்த்த பிறகுதான் செத்துட்ட நபர்கள் அவ்வளவு பேரும் வீரநரசிம்மன் ஃபேமிலிங்கறதே தெரியும். எங்க கண்ணைக் கட்டிட்டு அவங்க தப்பிச்சது தான் மிராகிள்ன்னா இப்படி அவங்க செத்துக் கிடக்கறதும் அப்படிதான் இருக்கு.

சட்டத்துக்கு சின்ன வேலை கூட வைக்கலை. யாருடைய சாமர்த்தியமும் எங்கேயும் பலிக்கலை. புதிர்... பெரிய புதிர்... நீங்க சொன்ன மாதிரி பரமேஸ்வரனே பாத்துகிட்டாரா?"

"அப்படித்தான் எஸ்.பி.சார் எடுத்துக்கணும். வேற எப்படி சொன்னாலும் நான் ஒரு பெரிய உண்மைக்கு எதிரா பேசினவன் ஆவேன்."

"நீங்களே சொல்லும்போது என்னாலையும் நம்பாம இருக்க முடியல ரங்கராஜன். ஆனா ஒரு சந்தேகம்."

"என்ன?"

"இந்த மாதிரி தர்மபரிபாலனம்லாம் அபூர்வமா அத்தி பூத்த மாதிரி தான் நடக்குது. எவ்வளவோ பேர் அநியாயமா கொலை செய்யப்படறாங்க. செய்தவங்களும் சட்டத் துக்கிட்ட இருந்து. தப்பிச்சுடறாங்க அங்கேயெல்லாம் செத்துட்ட பரமேஸ்வரன் மாதிரி ஏன் எல்லா ஆத்மாக் களும் நடந்துக்கறதில்லை?'

எஸ்.பி.யின் கேள்வியைத் தொடர்ந்து ரங்கராஜன் பார்வை மாதங்கி பக்கம் திரும்பியது. அவள் எதையும் காதில் வாங்காதது போல், ஸ்ட்ரெச்சரில் ஏற்றப்பட்டு வேனை நோக்கி நகர்ந்தபடி உள்ள பிணங்களைத்தான் பார்த்தபடி இருந்தாள். அவ்வளவு பேரும் பங்காளிகள். பின்பு பகையாளிகள். பலரது இரத்தத்தை உறிஞ்சிக்

குடித்தவர்கள். இன்று அதே இரத்தம் அவர்களை உருட்டிப் பிசைந்து பிண்டக் கொடூரங்களாக்கிவிட்டது.

''மாதங்கி..''

''சார்...''

''எஸ்.பி. சார் கேட்டது காதுல விழுந்ததா?''

''உம்..''

''என்ன பதில் சொல்லப் போறே?''

''செத்துட்டவங்களை பிரிஞ்சுட்டதாகவும், அவங்க அத்தியாயம் முடிஞ்சுட்டதாகவும் நினைச்சா இறந்துட்டவங்களும் அப்படித்தான் நினைப்பாங்களோ என்னவோ? என் வரைல என்னால் அப்படி நினைச்சே பார்க்க முடியல. எங்கப்பாவாலையும் அந்த விதிப்பாட்டை ஒத்துக்க முடியல. அதான் அவர் இறந்த பிறகும் அவரது வழிகாட்டால் தொடர்ந்திருக்கு...

இப்ப... இங்ககூட அவர் இருக்கலாம்.

இந்தக் காட்சிகளை பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விட்டுகிட்டிருக்கலாம்.''

மாதங்கி அசைக்க முடியாத நம்பிக்கையோடு சொன்னது வீண்போகாத மாதிரி 'உஷ்...!' என்கிற சப்தம் காதோரம் கேட்டது. சப்தம் வந்த திக்குக்கு பார்வை திரும்பிய போது அருகாமை ஆவாரம் புதரில் படமெடுத்த நிலையில் அந்த கருநாகம்!

அதைப் பார்த்த மறுநொடி மாதங்கியும் சரி ரங்கராஜனும் சரி புல்லரிப்பின் உச்சரிப்புக்கு போக, சம்பந்தம் அதைப் பார்த்துவிட்டு தவறாகப் புரிந்து கொண்டு துப்பாக்கியை எடுத்து அதை நோக்கி சுடப் போனார். ரங்கராஜன் எகிறிக் கையைப் பிடித்தார்.

''நோ சார்... அது பாம்பு மட்டுமல்ல பரமேஸ்வர னோட ஆயுதம் அது...''

சம்பந்தம் அதைக் கேட்டு வியந்து திரும்புவதற்குள் அந்த வித்தைக்கார நாகம் எங்கோ ஓடி ஒளிந்திருந்தது. மாதங்கியின் கண்களிலும் ஈரம் பாய் விரித்து முடித்திருந்தது.

வீட்டுக்கு திரும்பியபோது அதிசயமாக திற்பரப்பு சாமியார் வந்திருந்தார். மிரட்டும் ஜடாமுடி, காவிச்சட்டை, பட்டை கொட்டை என்று எந்த டாம்பீக அடையாளங்களும் இல்லை.

வெள்ளை நிறத்தில் வேட்டி ஜிப்பா, கொக்கு பறக்கும் தலைமுடியோடு தடவிப் பார்க்கத் தூண்டும் தாகூர் தாடியுமாய் கண்ணிரண்டும் சுடர் விளக்காட்டம் தெரிய எதிர்ப்பட்டார். அவரைப் பார்த்த க்ஷணம் கோடி கோடி மனிதர்களில் நிச்சயமாகவும், சத்தியமாகவும் ஒரு தனித்த மனிதரைப் பார்க்கிறோம் என்றுதான் மாதங்கிக்கும், ரங்கராஜனுக்கும் தோன்றியது.

''இவர்தாம்மா உன் அப்பா அடிக்கடி குறிப்பிடற திற்பரப்பு சாமியார்..'' ஜானகி அறிமுகம் செய்து வைத்தாள். மாதங்கி தயக்கமின்றி கை கூப்பினாள். ரங்கராஜனும்...

''இந்த உலகம் தோன்றின நாள்ல இருந்தே இந்த மாதிரி எல்லாம் நடந்துகிட்டுதான் இருக்கு. நமக்கு அது எப்படி தெரிய வருதுங்கறதுலதான் எல்லாமே இருக்கு. விதிக்கும் மதிக்கும் இறைவன் சரிசமமா சந்தர்ப்பம் தரான். ஆனா நமக்கு தெரியறது இல்ல. தெரிய வந்த உங்களுக்கெல்லாம் கூட எல்லாமே தனிப்பட்ட அனுபவம்தான். ஊர் கூட்டி இதை நிரூபிக்கவோ, புரிய வைக்கவோ முடியாது.

நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அது கூடவும் கூடாது.''

திற்பரப்பார் விளக்குவதுபோல் விளக்கி இறுதியாக ஒரு புதிரும் போட்டார்.

''கூடாதா?'' மாதங்கி அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''ஆமாம். ஒரு வட்டம் போட்டு முடிச்சபின்னே அதுல எது ஆரம்பம். எது முடிவுன்னு சொல்ல முடியுமா?''

''நோ.. இது தப்பான கேள்வி. வட்டம் போடணும்னா ஓர் இடத்துல தொடங்கி, தொடங்கின இடத்துல முடிக்கணும் இனிக் கேக்கறதே அபத்தம். கேட்டா போட்டுப்பாரு தெரியும்கறது தான் சரியான பதில்.''

மாதங்கியின் விளக்கம் கேட்டு திற்பரப்பார் சிரித்தார்.

''எப்படியோ... சில ஆரம்பங்களையும், சில முடிவுகளையும் தெரிஞ்சுக்க அதை அவங்களே செய்து அனுபவிச்சாதான்னு சொல்லாம சொல்லிட்டே..''

ரங்கராஜன் உடனே புரிந்து கொண்டார் அந்த பதிலை.

''நான் புரிஞ்சுகிட்டேன். பல புதிர்களுக்கும் விடை அனுபவிக்கறவங்க கிட்டதான் இருக்குங்கறீங்க. அனுபவிக்காத வரை அது இல்லை. மேல் நாட்டுல ஒரு பெட்டிக்குள் பூனையை விட்டு அதுக்கு பாலையும் வெச்சு மூடிட்டு அது இப்ப உள்ள உயிரோட இருக்கா இல்ல செத்துப் போச்சான்னு கேப்பாங்க. திறந்து பார்த்தா தான் உண்மை தெரியும். ஏன்னா அது உயிரோடும் இருக்கலாம். இறந்தும் போயிருக்கலாம். இந்த தியரி அறிஞர்கள் நடுவுல இன்னு வரை ஒரு விவாதப் பொருள்..''

''அப்படித்தான் பரமேஸ்வரன் உங்க குடும்பத்துக்கு

காவலா இருக்கறதும், அதனால இனி நீங்க சௌக்யமா வாழப் போறதும்.."

சாமியாரின் கருத்துக்கு திரும்பவும் ஏதோ ஒரு பதிலைச் சொல்ல அல்லது கேள்வி கேட்க வாயெடுத்தாள் மாதங்கி.

ரங்கராஜன் தடுத்தார்.

"மாதங்கி.. எதுவும் பேசாதே. உனக்குள்ள பேசு. உனக்குள்ள கேள்வி கேட்டுக்கோ. இப்ப இவரை வணங்கு.." சொல்லிவிட்டு ரங்கராஜன் அவர் காலில் விழுந்தார். மாதங்கியும் சற்று மென்று விழுங்கிவிட்டு விழுந்தாள். ஒதுங்கி நின்று கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

"வாப்பா இரண்டு பேரும் சேர்ந்து விழுங்க.." என்றார். அந்த வித்தக மனிதர். நெருங்கி வந்து அவனும் அவளோடு சேர்ந்து விழுந்து எழுந்தான்.

"மாதங்கி.. நீ ஸ்ரீதரனை கல்யாணம் பண்ணிக் கணும்னு உங்கப்பா ரொம்ப ஆசைப்பட்டார். அதை நிறை வேத்துவியா?"

மிக மிக இதமான குரலில் கேட்டார். மாதங்கி மறுநொடி திரும்பினாள். பரமேஸ்வரனின் படம் தெரிந்தது. மாலையிடப்பட்டு விளக்கெரியத் தெரிந்த அது இருவரை யும் ஆசீர்வதிக்க ஆசைப்படுவது போலவும் தெரிந்தது. நெருங்கினாள். அந்த மாலையைக் கழற்றி எறிந்தாள். விளக்கையும் ஊதி அணைத்தாள்.

"அப்பா... நீங்க என் வரைல சாகலை. இதெல்லாம் செத்தவங்களுக்கு. உங்களுக்கு வேண்டாமப்பா. உங்க ஆசையை விட எனக்கு எதுவுமே பெரிசில்லப்பா.."

சொல்லும்போதே தொண்டை அடைத்துக் கொண் டது. கண்களில் கண்ணீர் பீறிட்டது. ஸ்ரீதரன் தோளைத் தொட்டான். கண்ணீரையும் துடைத்தான். திரும்பினான்.

"இப்ப எங்க கல்யாணத்தவிடவும் லக்ஷ்மி, ரேவதி கல்யாணம் தான் எங்களுக்கு முக்கியம். அதுக்கு வழிய பாத்துட்டு.." அவன் முடிக்குமுன் ரங்கராஜன் கைகளை உயர்த்தி, அவன் பேச்சை நிறுத்தச் சொன்னவர், "எனக்கு இரண்டு பசங்க.. இவங்க இரண்டு பேருக்கும் பொருத் தமா இருப்பாங்கன்னு எனக்கு படுது. உங்களுக்கு ஆட் சேபணை இல்லையே?"

அவர்கள் தங்கள் சம்மதத்தை அவர் காலில் விழுந்து நமஸ்கரிப்பதன் மூலம் சொன்னார்கள்.

ஜானகி நெஞ்சு குளிர்ந்து போனாள்...

அடுத்த பத்தாவது நிமிடம் அனைவரும் டாடா காட்ட ஸ்ரீதரன் மட்டும் சற்று அந்த மீறலுடன் மாதங்கிக்கு ஒரு முத்தமே தந்துவிட்ட நிலையில் அவர்களைச் சுமந்து அந்த கார் புறப்பட்டது.

நாள் :

காருக்குள்... "மாதங்கி வரப்போற தீபாவளி இஷ்யூல இருந்து இந்த அனுபவங்களை எல்லாம் நீ கதையாவோ, கட்டுரையாவோ எழுதணும். நல்ல தலைப்பை இப்பவே சொல்லேன்.." அவள் உடனே உதட்டின் மீது ஆட்காட்டி விரலை வைத்து 'உஷ்!' என்றாள்!